Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර් செப். 29- ஒக். 05, 2002

ரூபா 14/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMU... NATIONAL TAMIL WEEKLY முரசு 479



க்ரைம் ஸ்டோரி

## பேச்சுவார்த்தையின் இலாப நட்டக் கணக்கு!





## ஐ.சி.சி. கிண்ணம் யாருக்கு?



இந்தியக் கிரிக்கெட் ஸ்பெஷல் ரிபோட்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு


## விபீஷணர் கொடுத்த பொருள்

கடவுள் நம்பிக்கை அளவில்லா ஆற்றல் மிக்கது. ஒருவனுக்கு இலங்கையிலிருந்து கடலைத் தாண்டி இந்தியாவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. அவனைப் பார்த்து விபீஷணர், "இதோ பார், இந்தப் பொருளை உன் ஆடையில் நன்றாக முடிந்து கொள் கடலைத் தாண்டி விடலாம். ஆனால் திறந்து பார்க்காதே." என்றார்.

அந்த மனிதன் ஆடையில் விபீஷணர் கொடுத்த பொருளை முடிந்து கொண்டான். கடல் மேல் நடக்கத் தொடங்கினான். ஆனால் கொஞ்சத் தூரம் வந்ததும் விபீஷணர் கொடுத்த பொருளை என்ன என்று பார்க்க எண்ணினான். அது ஓர் ஓலைச் சுருள். அதில் ராம நாமம் எழுதப்பட்டிருந்தது. ஓலைச் சுருளைத் திறந்து பார்த்ததும் 'ப்பூ இவ்வளவுதானா' என நினைத்தான். நம்பிக்கை இழந்தான். கடலில் மூழ்கிவிட்டான். இறை நம்பிக்கை இழந்ததால் ஏற்பட்ட கதி இது.

சிவஸ்ரீ அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.

# ஆன்மீகம்



## தேவனோடு ஒப்புரவாகுங்கள்

11 கொரிந்தியர் 5;20

ஆண்டவரிடத்திலிருந்து நாம் அற்புதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், ஆண்டவரோடு நம்முடைய ஐக்கியம் சரியாயிருக்க வேண்டும். ஆண்டவரோடு நம்முடைய உறவு சரியில்லாவிட்டால் அவரிடத்தில் எந்த ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது.

நமக்கும் ஆண்டவருக்கும் உள்ள உறவைத் தடுக்கக் கூடிய காரியம் என்ன?

"இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.

உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகின்றது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

(ஏசா 59; 1,2)

நாம் பாவத்தில் சீவிக்கிறவர்களானால் தேவனுக்குச் சத்துருக்கள்.தேவனுக்குச் சத்துருக்களாய் இருக்கிற நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்கும்படி இயேசு கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தினார்.

(ரோமர் 5;10)

பாவத்திலே அவருடைய சத்துருக்களாயிருந்த நாம் இயேசு கிறிஸ்துவின் மூலம் அவருடைய பிள்ளைகளாய் மாறுகிறோம். அவருடைய பிள்ளைகளாய் மாறிவிட்டால் நாம் கேட்கிற அனைத்தும் நம்முடைய தகப்பன் நமக்குத் தருவார். ஆமென்.

சகோ.டி.யேசுராஜா, ஹட்டன்.

## ஸலம் கூறுங்கள்

மக்களிடையே பரஸ்பரம் நல்லுறவும், சமாதானமும் நிலவுவதற்கு இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள வழிமுறைகளில் ஒன்றுதான் ஒருவரையொருவர் சந்திக்கும் போது ஸலாம் கூறுவதாகும்.

ஸலாம் என்பது ஓர் அரபுச் சொல்லாகும். அஸ்-ஸலாம் என்பது அல்லாஹ்வைக் குறிக்கும் திருநாமங்களில் ஒன்றாகும். அமைதியானவன் என்பது அதன் பொருள்.


எவராலும் உங்களுக்கு ஸலாம் கூறப்பெற்றால் அதற்குப் பதிலாக அதைவிட அழகான வாக்கியத்தைக் கூறுங்கள். அல்லது அதனையே திருப்பிக் கூறுங்கள். அல் குர்ஆன் 4;86

திர்க்குர் ஆனின் இப் போதனை ஒருவரையொருவர் சந்திக்கும் போது ஒருவர் மற்றவர் நலனுக்காக அல்லாஹ் விடத்தில் பிரார்த்திக்குமாறு கூறுகிறது.

இஸ்லாம் இயம்பும் ஸலாம் கூறும் முறை சமுதாய வாழ்வு சிறப்படைவதற்கும் உலகில் சாந்தி நிலை பெறுவதற்கும் உதவுகிறது.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.476



பரிசுக்குரிய கவிதை

### நினைவுகள்

இமைகள் மூடும் முன்பே
இடிந்து வீழ்ந்த இதற்குள்
எத்தனை இதயங்கள்
இமை மூடாது உறங்கிக்
கிடக்கின்றன?

இ.தீபன், தம்பலகாமம்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### நாளையும்

எரிமலையாக வெடித்து
எத்தனை மனிதம் துடித்ததோ
தகர்த்தெறிய தரணியிலே- மீண்டும்
துளிர்த்து நிற்கும் அராஜகமே...

தெ.லோஜனா, கொழும்பு-06.

### ஓராண்டு நினைவஞ்சலி

இரட்டை கோபுரத்திற்கும்
இறந்த உறவுகளுக்கும்
ஓராண்டு!
நிம்மதி கலைந்து போன
மௌன அஞ்சலி!
உறவுகளின் ஆத்ம
சங்கமத்திற்கு உறவுகளின்
உயிர்கள் சங்கமம்
ஆகட்டும்!

க.சுதர்ஷன், ஹப்புத்தளையூர்.

### அதர்மம்

வியட்நாம் போரினை
அநியாயம் என்றுரைத்த
அப்பாவி அமெரிக்கரையெல்லாம்
அரசு மேலுள்ள ஆத்திரத்தால்
அழித்து விட்டானே
ஆப்கானிய அரக்கனொருவன்.

சதீஸ்குமார் சகிலா- பண்டத்தரிப்பு.

### அந்த செப்டம்பர் 11....

வானம்
விடியலுக்கு
விளக்கெரித்த வேளை,
வரலாறு தன்னைத்
தூசு தட்டிக் கொண்டது...
இடிந்த
கட்டடங்களைப் பொறுத்தவரை
அமெரிக்காவுக்குப் பலத்த அடி!!
இழந்த
உயிர்களைப் பொறுத்தவரை...
இந்த உலகுக்கே பேரிடி!!!

எஸ்.ஏ.மொஹமட் நிலாம், பாலாவி.

### புகை மண்டலம்

பாவம்
சந்திர மண்டலத்தை
சந்திக்க வேண்டியவர்கள்
புகை மண்டலத்தில்
மூச்சுத் திணறுகிறார்கள்!

எம்.அப்துல் ஹகீம், பறகஹதெனிய.

### முடிவுறா சம்பவங்கள்

வியட்நாமில் வீழ்ச்சி
ஈராக்கில் ஏமாற்றம்
ஆப்கானில் தடுமாற்றம்
பிலிப்பைன்ஸில் தளம்பல்
அகங்கார அமெரிக்காவே
மூர்க்க குணம் உள்ளவரை- உன்
மூக்குடைவது தப்பாது
பென்டகன் தாக்குதல்களும்
பேரிழப்புகளும் முடிவுறாது.


க.சசீலா பேகம், ஏறாவூர்-3.

### அச்சுறுத்தல்!

அடுக்கு மாடிகளின் சரிவு
அழுக்கு அடி என்பதா-
அடுத்துவரும் சந்ததியினருக்கு
விஞ்ஞான வளர்ச்சியின்
வேகத்தை நிரூபிக்கும் காட்சிகளா?

எஸ்.ஸ்ரீ, காரைதீவு.

## கவிதைப் போட்டி இல.479



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.10.2002

கவிதைப் போட்டி இல.479
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஒரு வருடம்

என்ன இது
சிலையா? சிற்பமா?
கவிதை தோன்ற?
எத்தனை உயிர்கள்
ஒரு வருடமாகியும்
தெரியவில்லையே
பின்லாடா?

ஜெ.களனியன், பலாங்கொட.

### இன்னும் தாக்குதே!

வல்லரசில் வண்ணமாய்
வடிவேந்தியிருக்கும் -உலக
வர்த்தக மையத்தை -நீ
கணப் பொழுதில் தாக்கி
இந்த பதினொன்றோடு
ஓராண்டு!-ஆனால்,
யாருக்கு மஞ்சாத
அமெரிக்கனான- என்னை
உன் தாக்குதல்- இன்னும்
இடி போல தாக்குதே!

ஆ.ஞானகுரு, பதுளை.

### என்ன செய்வாள்?

ஓராண்டு மறைந்தாலும்
ஒசாமாவின் உருவம் மட்டும்
மறையவில்லை.
ஓராயிரம் உயிரை பலிகொண்ட
ஒன்பதாம் மாதம் அது
உயிர் விட்ட அப்பாவை
அறியாத மழலை முகம்
அப்பா எனும்போது அம்மை
அவள் என்ன செய்வாள்?

எஸ்.ஏ.ராஜா, பண்டாரவளை.

### மறவாமை

உலகையே உலுக்கியது
உன் உருக்குலைவு
ஆண்டு ஒன்றாகிவிட்டாலும்
உன் அழிவுச்சம்பவம்- ஆணித்தரமாய்
பதிந்து விட்டது ஒவ்வொரு நாட்டவர்
இதயத்தின் மீதும்.

ராமச்சந்திரன் தவேந்திரன், ஹாலி-எல.

### கழுத்தறுந்த கோபுரம்

வல்லமை கொண்டிங்கே
வல்லரசை வீழ்த்தவோ
கள்ளவழி புகுந்தோர்
கனல் கக்கி புகையாக....!
கழுத்தறுந்து போனதுமோ...!

ஆர்.ரம்மியா, கொழும்பு-13.

# உங்கள் பக்கம்

## பாலியல் வன்முறைகள் ஓர் மாற்றுச் சிந்தனை

இன்று அதிகம் பேசப்படுவதும் செய்தித்தாள்களில் அதிகம் பிரசுரமாவதுமான விடயங்கள் இரண்டு. ஒன்று அரசியல் தீர்வு; மற்றையது பாலியல் வன்முறை!

அரசியல் தீர்வ பற்றிய விடயங்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெரிதுபடுத்தப்பட்டு அரசியல் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வெளியிடப்படுகின்றன. ஆனால் பாலியல் வன்முறைகள் பற்றிய உண்மை நடப்புகள் நூற்றுக்கு ஒன்றுகூட வெளியாவதில்லை என்பதுதான் உண்மை!

இதில் பரிதாபம் என்னவென்றால் பாலியல் வன்முறைக்கு உள்ளாகுபவர்கள் பெரும்பாலும் சிறுமிகள் மற்றும் அநாதரவான பெண்கள். இவர்களை வன்முறைக்கு உட்படுத்துபவர்கள் யாரெனின் மாணவப் பராயத்தில் உள்ளவர்கள் அல்லது வயோதிபர்கள் ஆவர்.

இங்கு அவதானிக்கப்படத் தக்கதாக இருப்பதென்னவெனின் தமது உணர்ச்சிகளுக்கு வடிகால் இல்லாதவர்களே சூழ்நிலைகளால் தூண்டப்பட்டு அத்துமீறி நடந்து கொள்கிறார்கள்.

பாலியல் உணர்வு என்பது இறைவன் உயிரினங்கள் அனைத்துக்குமே வழங்கியுள்ள ஒரு கொடையாகும். குறிப்பாக ஆறறிவு படைத்த மனிதனானவன் தன்னை எதிர்கொண்டுள்ள மரண பயத்தை மறந்து வாழ்க்கையில் பற்றுக்கொண்டு வாழ்வதற்குரிய அடிப்படைக் காரணியாக இருப்பது இதுவே!

இன்று உலக நாடுகள் அனைத்துமே உணவுற்பத்தியில் போட்டி போட்டுக் கொண்டு உழைக்கின்றன என்றால் அதற்குக் காரணமாக இருப்பது உயிர் வாழ்க்கையில் உணவின் அத்தியாவசியம் உணரப்பட்டதே.

இந் நிலையில், பாலியல் உணர்வுகளின் அவசியத்தையும் ஏற்றுக் கொண்டு அதைத் திட்டமிட்ட முறையிலும், மனித சமுதாயத்திற்கு உகந்த வகையிலும், எல்லை மீறாமலும், எவரும் பாதிப்புக்கு உள்ளாகாத வகையிலும், தன்னை அழித்துக் கொள்ளாத வழியிலும் வாழ்வின் மதிக்கத் தக்க ஓர் அம்சமாக அமைத்துக் கொள்வது பற்றி மனித இனம் ஏன் வெளிப்படையாகவும் பரந்துபட்ட அளவிலும் சிந்திக்கக் கூடாது?

எமது முன்னோர் இதற்காக ஒரு நிர்வாக விவாக வாழ்க்கையை அறிமுகம் செய்துள்ளனர். உண்மையில் விவாக வாழ்க்கை சரியாக அமையும் போது ஒரு ஆணும் பெண்ணும் திருப்தியுற்று வாழும் சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது. ஆனால் இநத விவாக வாழ்க்கைக்கு உட்படாத..., உட்பட்ட சந்தர்ப்பம் அமையாத... விவாக வாழ்க்கை பறிபோன..., விவாக வாழ்க்கையில் ஒன்றித்து வாழ முடியாத பல்லாயிரக் கணக்கான ஆண், பெண்பாலார் எமது சமூகத்தில் இல்லையா?

ஒரு பக்கம் பாலியலைத் தூண்டும் ஆபாசத் திரைப்படங்களைத் திரையிடுவதை அனுமதித்துக் கொண்டும்... மறுபக்கம் பாலியலைக் கட்டுப்படுத்துமுகமாகப் பல வருட கால சிறைத் தண்டனை, அபராதம், நட்ட ஈடு போன்றவற்றை அமுல்படுத்திக் கொண்டும் இருப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்?

*'ஜெயகாந்தி மாஸ்ரர்'-திருகோணமலை.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# வாசக[ர்] சாலை

*தேனான தினமுரசே!*
திக்குத் திசையெல்லாம்
திடிரென நிகழுகின்ற
தினிசு தினிசான சங்கதி தருகின்றாய்
தில்லென்று நீ தரும்
திரை மசாலா இனிக்கிறது.
திருப்பு முனை இதுவென்று
திகழ்கின்றாய் உலகினிலே
திகதிகள் தவறாமல்
திசையெல்லாம் பறந்திடுவாய்
தித்திக்கும் தேன்தமிழை
திரிபுரமும் தெரியவைத்து
திரு அற்புதனின் நினைவில் பல
திதிகள் வந்திட்டாலும்
திகட்டாத செய்திகளை
திசையெல்லாம் தெரிவித்து
திருவிளையாடல் காண்பித்து
தின் பண்டம் தருகின்றாய்
தினந்தோறும் தேடி தரும்
திசையறி கருவியாய்
தினமுரசே பெருமிதமாய் திகழ்கின்றாய்
தித்திக்கும் தினமுரசே
திரும்பவும் உனக்காக
திரியாய் எரிந்து கொண்டே
தினமும் உனக்காக எழுதிடுவேன்
திருடிய கவிதையல்ல இது.
திரிந்து திரிந்து தேடிய கவிதையிது
தினந்தோறும் திருடாத கவிதைகளை
திரும்பத் திரும்ப யோசித்து
திருநாட்டின் இயற்கையை வர்ணித்து
தினமும் எழுதுவேன்
தினமுரசே உனக்காகப் பல கவிதை.

ஜெ.முகுந்தகுமார், வவுனியா.

வந்து சேர்ந்த மடல்களுள் இடமுள்ளவரை இடம் பிடித்தோர் சிலர்:



| | |
|---|---|
| ஷோபனா | - யாழ்ப்பாணம் |
| செந்துஜா | - மஸ்கெலியா |
| ரவி | - ஹற்றன் |
| பரராசசிங்கம் | - மன்னார் |
| இம்ரான் | - பொத்துவில் |
| நளீர் | - அலுத்கம |
| பாலன் | - இரத்தினபுரி |
| காந்தன் | - மட்டக்குளி |
| பைசர் | - புத்தளம் |
| கலாநிதி | - உடையார்கட்டு. |

*மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,*

முரசு வழங்கும் அம்சங்கள் யாவும் அருமையானவை. பயன்மிக்கவை. குறிப்பாக ஆன்மீகம் தரும் கருத்துக்கள் யாவும் நல்லறிவைப் புகட்டும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. மேலும், சமாதானக் கதவுகளுக்கப்பால் சிறுகதை நன்றாக இருந்தது. பழம்பெரும் திரைப்படக் கலைஞர்களையும், அவர்களின் திரையுலகம் சம்பந்தமான வரலாற்றுக் குறிப்புகளையும் சுவை குன்றாமல் வழங்கும் "பார்த்த ஞாபகம் இல்லையோ" பகுதி மிக மிக அருமை.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.

*அன்பின் தினமுரசே,*

நீ தினந்தோறும் அரசியல், கதை, கவிதை, சினிமா, செய்திகள், அறிவியல் இன்னும் பல இப்படிப்பட்டவற்றை வாரந்தோறும் சுமந்து எங்கள் கரம் சேருகின்றாய். முரசே! இன்னும் பலவற்றைச் சுமந்து வருவாய் என நான் என்றென்றும் வாழ்த்துகின்றேன்.

எச்.எம். பஸ்மி, அக்கரைப்பற்று-01.

*ஸ்நேகங்களுடன்....முரசே,* உன் முகத்தினை முகர்ந்து உன்னை முழுவதுமாய்ச் சல்லடை போட்டு விட்டால் மனசு.... தன் தாய் மடியைவிட்டு எழ முடியாது அழுது அடம்பிடிக்கும் சிசுவாய், உன்னிடமே ஒட்டிக் கொண்டு வருகின்றது. விடியல் தரித்த ஒரு காலையாய் மனசு சுத்தமாய்- வெள்ளையாய் ஆகிவிடுகின்றது. 'வளவளாக்கள்' கொஞ்சம் வழிவதாய் ஓர் அருட்டுணர்வு; தவிர்த்து, இறுக்கத்திற்கு இசைவாய் ஆக்கங்களை ஆக்கிப் படையுங்கள்.... வாத்சல்ய வாழ்த்துக்களுடன்

எஸ்.ஏ. மொகமட் நிலாம், கரம்பை.

## அரச சேவைக் கட்டணங்கள் அதிகரிப்பு

சகலவித அரசாங்க திணைக்கள கூட்டுத்தாபன சேவைகளுக்குமான கட்டணம் 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி சார் நிறுவனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் உள்ளிட்ட அரசாங்க திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் வழங்கப்படும் சேவைகளுக்காக, இந்தக் கட்டண அதிகரிப்பு அமுல் செய்யப்படுகிறது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் புதிய கடவுச்சீட்டு ஒன்றைப் பெறுவதற்கான கட்டணம் தவிர்த்து ஏனைய அரசாங்க சேவைகளில் இந்த 15 சதவீத அதிகரிப்பு அமுலுக்கு வருவதாக திறைசேரியினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான விடுதிகளுக்கான மாதாந்தக் கட்டணமும் மீளாய்வு செய்யப்படவிருக்கிறது. கடந்த 6 மாத காலத்திற்குள் அரச சேவைகளுக்கான கட்டணம் இரண்டாவது தடவையாகவும் 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. முன்னதாகவும் 15 சதவீத அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. தாய்லாந்து சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற தினத்தன்று பெற்றோல் தவிர்ந்த ஏனைய எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

## ஏ-9 வீதியில் சிறுவனை மோதிய பஸ்ஸை விடுவிக்க
## உரிமையாளரான சிங்களவருக்கு 2 இலட்சம் ரூபா தண்டம்

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற சமயம் புளியங்குளம் பகுதியில் சிறுவன் ஒருவனை மோதிக் கொன்ற பஸ்ஸையும் அதன் சாரதியையும் விடுவிக்க புலிகளினால் 2 இலட்சம் ரூபா அபராதம் கோரப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பாக வாத்துவயைச் சேர்ந்த ஆர். இந்திக பெரேரா என்ற பஸ் சாரதி புலிகளின் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சாரதியையும், பஸ் வண்டியையும் விடுவிக்கப் புலிகள் 2 இலட்சம் ரூபா கேட்டிருப்பதாகக் களுத்துறையைச் சேர்ந்த பஸ் உரிமையாளர் கே.ஏ.ஏ. வசந்த தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்துக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி கொழும்பிலிருந்து பயணிகளுடன் யாழ்ப்பாணம் புறப்பட்ட இந்த பஸ்ஸினால் மோதி 8 வயதுத் தமிழ்ச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட பஸ் சாரதி கிளிநொச்சியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பஸ் புலிகளின் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

பஸ்ஸை வைத்துக்கொண்டு சாரதியை மட்டும் விடுவிக்குமாறு பஸ் உரிமையாளர் விடுத்த கோரிக்கை புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

முதலில் பஸ்ஸையும்,சாரதியையும் விடுவிக்க மூன்றரை இலட்சம் ரூபா கோரப்பட்டு, பின்னர் இரண்டு இலட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டது. எதிர்வரும் 27ஆம் திகதி 2 இலட்சம் ரூபா பணத்துடன் கிளிநொச்சியில் உள்ள புலிகளின் நீதிமன்றத்துக்கு வருமாறு பஸ் உரிமையாளருக்குப் புலிகளால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில் பாரிய கடற்படை முகாம் அமைக்கும் பணி ஆரம்பம்
## புலிகள் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் பின்புறமாகப் பாரிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் வேலைகளைக் கடற்படையினர் திங்கள் முதல் மும்முரமாக ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. போர் நிறுத்த உடன்படிக்கையை மீறுகின்ற இந் நடவடிக்கை குறித்து விடுதலைப் புலிகள் தங்கள் கடும் ஆட்சேபத்தைக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்திருக்கின்றனர்.

கடற்படைத் தரையிறங்கு கலம் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட கடற்படையினர் திங்களன்று நெடுந்தீவில் தரையிறக்கப்பட்டனர் என்றும், அவர்கள் அங்கு புதிய முகாமை நிறுவும் பணியை முழுவீச்சில் ஆரம்பித்தனர் என்றும் குடாநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு புதிய படைமுகாம் நிறுவப்படுவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பினார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.(23.09.2002) காலை 8 மணியளவில் நெடுந்தீவில் கடற்படைத் தரையிறங்கு கலம் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட கடற்படையினர் தரையிறக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் பின்புறமாக உள்ள கடற்கரையோரமாகப் பாரிய கடற்படை முகாமொன்றை அமைக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும்பொழுதும், பாரிய யுத்தம் நடைபெற்ற காலங்களிலும் கூட எந்தவோர் இராணுவ முகாமோ அன்றேல் கடற்படை முகாமோ அல்லது வேறு எந்தவொரு படைத் தரப்பு நடவடிக்கைகளோ அங்கு இருக்கவில்லை என்பதைத் தங்களுக்குத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் சரத்து 02 இன் உப பிரிவு 2.5 இன் படி "இரு தரப்பினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சோதனைச் சாவடிகள் நிறுவுவதையும் மீளாய்வு செய்து, பொது மக்களுக்குத் தொந்தரவு ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடனான முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இந்த ஒழுங்குகள் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து 60 நாள்களுக்குள் ஏற்படுத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து 200 நாள்கள் கழிந்த நிலையில் பாரிய முகாங்களைத் தவிர இதர முகாம்கள் அனைத்தும் முடப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் இயற்கையாக இரு தரப்பும் சேர்ந்து வழிகோல வேண்டிய வேளையில், இப் பாரிய கடற்படை முகாமை அமைப்பது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையே கடற்படையினர் மீளாய்வு செய்வது போலத் தெரிகிறது. இது பாரிய யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல் என்பதையும் அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டி, தாங்கள் இவ் விடயத்தில் விரைந்து நடவடிக்கையெடுத்து இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்திப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை வலுவாக அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்று பூரணமாக நம்புகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திலீபன் நினைவுநாள் நிகழ்வுகள்

உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த புலிகள் இயக்க உறுப்பினர் திலீபன் நினைவாக எதிர்வரும் 26ஆம் திகதி மன்னார் சிறுவர் பூங்கா மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவுள்ளது. அன்று மாலை மன்னார் விளையாட்டு மைதானத்தில் எழுச்சிக் கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. மன்னார் மாவட்ட தமிழ்த்தேசிய எழுச்சிப் பேரவை இந்த எழுச்சி நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகிறது.

திலீபனின் நினைவு வாரத்தை அனுஷ்டிக்கும் முகமாக மன்னார் நகரில் சிவப்பு, மஞ்சள் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன. திலீபனின் படங்களும் ஆங்காங்கே வைக்கப்பட்டு மக்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. மன்னார்ப் பகுதியில் உள்ள கிராமங்கள் தோறும் சிரமதானப் பணிகளும் எழுச்சி நிகழ்வுகளும் விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் அமிர்தாப், தமிழ்த்தேசிய எழுச்சி பேரவைத் தலைவர் அல்பிரட் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

## கூட்டணி நிர்வகிக்கும் யாழ்.
## மாநகரசபையில் புலிகளின் வரி
## அறவீட்டைக் கண்டித்துத் தீர்மானம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். மாநகர சபையில் புலிகள் இயக்கத்தின் வரி அறவீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் மேயர் சுந்தையா தலைமையில் கூடிய யாழ். மாநகர சபையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுமக்களும், வர்த்தகர்களும் எதிர்நோக்கும் பொருளாதார சுமைகள் காரணமாக மாநகர சபை வரிச்சலுகைகளை வழங்கிவரும் நிலையில் புலிகள் புதிய வரிகளை அறவிடுவது கண்டனத்துக்குரியது என அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக, புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளல்ல எனக்கூறும் தீர்மானம் ஒன்றும், தாய்லாந்துப் பேச்சில் சகல தமிழ் தரப்புகளின் கருத்துக்களும் இடம்பெற வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றும் யாழ் மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக இந்தத் தீர்மானங்கள் சபையில் முன்மொழியப்பட்டபோது கட்சித் தலைமையுடன் ஆலோசித்த பின்னர் இவற்றை நிறைவேற்ற ஆதரவு தெரிவிப்பது குறித்து முடிவு செய்வதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

கட்சித் தலைமையின் ஆலோசனைப்படி கடந்தவாரம் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஜனாதிபதியின் அதிகாரங்களைக் காப்பாற்றும்
## தீவிர முயற்சியில் பொ.ஐ.மு.

தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான விசேட கூட்டம் ஒன்று திங்களன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. பொ.ஐ. முன்னணியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் கூட்டத்தில் பங்கு பற்றினர். தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்தும், 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே 19ஆவது அரசியலமைப்புத் திருத்தங்களைத் தோற்கடிக்கும் வழிவகைகள் குறித்துப் பொதுஜன ஐக்கிய முன்னணி விரிவாக ஆராய்ந்து வருகிறது. இதன் முதற்கட்டமாக 18, 19 ஆவது திருத்தச் சட்ட மூலங்களை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் நான்கு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை நீக்க வழி செய்கின்றது.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள 17 ஆவது திருத்தத்தின் பிரகாரம் நியமிக்கப்படுகின்ற அரசமைப்பு கவுன்ஸிலுக்கு சட்ட விலக்களிப்பதற்கு உத்தேச 18 ஆவது திருத்தம் வழி செய்கின்றது. இத் திருத்தச் சட்ட மூலங்கள் இரண்டும் நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கு எம்.பி.க்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படுவதோடு, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அவற்றுக்கு மக்கள் அங்கீகாரமும் பெறப்படவேண்டும் என்று உத்தரவிடுமாறு இந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, தனது அதிகாரங்கள் குறைக்கப்படுவதைத் தடுத்து, தன்னைக் காத்துக் கொள்ளும் இறுதி அஸ்திரமாக ஜனாதிபதி தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்திப் பாராளுமன்றக் கூட்டத் தொடரை 2 மாதங்களுக்கு ஒத்திவைக்கலாம் என அரசியல் வட்டாரங்களில் பரவலான ஊகங்கள் எழுந்துள்ளன.

## 5 மாதமாக நிவாரண வெட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளாக உள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கு, கடந்த 5 மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாததால் பெரும் இக்கட்டான நிலைமையை எதிர்நோக்கியுள்ளார்கள். உலர் உணவு நிவாரண முத்திரைகளைப்பெற அகதி மக்கள் நாள்தோறும் அதிகாரிகளைச் சந்திக்கிறார்கள். அதிகாரிகளோ இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாதெனக் கையை விரிக்கிறார்கள்.

## ஏ 9 வீதியில் புதிய வரித் திட்டம்

தென்னிலங்கையிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ். குடாநாட்டுக்கு வர்த்தக நோக்கில் பயணம் செய்பவர்களுக்குப் புலிகள் இயக்கம் புதிய வரித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இதன்படி தென்னிலங்கையிலிருந்து ஏ-9 வீதியூடாகச் செல்லும் வர்த்தகர்கள் தமிழீழ வைப்பகம் எனப்படும் புலிகளின் வங்கியில் 20 ஆயிரம் ரூபா நிரந்தர வைப்பிலிடவேண்டும். இதற்காக மேலதிகமாக 3 ஆயிரம் ரூபா கட்டணமாகச் செலுத்துவதும் அவசியம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றுபவர்கள் மட்டுமே எதிர்காலத்தில் ஏ-9 வீதியூடாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

## தடுப்பு மருந்தேற்றல்

தேசிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலாம் கட்ட தடுப்பு மருந்து வழங்கல் செப்டம்பர் 28ம் திகதி சனிக்கிழமை வடக்கு கிழக்கில் இடம்பெறும்.

ஏற்கெனவே போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கியிருந்தாலும் இம்முறையும் 5 வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பெற்றோர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

போலியோ தடுப்பு மருந்து வழங்கலின் இரண்டாம் கட்டம் ஒக்ரோபர் மாதம் 26ம் திகதி சனிக்கிழமை வடக்கு கிழக்கில் இடம்பெறுகிறது.

# முரசம்

## உயிரோடு விளையாடும் ஊழல்கள்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

இலங்கையில்
பொதுசனப் போக்குவரத்து
சீர்கெட்டுப் போயுள்ள நிலைமை
தற்போது வெளிப்படையாகத்
தெரியவந்தபடியுள்ளது.
நாளாந்தம் நிகழும்
போக்குவரத்து விபத்துகள்
அதிர்ச்சியூட்டுவனவாகவுள்ளது.
முன்னர் அரசாங்கத்தின்
கட்டுப்பாட்டிலிருந்த
போக்குவரத்துச் சேவையை
மக்கள் மயப்படுத்துவதாகக்கூறி
தனியார் மயப்படுத்தியதால்
அது மக்களுக்குப்
பொறுப்பற்ற ஒரு சேவையாகவே
இன்று திகழகிறது.
தனியார் போக்குவரத்துச்
சேவைகளில்
எவ்வித கண்காணிப்போ,
கட்டுப்பாடோ இல்லாத
தன்னிச்சையான நிலைமை
காணப்படுகிறது.
பல தனியார் பஸ் வண்டிகளில்
பயணச்சீட்டு
வழங்கப்படுவதேயில்லை.
விபத்தேதும் நிகழ்ந்தால்,
பஸ் வண்டியின் பேரில்
காப்புறுதி நட்டஈடுகளைக்
கோரக்கூடிய ஆதாரமாக உள்ளது
அப் பற்றுச்சீட்டுகள்தான்.
மேலும் தனியார் பஸ்கள்
நேரசூசிகைப்படி
சேவையாற்றுவதுமில்லை.
குறித்த பயணம் குறித்த
நேரத்துள் முடியுமெனவும்
பயணிகள் நம்பிக்கை
கொள்ள முடியாத நிலைமை.
பஸ் வண்டிகளில்
பயணிகளை நடத்தும் விதம்
மிகுந்த அவமரியாதைக்குரியதாகவே
பொதுவாகக் காணப்படுகிறது.
இந் நிலையில் தனியார் பஸ் சாரதிகள்
போக்குவரத்து விதிகளை
மதிப்பவர்களாகவும் இல்லை.
பஸ் தரிப்புகளிலன்றி
கண்ட இடத்திலும் நிறுத்தி
ஆட்களை ஏற்றுவதே
வாடிக்கையாகவுள்ளது.
ஏனைய வாகனங்களுக்கு
வழிவிட்டு, தெரு ஓரத்தில்
பஸ்ஸை நிறுத்துவதற்கும்
அவர்கள் தயாரில்லை.
தெருவை இடைமறித்து
நினைத்த இடத்தில் நிறுத்தும்
இவர்களால் தெருவில்
வாகனப் போக்குவரத்து அடிக்கடி
ஸ்தம்பிக்க வேண்டியுள்ளது.
இவற்றுக் கெல்லாம் மேலாக
இவ்வாறான சாரதிகள் பலருக்கு
முறையான பயிற்சியில்லையெனவும், அவர்களிற்
சிலர் போதைவஸ்து
பாவனையாளர்களாக
இருப்பதாகவும்
பஸ் உரிமையாளர் சங்கத் தலைவரே
அண்மையில் ஒரு முறை தெரிவித்திருந்தது.
மேலும் அதிர்ச்சி தருவதாக இருந்தது.
இப்போது தெரியவரும்
மற்றொரு திடுக்கிடும் தகவல் என்னவென்றால்
சாரதி அனுமதிப் பத்திரம்
வழங்குவதில் கூட
மோட்டார் வாகனத் திணைக்களத்தில்
ஊழல்கள் நிகழ்ந்து வருகிறதென்பதே!
சாரதிக்குரிய தகுதியின்றி
லஞ்சம் கொடுத்து
அனுமதிப்பத்திரம் பெற்ற
சாரதிகளின் கைகளில்தான்
இந் நாட்டின் சராசரி
மனிதர்களின் உயிர்கள்
ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதென்ற
நிலைமை பாரதூரமானது.
மக்களின் உயிரோடு விளையாடும்
நிலைக்கு இங்கு
ஊழல்கள் மலிந்துவிட்டதற்கு
யார் பொறுப்பு?

■■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சுவார்த்தையின் இலாப நட்டக் கணக்கு!

நரன்

பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட தாய்லாந்துப் பேச்சுவார்த்தை விறுவிறுப்பாக நடந்து முடிந்துள்ளது.

முடிந்துள்ளதென்பதைவிட ஆரம்பித்துள்ளது என்பதே சரி-முடிந்தது முற்கட்டமுமல்ல, முதற் சுற்று மட்டும்தான். முடிந்தாலும் முடியாததுபோல அப் பேச்சுக்களில் என்ன பேசப்பட்டதென்ற வியப்பும், அது பற்றித் தெரிவித்த கருத்துகள் பற்றிய பல்வேறு வியாக்கியானங்களும் தொடர்கின்றன.

ஆயினும், இங்கே அதிகமாக எவையும் பேசப்படவில்லையென்ற உண்மை இவற்றிற்கு அப்பாலுள்ள மற்றொரு யதார்த்தமாகும். பேசப்பட்டவை என்ன? இவற்றிலிருந்து நாம் அனுமானிக்கக் கூடியவை என்ன? இவை முதலில் நாம் பார்க்க வேண்டிய விடயங்கள். பேசப்படாதவை பற்றிய கேள்விகளும் இருக்கவே செய்கின்றன.

இப் பேச்சுவார்த்தைகள் முழு அளவில் ஆரம்பிப்பதற்கு இரண்டு அடிப்படைக் கேள்விகள் இந் நாட்டின் யதார்த்தத்தில் நேர் நிற்கின்றன.

புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையையும் ஆயுதப் போராட்டத்தையும் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றைக் காண இறங்கி வருவார்களா என்பதும், மறுபுறம், இலங்கை அரசு நடப்பிலுள்ள அரசியல் யாப்பு, சிங்கள-பௌத்த உளப்பாங்கு என்பவற்றைக் கடந்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஈடு செய்யக் கூடிய சுயாட்சி அமைப்பொன்றை வழங்குவதற்கு முன்வருமா என்பதுமாகும்.

இந்தக் கேள்விகளையொட்டியே இரு தரப்பிலும் பல்வேறுபட்ட சந்தேகங்கள் நிலவி வந்தன.

ஒருபுறம், புலிகள் இப் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தி, தம்மை மேலும் அரசியல், இராணுவ ரீதியாக வலுப்படுத்திக்கொண்டு, சர்வதேச நெருக்கடிகளைச் சமாளித்துக் கொண்டு மறுபடி தனிநாட்டுக்கான யுத்தத்தை நடத்தப் போகிறார்கள்-இதில் அரசாங்கம் ஏமாறப் போகிறது என்றவகையான குரல்கள் ஒலிக்கின்றன.

தமிழ் பேசும் மக்களுக்கு எந்தவொரு உரிமையையும் சலுகையையும் கூட வழங்கிவிடக் கூடாதென்ற இனவாதக் கருத்தோடும் எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்படுகின்றன.

அதேவேளை தற்போதுள்ள ஒற்றையாட்சியைவிட வேறெந்த அரசியல் அமைப்பையும் இதுவரை ஏற்காத ஐ.தே.க. அரசாங்கம் எந்தளவு தூரம் ஒரு சுயாட்சி அமைப்புக்கு முன்வருவார்கள் என்ற சந்தேகமும் மறுபக்கத்தில் உள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தி சர்வதேச உதவிகளை மட்டும் பெற்றுக் கொண்டு, தனது அரசாங்கத்தை மேலும் சிலகாலம் நிதி நெருக்கடியின்றிக் கொண்டு நடத்தவே அது அக்கறை காட்டுகிறதா என்பது யாவருக்குமுள்ள மற்றொரு சந்தேகம்.

இதைவிட, இப் பேச்சுவார்த்தைகளில் புலிகளை வழிக்குக் கொண்டுவர, அல்லது பேச்சுவார்த்தை முறிவடைந்தால் யுத்தத்துக்கு முகம்கொடுக்க ஏதுவாக வல்லரசுகளுடன் மறைமுக இராணுவ ஒப்பந்தங்களை மேற்கொண்டபடி இந் நிலைமையைப் பயன்படுத்திச் செல்கிறதா என்றும் சந்தேகங்கள் தலைதூக்கியுள்ளன.

இந் நிலையில் இவ்விரு கேள்விகளுக்கான விடைகள் இப் பேச்சுவார்த்தையில் கிடைத்ததா என்றால் அதுவே ஒரு கேள்வியாகி நிற்கிறது.

இப் பேச்சுவார்த்தைகளில் இவ்விரு தரப்புமே இதற்கான எவ்வித உத்தரவாதங்களையும் மறுதரப்புக்கு வழங்கவில்லை.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் நிகழ்ந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்விரு தரப்பினரும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு வழங்கிய பதில்கள் ஊடகங்களுக்கு வழங்கிய பதில்களேயன்றி பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பும் தம்மிடையே வழங்கிய உத்தரவாதங்களல்ல. அவ்வாறான ஒரு இணக்கம் காணப்பட்டிருந்தால் நிச்சயமாக இரு தரப்பினரும் ஒரு கூட்டறிக்கையை விடுத்திருப்பர்.

உண்மையில் ஆரம்பமே பிசகாகிவிடாதிருக்க இக் கேள்விகளைத் தவிர்த்துக் கொள்வதையே கடைப்பிடித்திருந்தனர். புலிகளும் தனிநாடு என்ற பதத்தைப் பயன்படுத்தவில்லை. அரசாங்கமும் ஒற்றையாட்சியென்ற பதத்தைப் பயன்படுத்தவில்லை-அவ்வளவே.

எவ்வாறாயினும் இங்கு இரு தரப்புமே இணக்கம் கண்ட விடயங்களாகச் சில முக்கியமான உடன்பாடுகள் காணப்பட்டுள்ளதை நாம் எடுத்து நோக்கத்தான் வேண்டும்.

புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திகளுக்காக இரு தரப்புமே வெளிநாட்டு நிதியுதவிகளைக் கூட்டாகக் கோருவது, அவ்வுதவிகளைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கில் புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளைக் கூட்டாக முன்னெடுப்பது, உயர் பாதுகாப்பு வலயங் கள் தொடர்பாக இரு தரப்பு அரசியல், இராணுவ தலைவர்களையும் கொண்ட கூட்டுக் குழுவொன்றை அமைத்து ஆராய்வது,

சர்வதேச நாடுகளின் உதவிகளுடன் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது, என்பவற்றோடு அடுத்தடுத்த பேச்சுவார்த்தைகளை எப்பெப்போ நடத்துவது என்று திகதிகள் தீர்மானிக்கப்பட்டது இங்கு காணப்பட்ட முக்கியம் வாய்ந்த இணக்கப்பாடுகளாகும்.

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளைக் காட்டித் தனது நிதி நெருக்கடிகளிலிருந்து மீள வெளிநாட்டுதவிகளைப் பெறும் தீவிர முயற்சியில் இறங்கியிருந்த வேளையில், தம்மைப் பயன்படுத்தி அவ்வுதவிகளைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட முடியாதவாறு, தாமும் சேர்ந்தே அவ்வுதவிகளைக் கோருவதுடன், தாம் அரசாங்கத்துடன் சம பங்காளிகளாகி நின்று புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளை வடக்கு கிழக்கில் முன்னெடுப்பதை உறுதிப்படுத்துவதில் புலிகள் வெற்றியீட்டியுள்ளார்கள்.

இவ் விடயத்தில் புலிகளைத் தடைசெய்துள்ள வெளிநாடுகளிடமும் புலிகளுடன் சேர்ந்தே அரசாங்கம் நிதியுதவி கோரும் நிலை முரண்பாடான நிலையாகியுள்ளது.-புலிகளின் நிதியை வங்கிகளில் முடக்கியுள்ள அதே வெளிநாடுகள் இலங்கையில் புலிகளின் புனர்வாழ்வு புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி வழங்குவதென்பது தர்க்கப் புரள்வுக்குரியதாக உள்ளது.

எனினும் இது புலிகள் கோரிவரும் இடைக்கால நிர்வாகத்துக்கு முன்னோடியாகத் திறக்கப்பட்ட கதவாகவே புலிகளுக்கு அமைந்துள்ளது.

இதன் உச்சப் பயன்பாட்டைப் புலிகள் கைவரப் பெறுவார்களானால் இடைக்கால நிர்வாகம், அதன் வடிவம், அதிகாரங்கள், அதன் இயங்குதளம், அதற்கான விடயதானங்கள், மற்றும் பிரதானமாக அதில் பங்குகொள்ளப் போகின்ற இதர கட்சிகள், அவற்றில் புலிகளின் பிரதான பாத்திரத்தின் தன்மை என்பன யாவும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையிலேயே ஆராயப்படும்.

இங்கு முஸ்லிம்கள் விவகாரமும் கேள்விக்குரிய, தொக்கி நிற்கும் விடயமாகும்.

இவையாவற்றுக்கும் அப்பால்தான் இனப்பிரச்சினைக்கான முழுமையான அரசியல் தீர்வ குறித்த அடிப்படை விடயங்கள் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்படும்-ஒருவேளை இடைக்கால நிர்வாக சபை என்பதோடு நிறுத்திக்கொண்டு பேச்சுவார்த்தைகளின் இதர முக்கிய விடயங்கள் பிற்போடப்பட்டு விடலாம்.

## தனிநாடும் சுயநிர்ணயமும்

இந்தப் பேச்சுவார்த்தையில் இரு தரப்புக்கும் இடையே என்ன பேசப்பட்டதென்பதைவிட இப் பேச்சுவார்த்தையின் பின்பு வழங்கப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலும், பேட்டிகளிலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களே அதிக பிரபல்யம் பெற்றுள்ளன. இதில் புலிகளின் தத்துவாசிரியரும், அவர்கள் தரப்பு பேச்சுவார்த்தைக் குழுவிற்குத் தலைமை வகித்தவருமான அன்ரன் பாலசிங்கம், புலிகளின் போராட்டத்தின் நோக்கம் குறித்துத் தெரிவித்த விளக்கமே சர்ச்சைக்குரியதாகியுள்ளது.

புலிகள் தனிநாட்டுப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டார்களா என்பதை அறிய பாலசிங்கத்தை நோக்கிக் கேள்வி தொடுத்த ஊடகவியலாளர்கள் எவரும், அரசாங்கம் ஒற்றையாட்சி முறையைக் கைவிடத் தயாரா என்ற கேள்வியை மறுபக்கத்தில் அமைச்சர் பீரிஸை நோக்கிக் கேட்கவேயில்லை.

எவ்வாறாயினும் தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பாலசிங்கம் வழங்கிய பதிலின் உள்ளடக்கமானது:

* புலிகள் தனிநாட்டுக்காகப் போராடவில்லை.
* தாயகம் என்ற கோட்பாடு, தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த நிலப்பரப்பில் அவர்கள் வாழும் உரிமையை வலியுறுத்துவதேயன்றி தனிநாட்டையல்ல.
* புலிகள் சுயநிர்ணய உரிமை வேண்டியே போராடுகிறார்கள்.
* சுயநிர்ணய உரிமையென்பது பிரிந்து செல்லும் உரிமையாக அர்த்தப்படுத்தலாகாது. ஐக்கிய இலங்கைக்குள்ளேயே சுயாட்சி அடிப்படையிலான அகச் சுயநிர்ணயத்தையும் குறிக்கும்.
* அவ்வாறான சுயாட்சியடிப்படையில் சுயநிர்ணய உரிமையை நிறைவு செய்யும் அரசியல் தீர்வொன்றைத் தர முன்வராது, தமிழ் மக்கள் தொடர்ந்து ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப் படுவார்களானால் கடைசி மார்க்கமாக அதே சுயநிர்ணய உரிமையின் அடுத்த அர்த்தத்திற்குச் சென்று பிரிந்து சென்று, தனிநாடொன்றை நிறுவுவதற்காகப் போராடவும் புலிகள் தயாராகவே உள்ளார்கள்.

இந்தப் பதிலிலிருந்து எவரும் உடனடியாக எடுத்துக்கொள்ளக் கூடிய கருத்து, புலிகள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகிறார்களேயன்றி தனிநாட்டுக்காகவல்ல, என்பதே. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தை முன்வைத்தவர் சோவியத் யூனியனின் சோஷலிஷப் புரட்சியை நடத்திய லெனின். ஒரு தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் உரிமையே சுயநிர்ணய உரிமை, அதாவது சுயமாக நிர்ணயிக்கும் உரிமை என்று கூறப்படுகிறது. இச் சுயநிர்ணய உரிமையானது அத் தேசிய இனம் பிரிந்து சென்று தனிநாடொன்றை அமைத்துக் கொள்வதற்குமான உரிமையையும் கொண்டுள்ளது.

இதை விளக்குவதானால் திருமணம் செய்யும் ஒரு தம்பதிக்கு விவாகரத்துச் செய்யும் உரிமையும் உள்ளதை நாம் ஏற்றுக் கொள்வதுபோலவே ஒரு தேசிய இனம் பிரிந்து செல்வதற்கான உரிமையையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென சுயநிர்ணய உரிமை வலியுறுத்துகிறது.

ஒரு தம்பதியினருக்குப் பிரிந்து செல்லும் உரிமை இருப்பதென்பது அவர்கள் பிரிந்துதான் செல்லவேண்டும் என்று அர்த்தமாகாது.-மாறாகப் பிரிந்து செல்லும் உரிமை இருப்பதால்தான் அவர்கள் முழுமனதுடன் சேர்ந்து வாழ்கிறார்கள்.

ஆனால் பிணக்குகள் தோன்றி, சேர்ந்து வாழ்வதற்கு இனியும் துளிதன்னும் இடமில்லை என்ற நிலைக்கு வந்த பின்னர்தான் அத் தம்பதியின் புருஷனோ மனைவியோ விவாகரத்தைக் கோருகிறார்கள்.

பாலசிங்கம் தற்போது தெரிவித்திருப்பது இதைத்தானா என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி.

ஏனெனில் பாலசிங்கம் கூறியபடி புலிகள் கோருவது தனிநாட்டையல்ல, சுயநிர்ணய உரிமையைத்தானென்றால் தமிழீழத்தைக் கைவிட்டாரென்ற குற்றச்சாட்டில் அமிர்தலிங்கத்தைத் துரோகியென்று சுட்டுக் கொன்றிருக்கத் தேவையில்லை, தமிழீழத்தைக் கைவிட்ட ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண முனையும் ஏனைய தமிழ் கட்சிகளைத் துரோகிகளெனக் குற்றம் சாட்டவும் தேவையில்லை.

அமிர்தலிங்கத்தைச் சுட்டபோது, தமிழீழத்தைக் கைவிட்டதால்தான் அவருக்கு இந்தத் தண்டனை, தான் தமிழீழத்தைக் கைவிட்டால் தனக்கும் இதே தண்டனையை நீங்கள் தரலாமெனப் புலிகள் தலைவர் பிரபாகரன் கூறியது தற்போதும் செல்லுபடியாகுமாவென அண்மையில் வன்னியில் நடந்த புலிகளின் பத்திரிகையாளர் மாநாட்டில் பத்திரிகையாளர் நிருபமா சுப்பிரமணியம் பிரபாகரனிடம் நேரடியாகக் கேட்ட கேள்விக்கு அவர் "ஆம்" இப்போதும் அப்படித்தான் என்றே பதிலளித்துள்ளார். இந்தக் கூற்று மூன்று விடயங்களைக் குறிக்கிறது. ஒன்று புலிகள் தமிழீழத்துக்காகவே போராடுகிறார்கள், மற்றது, அதனைப் புலிகள் இன்னும் கைவிடவில்லை, மூன்றாவது அப்படிக் கைவிட்டால் தனக்கும் மரண தண்டனை பொருந்தும்.

புலிகள் தலைவரின் கூற்று, புலிகள் தனிநாட்டுக் காகப் போராடவில்லையென்ற பாலசிங்கத்தின் கூற்றுக்கு மாறுபாடாக உள்ளது.

அத்தோடு புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதே அவர்களின் அடிநாதமான சுலோகமாக உள்ளதேயன்றி சுயநிர்ணய உரிமையல்ல. புலிகளின் தமிழீழ வரைபடமும் ஐக்கிய இலங்கைக்குள் அமைந்ததாக இல்லை.

1976ல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னிறுத்திய இத் தமிழீழக் கோரிக்கைக்கு மக்களாணை கிடைத்தது. மிதவாத அரசியல் கட்சியான கூட்டணியே தமிழீழக் கோரிக்கையை முன்வைத்திருக்க, ஆயுதமேந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த புலிகள் இயக்கம் அதற்குக் கீழான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையே முன்னிறுத்திப் போராடினர் என்று கூறுவது அபத்தமானதாக உள்ளது.

தாய்லாந்துப் பேச்சின் பின் பாலசிங்கத்தின் பேட்டியையொட்டித் தற்போதைய கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியிடம் லண்டன் பி.பி.சி. தமிழோசை அபிப்பிராயம் கேட்டபோது, வட்டுக்கோட்டை மாநாட்டில் தாம் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்திருந்ததாகவும், பின்னர் தந்தை செல்வா, தமிழீழத்துக்கு மாற்றான ஒரு தீர்வை அரசாங்கம் முன்வைத்தால் பரிசீலிக்கத் தயாரென்று கூறியிருந்ததாகவும், அதனால் தமக்கு இது புதியதாய்த் தெரியவில்லையென்றும் கூறியிருந்தார்.

வன்னிப் பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகள் தலைவர் பிரபாகரன் தெரிவித்த கருத்து மிகத் தெளிவானதாக இருந்தது.

நாம் தனிநாட்டுக் கோரிக்கையை இன்னும் கைவிடவில்லை. பேச்சுவார்த்தையில் அரசாங்கம் தமிழ் மக்களின் தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, தாயகம் ஆகிய கோட்பாடுகளை நிறைவு செய்யக் கூடிய தீர்வொன்றை முன்வைத்தால் அதைப் பரிசீலிக்கத் தயார். அதுவரை ஆயுதங்களையும் கைவிடப்போவதில்லை. என்பதே அதன் சாரம்.

நாம் தனிநாட்டுக்காகவல்ல சுயநிர்ணய உரிமைக்காகவே போராடுகிறோமென பாலசிங்கம் தற்போது தெரிவித்திருப்பது வன்னியில் புலிகள் தலைவர் பிரபாகரன் கூறியதற்கு மாறுபாடானதாகவே புலப்படுகிறது.

புலிகள் தலைவர் பிரபாகரன் கூறிய அதே விடயத்தைத்தான் தற்போது பாலசிங்கம் வேறு வகையில் கூறுகிறார் என்று வாதாடக் கூடியதாகவன்றி இங்கு இந்த மாறுபாடு தெளிவாக வெளித்தெரிகிறது.

அது-தனிநாட்டுக்காகவே போராடிக் கொண்டிருக்கிறோம். ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி முன்வைக்கப்பட்டால் பரிசீலிப்போம். இது-சுயநிர்ணய உரிமைக்கே போராடுகிறோம். சுயாட்சித் தீர்வொன்று வழங்கப்படாவிட்டால் தனிநாட்டுக்காகப் போராடுவோம்.

எது எவ்வாறானாலும் புலிகள் தலைவர் பிரபாகரன் தெரிவிக்கும் கருத்தே புலிகளின் இறுதி முடிவாக இருக்குமென்பது திண்ணம்.

பாலசிங்கம் தற்போது கூறியுள்ளதை அவர் ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதுதான் இக் குழப்பத்திற்கு விடை தரும். யார் விடை காண்பது?

# நாலாவது கோட்பாட்ட ஏங்க கைவிட்டாங்க?

ஆமாங்க, இப்ப பெரிசா பிரபல்யமா பேசிக்கறாங்களே "திம்புக் கோட்பாடு, திம்புக் கோட்பாடு"ன்னு, அது அத்தனையும் நல்ல விஷயங்க எங்கறதில எனக்கு மாத்தபிப்பிராயோங் கெடையாதுங்க.

தேசிய இனமுங்கறத அங்கீகரிக்கணும். சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கணும். தாயகக் கோட்பாட்ட அங்கீகரிக்கணும், எல்லாம் சரிதாங்க. ஆனாப்பாருங்க அதே திம்புல நாலாவதா ஒரு கோரிக்கையை வைச்சாங்கல்லியா? புலிங்க உட்பட அத்தனை தமிழ் இயக்கங்களும் கட்சிகளுமாச் சேந்துதானேங்க அத முன் வைச்சாங்க.? மலையகத் தமுழங்களோட பிரஜா உரிமையை அங்கீகரிக்கணும் எங்கற அந்த நாலாவது திம்புக் கோரிக்கை! அது எங்கேங்க? ஏங்க, மலையகத் தமுழங்களுக்கு பிரஜா உரிமை பூராக் கெடைச்சுட்டுதாங்க.? இல்லீங்களே! அரைகொறையாத் தானேங்க கெடைச்சது? முழுமையாப் பெத்தெடுக்கணுமுங்கற கோரிக்கையைத்தானேங்க நம்ம மலையகத் தலைவங்க ரெண்ணுபேரும் இன்னும் மாறிமாறி சொல்லிகிட்டு வாறாங்க.

அப்புடி இருக்கறப்ப, நம்ம பிரஜா உரிமைக் கோரிக்கை இன்னும் செல்லுபடியாத்தானேங்க இருந்துகிட்டு வருதுங்க? அப்ப ஏங்க திம்புக் கோட்பாட்டில சொல்லியிருக்கற நாலு கோட்பாட்டில இருந்து நம்மட பிரஜா உரிமைக் கோட்பாட்ட மட்டும்அங்கிட்டு தூக்கிப் போட்டுப்புட்டாங்க? தாய்லாந்துப் பேச்சிலகூட புலிங்க பேச்சாளரா பேட்டி குடுத்த அன்ரன் பாலசிங்கங்கூட திம்புக் கோட்பாடுங்களைத் தான் தாங்க வலியுறுத்துறதாச் சொன்னப்போ அந்த நாலாவது கோட்பாடுங்கற நம்ம பிரஜா உரிமைக் கோட்பாட கைகழுவி விட்டுபுட்டாரே! தமுழங்க எங்கறப்போ மலையகத் தமுழங்களுந்தா தமுழங்க எங்கறாங்க. ஆனா தமுழங்களோட உரிமைகள் கோருறப்போ, ஏங்க மலையகத் தமுழங்களக் கைவட்டுட்டாங்க. பேச்சுவார்த்தையில நம்ம மலையகத் தலைவங்களும் கலந்துக்கணுமுன்னு வலியுறுத்தினப்ப யாருமே அதுக்கு காதுகுடுக்கல. தீர்வுண்ணு வாறப்போ அது மலையகத் தமுழங்களோட பிரச்சனைக்குமான தீர்வா அமையணுங்கறது தாங்க எங்களுக்கு நல்லது.

இப்ப வாற சந்தர்ப்பத்த வுட்டுப்புட்டு பின்னாடி எப்போங்க நாம நம்ம உரிமைங்களக் கோர முடியுங்க? எல்லாம் முடிஞ்சப்புறோ, நாம மட்டும் தனிய எழும்பி நிண்ணு நம்ம பிரச்சனைக்காக அரசியல் யாப்பை மாத்துண்ணு கேட்டா யாருங்க காது கொடுப்பான்?

அரசியல் யாப்ப மாத்திறதெங்கறது எத்தனையோ பிரையாசைக்கப்புறம் நடக்கப் போற காரியம். அப்புடியொண்ணு நடக்கறப்போதே நாமளும் நமக்குண்டான உரிமைங்க, அதிகாரங்கள யாப்பு மூலமா உறுதிப்படுத்திக்கறது தாங்க விவேகமான காரியம்.

அப்புடியில்ல, நமக்கு இன்னுங் காலங்கெடக்குதுண்ணு வுட்டுப்புட்டிருந்தா காலா காலமா நம்ம தலைவிதி இப்பிடியின்னே ஆகிப்போடுங்க. நாம தாங்க நமக்காகப் பேசணும், போராடணும், மத்தவுங்க நமக்கு நாலுவார்த்தை ஆதரவாப் பேசலாங் கொள்ளலாம், ஆனா அவுங்களே நமக்காக எல்லாத்தையும் செஞ்சு தந்துபுட்டு போயிட மாட்டாங்களே?

இந்தாப் பாருங்க, தாய்லாந்துப் பேச்சில மலையகத் தமுழங்கண்ணு இங்க ஒரு சமுதாயம் இருக்குங்கறதுக்கான அடையாளமே தெரியலிங்களே! முஸ்லீங்க தங்கட நிலைமை என்னான்னு குரல் குடுத்தாங்க- அவுங்களுக்கு பேச்சுவார்த்தையில எடங்கெடச்சுது. நம்ம தலைவங்க, நமக்கொண்ணும் பிரச்சனையில்ல, இங்கயே அரசாங்கத்தோடயே பேசித் தீத்துக்கறோமுண்ணு பணிஞ்சு போயிட்டாங்க, இவங்கள ஒதுக்கிப்புட்டாங்க!.

ஏங்க, முஸ்லிம் தலைவங்களும் இவுங்க போல அமைச்சருங்களாத்தானே இருக்காங்க, அரசாங்கத்தில இருக்காங்க, அவுங்க தாங்க அரசாங்கத்தோடயே பேசிக்கறோமுண்ணு ஒதுங்கிக்கலையே?. தங்களுக்கும் இடந்தரணுமுண்ணு முண்டு பிடிச்சுப் போய் பேச்சுவார்த்தையில கலந்துகிட்டாங்க இல்லையா? நமக்கு ஏங்க அந்த தில் இல்லாமப் போச்சு?

அரசாங்கத்தோட பேசித் தீர்த்துக்கலாமுங்கறாங்களே அங்கயும் பாருங்க முஸ்லிம் தலைவங்க சுறுசுறுப்பா செயற்பட்ட மாதிரி இவுங்க செயற்பட்டிருக்கிறாங்களா? போன அரசாங்கக் காலத்தில புது அரசியல் யாப்புண்ணு வரையறப்போ, தங்கட கோரிக்கையான முஸ்லிம் தனிமாநிலக் கோரிக்கைய, தென்கிழக்கு மாகாண சபையிங்கற வடிவமாக அதில போட்டுகிட்டதோட, அத அரசாங்கத்தோட ஆலோசனையாவே சொல்ல வைச்சுட்டாங்கதானே? நம்ம மலையகத் தலைவங்களால என்னங்க முடிஞ்சுது? பின்னாடி, இடைக்கால நிர்வாக சபையின்னு சந்திரிகா அரசாங்கம் தெரிவிச்சப்போ கூட அந்த இடைக்கால நிர்வாகத்தில முஸ்லிங்களுக்கு புனர்வாழ்வு அமைச்சுப் பதவிய உத்தரவாதப்படுத்தணுங்கறதிலயும் கண்ணுங் கருத்துமா நிண்ணு நிலைநாட்டினாங்களே, அது பின்னாடி மொத்தமா நடைமுறைக்கு வரல்லீன்னாக்கூட அவுங்க தங்க பிரயாசைய செய்தாங்கறத ஏத்துக்கணுமில்லியா?

நம்ம ஆளுங்க என்ன பண்ணினாங்க? மலையகத் தலைவங்களா இருந்தும் தோட்டத்துறை அமைச்சைக் கூட தங்களுக்கு உரித்தான அமைச்சுண்ணு கேட்டு வாங்கிக்க முடியல்ல, எப்புடீங்க பின்னாடி ஒரு காலத்தில அரசாங்கத்தோட மெதுவாப் பேசி நம்மோட உரிமைங்கள நிலைநாட்டிக்கப் போறாங்களாம்?

நம்ம தலைவங்க, கண்முன்னாடியே திம்ப பேச்சுவார்த்தையில இருந்த பிரஜா உரிமைக் கோட்பாட்டை கோட்டை வுட்டுட்டு இருக்காங்க. புலிங்க தலைவங்கள வன்னிக்கு, மட்டக்களப்புக்குன்னு மாறி மாறி பாஞ்சு போயி சந்திக்கற தலைவங்க, அவுங்களோட பொங்குதமிழ் கூட்டங்களுக்கு ஓடிப் போய் கலந்துக்கறவங்க, வெளிநாடுகளுக்கும் போய் மேடைப் பேச்சு பேசிறவங்க, ஏன், நம்ம மலையத்திலேயே பொங்குதமிழ் நடத்திறவங்க, ஏங்க, புலிங்ககிட்ட இந்தப் பிரஜா உரிமையைத் திம்புக் கோட்பாட்டுல இருந்து நீக்கிட்டீங்கண்ணு ஒரு வார்த்தை கேக்கல்ல?

இப்பிடியிருந்தா எப்பதான் நாம வாய்தெறக்கப் போறோங்க?

மலைக்குருவி

---

முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன?

# மொட்டையாக பதில் சொல்லிக் குழப்பும் தலைவர்கள்

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சியில் "எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்று தம்மைத் தாமே கேட்டுக்கொள்ளும் நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது முஸ்லிம் சமூகம். குறிப்பாக வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் தற்போதைய சமாதான முயற்சிகளின் முடிவில் தமது அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு என்ன கதி ஏற்படும் என்பதை ஊகிக்க முடியாத நிலைமைக்குள் இருக்கிறார்கள்.

இலங்கையின் அரசியல் அரங்கில் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக முஸ்லிம்களுக்குக் குறைவின்றிக் கிடைக்கும் ஒரு விடயம் வாக்குறுதி மட்டும்தான். ஒவ்வொரு பிரச்சனையின் போதும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வாக்குறுதிகளைப் பெற்றுத் தருவதில் முஸ்லிம் தலைவர்களுக்கு நிகர் அவர்களேதான். முஸ்லிம்கள் நேரடியாகப் பாதிப்புக்குள்ளான சந்தர்ப்பங்களில் நிவாரணங்கள் பெற்றுத் தருவதில் அரசாங்கத்திடமிருந்து வாக்குறுதி வாங்கித் தந்தது முதல், யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை அங்கு மீளக் குடியமர்த்த புலிகளிடமிருந்து அனுமதி பெற்றுத் தந்தது வரை ஏகப்பட்ட வாக்குறுதிகள் முஸ்லிம் சமூகத்திற்குத்தலைவர்களால் வழங்கப்பட்டு விட்டது.

இந்த வரிசையில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் நிறைவேறும் என்று உரத்த குரலில் மற்றொரு நம்பிக்கையூட்டும் வாக்கு மூலம் கடந்த வாரம் தாய்லாந்திலிருந்து வழங்கப்பட்டது. முஸ்லிம்களின் அபிலாஷை என்ன என்று தெளிவாகச் சொல்லாத நிலையில் அவர்களின் அபிலாஷை நிறைவேற்றப்படும் என்று கூறுவது தெளிவற்றதாக உள்ளது.

அரசாங்கமும், புலிகளும் கூடிப் பேசி முஸ்லிம்கள் மீது திணிக்கும் ஒரு தீர்வு முஸ்லிம்களின் அபிலாஷை என்று வர்ணனை செய்யப்படப் போகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. முஸ்லிம்கள் எத்தகைய அரசியல் அதிகாரங்களை எதிர்பார்க்கிறார்கள் என்று தெளிவுபடக் கருத்துக் கூறும் பண்பு முஸ்லிம் தலைவர்களிடம் நீண்டகாலமாகவே கிடையாது. மறைந்த அஷ்ரப் கூட தென்கிழக்கு அலகு, கரையோர மாவட்டம் என்று குழப்பமான அதிகார பகிர்வுகள் குறித்த கருத்துருவம் ஒன்றையே காலத்துக்குக் காலம் கூறி வந்தார். அந்தக் குழப்பத்தின் தொடர்ச்சி இன்று ரவூப் ஹக்கீமிடமும் காணப்படுகின்றது. வடக்கு-கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கு எவ்வாறான அரசியல் தீர்வொன்றை முன்மொழிகிறீர்கள் என்று ஹக்கீமிடம் கேட்கப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும், எமது மக்கள் தமது சொந்த மண்ணில் கௌரவமாகவும், தனித்துவத்துடனும் வாழக் கூடிய ஒரு தீர்வையே முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்க்கிறது எனக் கூறுகிறார்.

ஹக்கீம் சொல்வது சரிதான். கௌரவமாகவும், தனித்துவமாகவும் வாழத்தான் தீர்வு. அந்தத் தீர்வின் அதிகார வடிவம் என்ன என்பதே கேள்வி. இதைத் தெளிவுபடுத்தாதுபோனால் வேறு யாரும் திணிக்கும் ஒரு தீர்வை முஸ்லிம்களின் தலையில் கட்டிவிட்டு இது தான் ஹக்கீம் சொன்ன கௌரவமான தீர்வு என்று கூறுவார்கள்.

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாகக் கூட முஸ்லிம்கள் மத்தியில் தெளிவான நிலைப்பாடு கிடையாது. சிலர் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கிறார்கள். ஹக்கீம் தரப்பினர் நிபந்தனையுடன் அங்கீகரிப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், என்ன நிபந்தனை என்று கடைசி வரையில் சொல்லவே மாட்டார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ்தான் குழம்பிப் போயிருக்கிறதென்றால் நுஆ உள்ளிட்ட ஏனைய முஸ்லிம் கட்சிகள் ஒரு பதிலைக் கூடக் கூறமுடியாமல்.... யார் எதைச் சொன்னாலும் ஓ... போடு.... தான்!

---

# தாய்லாந்தில் தீருமா?... தாய் மண்ணின் துயரம்!

## புலம்பெயர்ந்து போனவர்களின் புலம்பல்!

பிறந்து விட்டது சமாதானம்! ஓய்ந்து விட்டது யுத்தம்! இது வரை கால வரலாற்றில் இப்படியொரு சமாதான சூழல் மலர்ந்ததில்லை! இவ்வாறு ஊதித் தள்ளுகின்றன ஐரோப்பிய, கனேடிய ஊடகங்கள்!

இனியென்ன....? மூட்டை முடிச்சுக்களைக் கட்டவேண்டியதுதான், புலம்பெயர்ந்து வந்தவர்கள் திரும்பிப் போக வேண்டியதுதான்! என்ற எண்ணங்கள் மக்கள் மனங்களில் வளரும்படியாகத் தமது பிரச்சாரப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன அங்குள்ள ஊடகங்கள்!

புலம் பெயர்ந்த மக்களின் மனங்களில் சமாதானம் பற்றிய எண்ணக்கருக்களை வளர்ப்பது, அது சாத்தியமாகாது போனால் மீண்டும் யுத்தம் பற்றிய உணர்வுகளை ஊட்டுவது என்ற ஒரு சுழற்சி முறையிலான மனமாற்றங்களை ஏற்படுத்துவதில் சம்பந்தப்பட்ட ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன.

மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மாற்றுக் கருத்துக்களையே கொண்டிருக்கின்றனர். எமது இதுவரை கால அரசியல் வரலாற்றை மீளாய்வு செய்து பார்ப்பதில் தங்களது கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். கடந்த கால அனுபவங்களிலிருந்து தாம் கற்றுக் கொண்ட விடயங்களையே தமது முடிவாக ஏற்றுக்கொண்டு யாருடைய கருத்துக்களைப் பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் இருப்பதாகத் தெரிகின்றது.

நான்கு இயக்க கூட்டமைப்பும், ஏனைய அமைப்புகளும் இணைந்து திம்புவில் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு என்ன நடந்தது?... இலங்கை இந்திய ஒப்பந்த முடிவுகள் எங்கு போய் முடிந்தன?.... அதன் தொடர்ச்சியாக பிரேமதாசா-புலிகள் உடன்படிக்கை எமது பிரச்சினைக்கு என்ன தீர்வைக் கொடுத்திருந்தது?..... சந்திரிகாவிற்கும் பிரபாகரனுக்கும் இடையில் நடந்த கடிதப் பரிமாற்றங்களும், அந்தப் பேச்சுவார்த்தை முடிவுகளும் எமக்கு என்ன பாடத்தைப் புகட்டியிருக்கின்றன?... இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தெட்டத்தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கும் மக்கள் இன்றைய பேச்சுவார்த்தை முடிவுகளும் எங்கு போய் முடிகின்றனவோ தெரியாது என்ற ஏக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு பேச்சுவார்த்தைகளின் போதும் தம்மைத் திருப்பியனுப்ப மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கின்றனர். திரும்பவும் தம் மீதான திருப்பியனுப்பும் தீர்மானங்கள் மீளாய்வு செய்யப்பட்ட வரலாறுகளை எண்ணிப் பார்க்கின்றனர். ஆனாலும் ஒவ்வொரு சமாதான சூழ்நிலைகளின்போதும் கணிசமான தொகையிலான மக்களை, சம்பந்தப்பட்ட ஐரோப்பிய நாடுகள் திருப்பியனுப்பிய கசப்பான சம்பவங்களையும் அவர்கள் எண்ணிக் கலங்குவதாகத் தெரிகிறது.

இன்றைய சமாதான சூழலில் பெருந்தொகையான மக்கள் தினம் தினம் இங்கு வந்து தமது தாயக மண்ணைத் தரிசித்துச் செல்வதில் ஆர்வம் காட்டியும் வருகின்றனர். இதற்கெனப் பல லட்சம் பணத்தையும் செலவு செய்கின்றனர். காரணம் என்ன?.... மீண்டும் யுத்தம் தொடங்கினால் தாம் இங்கு வந்து போவது சாத்தியமற்றது. யுத்த சூழலில் இங்கு வந்து போவதில் பல அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடும். ஆகவே காற்றுள்ள போது தூற்றிக்கொள்ளும் கைங்கரியத்தை அவர்கள் கையாண்டு வருவதாகத் தெரிகிறது. தாம் இங்கு நிரந்தரமாக வந்து மீளக் குடியேறும் சூழ்நிலை குறித்த நம்பிக்கைகள் அவர்களுக்கு இருக்குமேயானால் இவ்வளவு பெரும் தொகைப் பணத்தைச் செலவு செய்து அவர்கள் இங்கு வந்து போக வேண்டிய அவசியம் இல்லை என்பதை அவர்களே வாய் திறந்து கூறியும் வருகின்றனர்.

அடிக்கடி வந்து முகம் காட்டிச் செல்லும் பேச்சுவார்த்தை என்னும் மாய மான்களின் பின்னால் இழுபட்டுச் சென்று, அந்த மாய மான்களின் வலையில் விழ்ந்து தம்மையே மாய்த்துக் கொண்ட மக்கள் இப்போது எதையும் நம்புவதாகத் தெரியவில்லை.

ஊடறுப்பான்

எரியும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு காணப்படாத வரை, அதன் நடைமுறை குறித்த சந்தேகங்கள் நீக்கப்படாத வரை புலம் பெயர்ந்த மக்கள் தமது தாயக மண்ணுக்கு மீளத் திரும்பிக் குடியேற விருப்பமுடையவர்களாக இல்லை. அதுவரை தமது எதிர்காலம் குறித்த அச்ச உணர்வுகளோடு மேற்கு நாடுகளில் தமது வாழ்க்கையை ஓட்டுவதற்கே அவர்கள் பிரியப்படுவதாகத் தெரிகிறது.

இது சாத்தியப்படுமா? பழைய பல்லவிகள்தான் புதிய சமாதான முயற்சிகளிலும் ஓதப்படுமா?... இந்தச் சந்தேகங்களோடுதான் இங்கு வந்து போகின்ற மக்கள் திரும்பிச் செல்கிறார்கள். மீண்டும் எப்போது தமது தாயகத்தைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமோ என்ற ஏக்கங்களோடு விடைபெற்றுச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

எந்த மொழியைப் பேசுவது?... எந்தக் கலாசாரத்தைத் தமது சிறார்கள் பின்பற்றுவது?... என்று ஏற்கனவே அவர்களுக்கு மனப் போராட்டமும், இரட்டை நிலைப்பாட்டுச் சிந்தனையும்! இது ஒரு நிர்ப்பந்தம்!

அதே போல் தாய்லாந்தில் நடக்கும் பேச்சுக்களை வைத்து நிரந்தர சமாதானம் பிறக்க முன்னரே தாம் திருப்பி அனுப்பப்பட்டால்..... இன்னொரு கல்வி முறையில் தொடரப்பட்டிருக்கும் தமது சிறார்களின் கல்வி இடையில் முறிக்கப்பட்டால்... திரும்பி வந்து இங்கு வாழ்க்கையைத் தொடர முற்படும்போது மீண்டும் யுத்தம் மூண்டால்.....

இந்தப் புதிய தலைவலியைச் சுமப்பவர்களாக, எதிர்காலம் குறித்த மனப் போராட்டங்களில் அவர்கள்! ■

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் **குளியலறை உபகரணங்களை**
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

எமது புதிய காட்சியறை
**184-A, Havelock Road, Colombo-05.**
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

## விதுஜா ஏசியன் சொப்

# VIDUJA ASIAN SHOP

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:-031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.
**விதுஜா ஏசியன் சொப்**

---

# Town Recruitment ManPower

*வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிலையம்*
வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற விரும்பும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பெண்களுக்கு வேலை வாய்ப்பு!

**சகல வசதிகளும் இலவசம்**

மத்திய கிழக்கில் மூன்று இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத்தரும் அரசின் திட்டத்தில் நாமும் இணைவோம். முஸ்லிம் முஸ்லிம் அல்லாத பணிப்பெண்களுக்கு விசேட சந்தர்ப்பம் பாஸ்போட் வசதி, அரசாங்கக் கொடுப்பனவு, மருத்துவச் செலவு, பிரயாண டிக்கெட் அனைத்தும் இலவசம்.

**சவுதி அரேபியா**

* வீட்டுப் பணிப்பெண்கள் (முஸ்லிம், முஸ்லிம் அல்லாத) சம்பளம் 450 SR
* வீட்டுச் சாரதி ( முஸ்லிம், முஸ்லிம் அல்லாத) சம்பளம் 600SR
* வீட்டுப் பணியாள் ( ஜோடி/ ஆண், பெண்) சம்பளம் 1050SR

(தற்போது சவூதியில் இலங்கைத் தூதரகம் அமைக்கப்பட்டுள்ளதால், பயணம் நேரடியாக ஒரு வாரத்தில் பயணம் வெளிநாடு செல்வதற்கு முன் நீங்கள் தொழில் புரியப்போகும் இடம், விலாசம், உட்பட சகல தகவல்களையும் முன் கூட்டியே இலங்கையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**குவைட்**

* வீட்டுப் பணிப்பெண்கள் (முஸ்லிம்/முஸ்லிம் அல்லாத). சம்பளம் K.D 40
* சாரதிகள் சம்பளம் K.D 60

(மத்திய கிழக்கு சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்)
**(பயணம் 21 நாட்களில்)**

**ஐக்கிய அரபு இமிரேட்ஸ், டுபாய்**

* வீட்டுப் பணிப் பெண்கள் (முஸ்லிம், முஸ்லிம் அல்லாத)

**(பயணம் 21 நாட்களில்)** சம்பளம் Diram 450

**ஜோர்தான்**

* வீட்டுப் பணிப்பெண்கள் (முஸ்லிம் முஸ்லிம் அல்லாத) சம்பளம் US 125

**பஹ்ரேய்ன்**

* வீட்டுப் பணிப் பெண்கள் (வயது 18-40 வரை) சம்பளம் B.D. 45

**டோஹா கட்டார்**

* வீட்டுப் பணிப்பெண்கள் (வயது 30-40) சம்பளம் Q.R 450

டுபாய்,சாஜா, பஹ்ரேய்ன் போன்ற பல நாடுகளில் பிரதான ஆடைத் தொழிற்சாலைகளில் கீழ்வரும் வேலை வாய்ப்புகள்

* சாஜாவில் தொழில் புரிவதற்கு ஜீகி மெஷின் இயக்குபவர்கள் (பெண்கள்)
* அயன் செய்பவர்கள்.
* உதவியாளர்கள்(பெண்கள்) பயணம் 28 நாட்களில், நேர்முகப் பரீட்சை நாள்தோறும் காரியாலயத்தில் நடைபெறும்.

பாஸ்போட், பாஸ்போட் அளவ 3 பகைப்படம், போஸ்ட் காட் அளவ 2 புகைப்படத்துடன் கீழ்க் காணும் முகவரிக்கு வாருங்கள்.
தொடர்புகளுக்கு:- அனுமதி இல:-AL/1819/02/2002

**38 - 2/1 Symonds Road, Maradana, Colombo-10.**
**Tel- 074-720545 Fax- 074-721046**

---

# விளம்பரப் பகுதி

---



**Wedding PHOTOGRAPHER**
27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933
**Your Satisfaction Is My Success**
Vinoth

---

# மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
**Dr.P.K.Saamy J.D.G.A. NL JP**
**Hon. Prof. (IUMA)**
**Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.**

**கொழும்பில்**
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka.com/drpksami.

---

# நீங்கள் கண்ணாடி அணிபவரானால்

**எந்தரக லென்ஸ் தேவையென உணர வேண்டும்!**

**ஸோலா**
பிளட் டொப்
SOLA
FLAT TOP



சாதாரணமாகப் பாவனையிலுள்ள பைபோகல் லென்ஸ்

**ஸோலா** பிளட் டொப் 21 ம் நூற்றாண்டுக்கு மிகச் சௌகரியமான லென்ஸ்

*நன்மைகள்*

* இடது வலது கண்களுக்கென விசேட லென்ஸ் கொண்டது
* பாரமற்றது * உடையாதது * மிகத் தெளிவானது.

ரூ 1000/-ல் இருந்து

## ரே பேன் ஒப்டீஷியன்

**(பிரைவட்) லிமிட்டட்**
81, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.
தொலைபேசி-327003

மருந்துவ சிபாரிசுக்கமையவோ, நமது கணனி மூலமோ பார்வையைப் பரிசீலித்து அதே தினத்தில் கண்ணாடியைப் பெறுங்கள்.

---

# காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கவும்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
**Tel: 074-519754**

---

# வதிவிட விசா பெற்று வெளிநாடு செல்கிறீர்களா?

**உங்கள் பாரத்தை நாங்கள் சுமக்கத்தயார்!**

உலகின் எப்பாகத்திற்கும் தங்களது வீட்டுப் பொருட்களை குறைந்த செலவில் துரிதமாய் அனுப்புவோம்.

☞ அம்மி முதல் ஆட்டுக்கல் வரை
☞ வெள்ளிப்பாத்திரம் முதல் குத்துவிளக்கு வரை
☞ உணவுப் பொருள் முதல் உடுதுணி வரை
☞ தளபாடங்கள் முதல் தரைவிரிப்பு வரை

சகல பொருட்களையும் சிறப்பான முறையில் பொதி செய்து சுங்கத்திணைக்கள நடைமுறைக்கு அமைய காப்புறுதி செய்து பொதிகளாகவோ, கொள்கலன களாகவோ அனுப்பிவைக்கப்படும்.
பிரயாணத்திற்கு 10 நாட்களுக்கு முன் தொடர்பு கொள்க



**DIRECTLINE INTERNATIONAL (PVT) LTD.**
164-1/2, Maha Vidyala Mawatha, Colombo-13.
Tel: 074-610877 - 8 Fax: 94-1-543204
E-mail: directline@wow.lk

(சுங்கத்திணைக்கள அனுமதி பெற்ற முகவர்)

---

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி து. அபிதா 16.09.2002**

யாழ் ஆறுகால் மடம், நல்லூரைச் சேர்ந்த தவநேசன்-சித்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வி அபிதா தனது முதலாவது பிறந்த நாளை 16.09.2002 அன்று கனடா மிசிஸ் ஒகா அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். அபிதாவை அன்பு அப்பா, அம்மா, நல்லூர் அம்மப்பா, அம்மம்மா, ஆறுகால் மடம் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மாமார்கள், நல்லூர் பெரியப்பா, மம்மி, கனடா ஈசு மாமா, விக்கி மாமா, லண்டன் குட்டி மாமா, இத்தாலி பவானி அத்தை, மலக்கியாஸ் மாமா, காந்தன் சித்தப்பா, லூட்ஸ் அன்ரா, எமில் சித்தப்பா, மாலினி அத்தை, லண்டன் கண்ணன், விமல் சித்தப்பாமார், கனடா வதனி அத்தை, கருணா மாமா, சோபி, ஹறினி, கிருஜான், மச்சாள், மச்சான், இத்தாலி சாருதா மச்சாள் ஆகியோர் நல்லூர் முருகன் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுச் சீரும் சிறப்புமாகக் கல்வியும் செல்வமும் பெருகப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: தவநேசன்-சித்திரா-கனடா

---



# அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாயிச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, சுக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

# தாய்லாந்தில் புதிதாக ஏதாவது பேசப்பட்டதா?

வெகு விமரிசையாக செப்டெம்பர் 16-18 வரை நடைபெற்ற அரசு-புலிகள் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் பற்றிப் பல்வேறு விதமான வியாக்கியானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உட்படப் பலர் விளக்க உரை எழுதியது போல் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் பற்றி அரசியல்வாதிகள் தொடக்கம் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் வரை பல்வேறு விதமான விளக்கங்களைச் சகல விதமான ஊடகங்களிலும் வெளிப்படுத்துகிறார்கள்.

> அரச சார்பு ஊடகங்கள், புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டதாக எழுதுகின்றன. பேசுகின்றன, பிரதமர், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரின் பேச்சுக்களிலும் இவ்வாறு தான் பிரதிபலிப்புக்கள் உருவாகின்றன. அதாவது பிரிவினையைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தயாராகிவிட்டார்கள் என்று. ஆனால் தமிழ் ஊடகங்கள், புலிகளின் பேச்சாளர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு அளித்த பதிலையே முன்னிலைப் படுத்தியிருக்கின்றன.

அரச சார்பு ஊடகங்கள், புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டதாக எழுதுகின்றன. பேசுகின்றன, பிரதமர், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரின் பேச்சுக்களிலும் இவ்வாறு தான் பிரதிபலிப்புக்கள் உருவாகின்றன. அதாவது பிரிவினையைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தயாராகிவிட்டார்கள் என்று.

ஆனால் தமிழ் ஊடகங்கள், புலிகளின் பேச்சாளர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு அளித்த பதிலையே முன்னிலைப் படுத்தியிருக்கின்றன.

"நாம் ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணயம், தாயகம், தேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்வு காண முனைவோம். அது சாத்தியப்படாதவிடத்து, ஒடுக்குமுறை தொடருமிடத்து, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசொன்றை அமைப்பதற்கான போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இங்கு என்ன குழப்பம் நிலவுகிறதென்றால் பாலசிங்கம் அவர்கள் சுயநிர்ணய உரிமை பற்றியே பேசுகிறார். சுயநிர்ணய உரிமை என்ற மார்க்சீயச் சொற்பிரயோகத்தின் பரந்த அர்த்தத்தை விளங்கிக் கொள்ளாததாலேயே தத்தமக்குச் சாதகமாக இந்தச் சொற்பிரயோகத்தை ஊடகங்கள் எடுத்தாளுகின்றன.

இந்தச் சொற்பிரயோகங்கள் ஒருபுறமிருக்க மிகப் பெரிய சர்வதேச விளம்பரத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் முதல் கட்டத்தில் சாதிக்கப்பட்டவை பற்றிப் பேசப்படுபவை சற்று மிகைப்படுத்தலாகவே காணப்படுகிறது.

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, கண்ணிவெடி அகற்றல் ஆகியவற்றுக்காகப் புலிகள் -அரசு தரப்பிலிருந்து பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை நியமித்தல். இந்தக் குழு அபிவிருத்தி நடவடிக்கைகளில் கூட்டாக ஈடுபடும். குறிப்பாக வடக்கு கிழக்கின் அபிவிருத்தி முற்று

## தாகூர்

முழுதாகப் புலிகளின் கைக்குச் செல்லும்.

இதேபோல் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் பொதுமக்கள் வாழும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள படை முகாம்கள் பற்றிய விவகாரங்களைக் கையாளுவதற்கு ஒரு குழுவை, அரச தலைவர்கள், படைத் தளபதிகள், -புலிகளின் அரசியல் தலைவர்கள், படைத் தளபதிகள் அடங்கியதாக அமைப்பது.

இந்த இரண்டு விடயங்களையும் ஓரளவு ஆராய்ந்து பார்த்தால் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை ஒத்ததாகவே காணப்படுவதை அவதானிக்கலாம்.

1988 இல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாண அரசு அமைக்கப்பட்டபோது புனர்வாழ்வு புனரமைப்பு விடயம் முதன்மைப்படுத்தப்பட்டது. அதற்குப் பிரத்தியேகமாக ஒரு அமைச்சு இருந்தது. இந்தியாவின் அனுசரணையுடன் சர்வதேச உதவிகளை நேரடியாக வடக்குக் கிழக்கிற்குக் கொண்டுவரக் கூடியதாக இருந்தது.

ஏன் யப்பானியக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் நேரடியாகப் பொருட்களை இறக்கின.

ஆனால் அக் காலத்தில் இப்போதிருக்கும் அளவிற்குப் புதிய படைமுகாம்களோ, அதி உயர் பாதுகாப்பு வலயங்களோ இருக்கவில்லை. இன்றுடன் ஒப்பிடுகையில் இழப்புகள், அழிவுகள் மிகக் குறைவாகவே இருந்தன.

ஆனால் இன்று மலையளவு சுமைகளை, பேரழிவுகளைத் தமிழ் சமூகத்தின் மீது சுமத்திவிட்டு அதனை அகற்றுவதற்கு பாரிய அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

ஆனால் கடந்த காலங்களில் பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டவர்கள் துரோகிகள் என அழைக்கப்பட்டார்கள். அதிகாரப் பகிர்வுக்கு இலங்கை அரசின் மீது அழுத்தம் பிரயோகித்த இந்தியாவுடன் பகை வளர்க்கப்பட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னான காலப் பகுதியில் அழிந்துபட்ட எமது மக்களின் வாழ்வைப் புனரமைக்க முற்பட்டவர்கள் இழிவுபடுத்தப்பட்டார்கள். அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும், வடக்கு கிழக்கின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் வெவ்வேறு காலகட்டங்களில் வலியுறுத்தியவர்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். அல்லது அச்சுறுத்தப்பட்டார்கள்.

தற்போது தாய்லாந்தில் நடப்பது போலத்தான் விவகாரங்கள் கையாளப்படுமானால் ஏன் அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற கேள்வி நியாயமாக எழவே செய்கிறது.

இந்தக் கேள்விக்கான பதிலில்தான் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மை புலப்படும்.

# ஆளுக்காள் முகம் சுழிக்கும் எம்.பி.மார்

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரா உன்ட ஆலய வளவச் சுற்றி இப்படியொரு கூட்டம். இது தொடர்ந்தும் நிலைக்க வேணுமெண்டதுதான் எண்ட விருப்பம்.

கனகாலத்துக்குப் பிறகு இந்த வரிசம் எல்லாச்சனத்தையும் தேரோட்டத்தில காணக் கிடைச்சது மனசுக்குள்ள எவ்வளவு சந்தோசமாக இருந்திச்சித் தெரியுமா? எனக்கெண்டால் ஒரு பக்கம் கவலையாகவும் மறுபக்கம் சந்தோசமாகவும் ரெண்டும் கெட்டான் நிலைதான். உங்களுக்கும் நிறையப் பேருக்கு அப்படித்தான் இருந்திருக்குமெண்டு நினைக்கிறன்.

83 கறுப்பு ஜூலைக் காலத்துக்குப் பிறகு, கிழக்கால இருக்கிற அரைவாசிச் சனம் புள்ள குட்டியளோட வந்து நிண்டதப் பார்க்கப் பார்க்க, தேரோட்டத்தக் காணக் காண பழைய நினைவுகள்தான் வந்து போகுது.

முந்தி ஒரு காலத்தில பாலுக்கும் அரிசிக்கும் மட்டும்தான் பேர் போயிருந்த கொக்கட்டிச்சோலையில வரிஷத்துக்கு வரிஷம் தேரோட்டத்துக்கும், பண்டாரியவெளி நாகதம்பிரான் கட்டுக்கும்தான் சனம் வந்து போகும் அதுவும் கால் நடையாகத்தான்.

அதுக்குப் பிறகு வந்த காலங்களில் கொக்கட்டிச்சோலையும், படுவான்கரையும் இயக்கப் பொடியன்மாரின்ர கோட்டையாக, எல்லா இயக்கப் பொடியன்மாருக்கும் அடைக்கலம் குடுத்து அரவணைத்து உபசரிக்கிற இடமாக இப்போவும் நல்ல பேரோடுதான் இருக்குது.

ஆனாலும், இடையிடையே நடந்த சம்பவங்கள் இந்தக் காலத்துக்குள்ள கொஞ்ச நஞ்சமல்ல. இனிமேலும் நல்லது நடக்க வேணும் எண்டுதான் அந்தத் தான்தோன்றீஸ்வரப் பெருமாளிட்டக் கேட்கிறன்.

இறால் பண்ணப் படுகொலை, கொக்ககட்டிச்சோலப் படுகொலை ரெண்டும் எத்தன இளம் புள்ளயளத் தாலி கழட்டி வாழ்விழக்க வச்சது? அதுமட்டுமா சந்தோசமாக ஒற்றுமையாக இருந்த இயக்கப் பொடியள் ஒருவருக்கொருவர் அடிபட்டு இன்னும் எத்தனையோ பேர் காணாமல் போனாங்கள். இதெல்லாம் கடந்த காலத்தில் நிகழ்ந்த கசப்பான சம்பவங்கள். இனியும் இதெல்லாம் ஒரு காலமும் ஒருத்தரையொருவர் நெருங்கக் கூடாது, ஊர் ரெண்டு பட்டால் கூத்துக்காரனுக்குத்தான் கொண்டாட்டம் எண்டு அடிக்கடி காளிக்குட்டிப் போடியார் சொன்னது இப்பவும் எனக்கு ஞாபகம் வருகுது.

அதிகமாக அப்படியொண்டும் சொல்றன் எண்டு நினைக்க வேணாம். மனசில பட்டதச் சொல்றன். மறுபடியும் நமக்குள்ள கரச்சல் கிரச்சல் வரக்கூடாதெண்ட விருப்பம்தான்.

அதைவிடுங்க, மறுகா என்னடா எண்ட நம்மட தங்கவடிவேல் எம்.பி. ஐயா இப்ப ஒரேயடியா ஊர்ப் பக்கம் தலகாட்டாமலுக்குக் கொழும்போட காலத்தக் கழிக்கிறாராம் எண்டும் அங்கால இங்கால எல்லாப் பக்கமும் ஒரே கதையாக் கிடக்குது. யோசப் பண்ணைக்கும் அவரப் புடிக்காது. வெள்ளிமல அண்ணைக்கும் அவரக் கண்ணில காட்ட ஏலாது. ஆனாலும், இந்த மனிசன் எல்லாரையும் விடக் கூட வோட் எடுத்தும் கூட என்னத்தச் செய்து போட்டார் எண்டு கேட்கிற கேள்வியிலையும் நியாயமிருக்கத்தான் செய்யுது.

பாதுகாப்புக்கெண்டு குடுத்த 'தடிகள்' சொந்த ஊர்ப் பொடியள்ற தலையில வச்ச விசயம்தான் இன்னமும் ஒரே எரிஞ்சி புகை கக்கிக் கொண்டு இருக்குது எண்டு சொல்றாங்க.

அதைவிட இவர எலக்சனுக்குப் பேர் குடுக்க செலக் பண்ணின கூட்டமைப்பில இருக்கிற இயக்கத்தின்ர தலைவர் லண்டனில இருந்து வந்தவுடன இவருக்கெதிராக நடவடிக்கையெடுக்க இருக்காராம் எண்டும் ஒரு கதை பரவியிருக்குது.

ஒரு வரிசம் முடியிறதுக்குள்ளேயே ஊருக்குள்ள தெரிவான மூண்டு எம்.பி. ஐயாமாரும் ஒவ்

**கிழக்கான்**

வொரு கோணத்தில மூக்க நீட்டிக் கொண்டு திரியிறாங்க. இப்படியிருந்தால் நம்பி வோட் போட்ட சனத்துக்கு இருக்கிற காலத்தில என்னத்தச் செய்யப் போறாங்களோ, எனக்கெண்டால் ஒண்டு விளங்கல்ல.

அதை விட இனியொரு எலக்சன் கிலக்சன் அடுத்தமுறை வந்தால் தம்பிராஜா தங்கவடிவேல் என்ற பேர் மட்டும் இருக்காது எண்டு 'சுவராக'ச் சொல்றாங்க.

இதைவிட இவர் கொஞ்ச நாளைக்கு முதல் முறக்கொட்டாஞ்சேனைப் பள்ளிக்கூடத்தில் இருந்து ஆமிக்காரர் வெளியேறின நிகழ்வில கலந்து கொண்டு வாள் ஏந்தின சிங்கக் கொடிய ஏத்தினதப் பொடியள் கூட கூப்பிட்டுக் கேட்டவங்களாம்.

அப்பிடி இப்பிடியெண்டு ஏகப்பட்ட பிரச்சனைகள் அதுக்குப் பிறகுதான் கொழும்போட கூடக் காலத்தச் செலவழிக்கிறாராம் எண்டு சொல்றாங்க. இப்பிடித்தான் இருக்குது நம்மட ஊர் நிலமை. ●

# அதிரடி அய்யாத்துரை



சங்காரத் தலைவருக்குத் தலைகுனிவை ஏற்படுத்திற குசுகுசுக் கதைகளை நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளரெண்டு அனைவருக்கும் நாசூக்காகப் பரப்பிப் போட்டு சிங்காரச் சிரிப்போட நிக்கிறாராம் ரங்கார ரவிராசா. ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்த சீவியத்தில ஒருக்காத்தன்னும் பாக்க விடுங்கோவெண்டு சங்கரியார் ரெண்டெழுத்தாரக் கெஞ்சோ கெஞ்செண்டு கெஞ்சியும் அவருக்குப் பாராளுமன்றக் குழுவோட பயணம் போக ரெண்டெழுத்தார் பெமிஷன் குடுக்கேலையாமெண்டு சொல்லிக் கொடுப்புக்க சிரிக்கிறார் குறுந்தாடிக்காரர். அமிரண்ணற்ர வைபவத்துக்குத் தகவல் மட்டும் சொல்லிப் போட்டு அனுமதி வாங்காமல் ரெண்டெழுத்தாருக்கு டிமிக்கி விட்டுட்டுப் பறந்ததுக்கு பணிஷ்ட்மென்ட் போலும். எதுவாயிருக்கட்டன். உள் வீட்டுக் கேவலத்த ஊருக்குள்ள பரப்பிறது உண்டதுக்கு ரெண்டகம் கண்டியலோ!

**சம்பந்தருக்கு** சம்பந்தா சம்பந்தமில்லாத துணிவு சில சமயங்களில பீறிக்கொண்டு வந்திடுறது ஆச்சரியமாக் கிடக்குங்கோ. தாய்லாந்துப் பேச்சில முஸ்லிம் உரிமைகள் பற்றியும் பேசவேணுமெண்டு பேசியிருக்கிறதுக்குப் பேஷ் சொல்லத்தான் வேணும். இப்பிடிப் பேசிற உரிமையைத்தன்னும் அவருக்கு ரெண்டெழுத்தார் குடுத்திருக்கினமோ வெண்டதுதான் கேள்வி. துணிவே துணை!

**கூட்டமைப்பார்** சிலபேருக்கு கூண்டுக்க மாட்டுப்பட்ட நிலையாப் போட்டுது. பாவம் அந்தத் தங்கமான வடிவேலர்! மட்டுநகரில கொட்டமடிக்கலாமெண்ட கனவோட எம்.பி.யானவர் கொஞ்சம் எம்பிக் குதிக்கப் பாத்து இப்ப வம்பில மாட்டுப்பட்டுப் போனார். மொறக்கொட்டாஞ்சேனைப் பள்ளிக்கூடத்துக்குத் தேசியக்கொடியேத்தின துணிவும், தண்ணியடிக்கிறது தன்ர பிறப்புரிமையெண்டு தெருவில மேசைபோட்டுத் தண்ணியடிச்ச சுதந்திர உணர்வும், ஆளிண்ட பதவிக்கே உலையாப் போச்சு. அவற்ர எம்.பி. பதவிய டெலோ பிரசன்னாவுக்கு மாத்திக் குடுக்க ரெண்டெழுத்தார் தீர்மானிச்சிருக்கினமாம். ஆள், ஆரையம்பதி காளிகோவில் பூசைக்கும் போக ஏலாமல் கொழும்பில முடங்கியிருந்து குமுறுறாராம். ம்....துணிவை விட, பௌவியமான பணிவுதான் இப்ப பிழைப்புக்கு வழியெண்டத் தன்ர தலைவர்மாரிட்டக் கேட்டறிஞ்சிருந்தால் ஏனிந்த வம்பு.

**தன்னை வன்னிக்குக்** கூப்பிடுறாங்களில்லையெண்டு வாய்க்கு வாய் நொந்தபடியிருந்த புரட்சிகரக் கட்சிப் பிரேமைத் தலைவர் இப்ப வன்னி அழைப்பு வந்தாலும் வேண்டா வெறுப்பாய்க் கதைக்கிறாராம். "போய்த்தான் என்ன, அவயல் சொல்லுறத்தான் கேட்டுட்டு வரவேண்டிக் கிடக்கு, நாங்கள் சொல்லுறதக் கணக்கெடுக்கினமே இல்லையே" எண்டு அலுத்துக் கொள்ளுறாராம். "நான் என் சரீரம் உட்பட எல்லாம் உனதே"யெண்டு சுந்தரமூர்த்தி நாயனார்போல அடிமைச்சாசனம் எழுதிக் குடுத்த பிறகு என்ன புதுசாய்ச் சொல்ல வேண்டியிருக்காம் இவருக்கு?

**தன்னைக் கொல்லவந்த** பசுவைக் கொல்லுறதும் தர்மந்தானெண்டு சொல்லுவினம். தன்னை யாரும் கொல்ல முந்தி குறைஞ்சது ஐநூறு பேரையாவது கொண்டிட்டுத்தான் சாவேனெண்டு ஜனாதிபதி பிலிமத்தலாவைக் கூட்டத்தில சூளுரைச்சிருக்கிறா. சாகிறதும், சாகடிக்கிறதும், சாகடிக்கப் படுறதுமா எப்பவும் சாவைப்பற்றித்தான் சனாதிபதி வரை பேச்சாயிருந்தால் வாழ்வைப் பற்றி யாருக்குங்கோ நம்பிக்கை வரும்?

**தாய்லாந்துப்** பேச்சுக்குப் பிறகு புலிகளின்ட தத்துவாசிரியர் பாலசிங்கத்திண்ட கூற்றை "புதிய மொந்தையில பழைய கள்"ளெண்டுவியாக்கியானம் குடுத்திருக்கிறார் ஹக்கீம். தனிநாடுதான் தீர்வு, மாற்றுத் தீர்வை அரசாங்கம் முன் வைச்சால் சிந்திக்லாமெண்டதுதான் முந்திக் கேட்ட கதை. சுயநிர்ணய உரிமைப்படி சுயாட்சியொண்டுதான் எங்கள் தாகம். தராவிட்டால் தான் பிரிவினைக்குப் போவம் எண்டது இப்ப சொன்ன கதை . 17 ஆயிரம் வீரர்கள் ரத்தம் சிந்தினது தமிழீழ தாயகத்துக்கா, சுயநிர்ணய சுயாட்சிக்கா எண்டது இப்ப புரியாத புதிராக இருக்குது. இதில் எது பழைய கள்ளு எது புதிய மொந்தையென்கிறார் ஹக்கீம்? எனக்கெண்டால் எதுவும் புரியேல்லையுங்கோ.

# :பர்தாவுக்குள் ஏ.கே. 47

## அமெரிக்கப் படையின் வயிற்றில் புளியைக் கரைக்கும் ஆப்கான் பெண்கள்

ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படையினர் மீது கடந்த நாட்களில் பல்வேறு இடங்களில் திடீர்த் தாக்குதல்கள் இடம் பெற்றன. தலிபான்களையும், அல்கயிதாக்களையும் சல்லடைபோட்டுத் தேடியும் இத்தகைய தாக்குதல்கள் வற்றை அவர்கள் கடத்திச் செல்கின்றனர்.



இடம்பெறுவதால் அவற்றுக்கு ஃபர்தா அணிந்த ஆப்கான் பெண்களின் உதவி இருக்கலாமோ என்ற சந்தேகம் அமெரிக்கப் படைகளுக்குள் பரவலாக எழுந்துள்ளது. இப்போது முக்காடிட்டுச் செல்லும் ஆப்கானிஸ்தான் பெண்கள் சோதனையிடப்படுகிறார்கள். இது அந் நாட்டில் பரவலான எதிர்ப்புணர்வைக் கிளப்பிவிட்டுள்ளது. அமெரிக்கப் படைகள் மீதும், அவர்களுக்கு சார்பான ஆப்கான் ஆட்சியாளர்கள் மீதும் ஆப்கானிஸ்தான் பெண்கள் சீறத் தொடங்கியுள்ளனர்.

எவ்வாறெனினும் ஆப்கான் பெண்கள் ஃபர்தாவுக்குள் வைத்து ஆயுதம் கடத்தும் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஃபர்தாவுக்குள் மறைத்து வைத்துத் துப்பாக்கிகள், துப்பாக்கிகளுக்குத் தேவைப்படும் குண்டுகள், லேப்-டப் கம்ப்யூட்டர்கள், அமெரிக்க இராணுவ வீரர்கள் தங்கியிருக்கும் இடங்களைப் பற்றிய வரைபடங்கள், புதிய ஆட்சியாளர்களின் அலுவலகங்கள், வசிப்பிடங்கள், அவர்களுடைய நடமாட்டங்கள் பற்றிய தகவல்கள் ஆகிய

கோஸ்ட் மாகாணத்தில் நடத்திய திடீர்ச் சோதனையின் போது லேப்-டப் கம்ப்யூட்டர்கள், பாஸ்போர்ட்டுகள், ஒசாமா பின் லேடனின் பிரசார நூல்கள், ராக்கெட் லாஞ்சரில் வைத்து ஏவப்படும் கையெறி குண்டுகள் ஆகியவற்றை ஒரு பெண் மறைத்து எடுத்துச் சென்றதைக் கண்டுபிடித்தனர்.

ஒரு வீட்டில் சோதனை நடத்திய போது 2 பெண்கள் நீண்ட நேரமாக எழுந்திருக்காமல் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்தனர். இதனால் அமெரிக்க வீரர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவர்களை எழுந்திருக்கச் சொல்லிவிட்டு அங்கிருந்த போர்வையை எடுத்த போது அதன் கீழே 2 ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள், 82 மி.மீ. வாய் குறுக்களவு உள்ள பீரங்கி ஆகியவற்றைக் கண்டுபிடித்தனர்.

தே ரெளத் என்ற மாவட்டத்தில் உயர் சக்தி கொண்ட ரேடியோ அன்டனாக்கள் இரண்டையும் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 10 கையெறி குண்டுகளையும் கைப்பற்றினர்.

அமெரிக்க இராணுவ வீரர்கள் பெண்களைத் தடுத்து நிறுத்திச் சோதனையிடுவது இஸ்லாமிய மார்க்க நெறிகளுக்கு எதிரானது என்று சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இது பெரிய பிரச்சினையாக உருவெடுக்கும் என்று தெரிகிறது.

## டயானாவின் இரண்டாவது மகன்

## ஜேம்ஸ் ஹெவிட்டுக்குப் பிறந்தவரா...?



பிரிட்டிஷ் அரச குடும்பத்தவர்களுக்கு எதிலெல்லாம் சந்தேகம் வருவதென்று விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது.

டயானாவுக்கு இரண்டு மகன்கள். ஒருவர் வில்லியம், மற்றவர் ஹரி. இவர்களுள் வில்லியம் தன் 20 வயதுக்குள்ளேயே ஏகப்பட்ட காதல் சமாச்சாரங்களில் சிக்கிப் புகழ் பெற்று விளங்குகிறார். ஹரி நல்ல பிள்ளையாக?! படித்து வருகிறார்.

ஹரியும் வில்லியமும் உருவத் தோற்றத்தில் மிகவும் ஒத்தவர்களாக இல்லை. ஹரியின் முகத் தோற்றம் டயானாவின் காதலர்களில் ஒருவரான குதிரையோட்ட வீரர் ஜேம்ஸ் ஹெவிட்டின் சாயலை ஒத்ததாக உள்ளது. இதனால் ஹரி டயானாவுக்கும் ஜேம்ஸ் ஹெவிட்டுக்கும் பிறந்த குழந்தையாக இருக்கலாம் எனப் பிரிட்டிஷ் மக்களில் அனேகமானவர்கள் நம்புகின்றனர். அரச மாளிகைக்குள்ளும் இந்தச் சந்தேகம் நீண்டகாலமாக உயிர் வாழ்கிறது.

ஜேம்ஸ் ஹெவிட்டுக்கும் டயானாவுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு நிலவியது. இரண்டாவது குழந்தையைப் பெற்றுக்கொள்ள டயானா கர்ப்பமாக இருந்த சமயத்தில்தான் ஹெவிட்டுடனான டயானாவின் உறவு குறித்த சர்ச்சை உச்சத்தில் இருந்தது. ஆனால் ஹரி தன் குழந்தை இல்லை என்று திட்டவட்டமாக மறுக்கிறார் ஜேம்ஸ் ஹெவிட்.

'சண்டே மிரர்' பத்திரிகைக்கு ஹெவிட் பேட்டியளித்துள்ளார். ஹரி சிறு குழந்தையாக இருந்தபோது இளவரசி டயானாவை நான் முதலில் சந்தித்தேன். எனவே அக் குழந்தையின் தந்தை நான்தான் எனக் கூறுவது சரியல்ல. எனினும் உருவ அமைப்பின் சில விஷயங்களில் இளவரசர் ஹரி என்னைப் போலத்தான் தோற்றமளிக்கிறார் என்றார் ஹெவிட்.

பிரிட்டிஷ் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து கிடக்கும் இந்தச் சந்தேகத்தைப் போக்க டயானாவைத் தவிர யாரால் முடியும்?

## 10 ஆவது மனைவியாகப் பள்ளி மாணவியை மணக்கும் சுவாஸிலாந்து மன்னர்

ஆபிரிக்கக் கண்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நாடு சுவாஸிலாந்து. இங்கு மன்னர் ஆட்சிதான் நிலவுகிறது.

சுவாஸிலாந்து மன்னரின் பெயர் எம்ஸ்வாதி. 34 வயதுதான் ஆகிறது. இந்த மன்னருக்கு ஏற்கனவே 9 மனைவியர் இப்போது 10 ஆவது திருமணத்துக்குத் தயாராகி வருகிறார். பாடசாலை மாணவி ஒருவரைத்தான் தனது பத்தாவது பட்டத்து ராணியாக்கப் போகிறார் எம்ஸ்வாதி.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்புதான் எட்டாவது மற்றும் 9-வது திருமணம் செய்து கொண்டார். அவருடைய 10-வது மனைவியாகவிருக்கும் பள்ளி மாணவியின் பெயர் டென்டெஸா.

18 வயது நிரம்பிய டென்டெஸாவை அடுத்த வாரம் முறைப்படி அவர் மணக்கவிருக்கிறார். ஒரு மாதத்துக்கு முன்பு நடன நிகழ்ச்சி ஒன்றில் டென்டெஸாவை அவர் சந்தித்தார்.


சிறிய ஆபிரிக்க நாடான சுவாஸிலாந்தின் மன்னராக 1986ம் ஆண்டு முதல் பதவி வகித்துவருகிறார் எம்ஸ்வாதி.

சுவாஸிலாந்து மன்னராக இருப்பவர் எத்தனை திருமணம் வேண்டுமானாலும் செய்துகொள்ள அனுமதியுண்டு. எம்ஸ்வாதியின் தந்தை சோபுஸா 60 ஆண்டுகள் மன்னர் பதவி வகித்தவர். அவருக்கு நூற்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. கடந்த 1982ம் ஆண்டு சோபுஸா காலமானார்.

மன்னரின் திருமண சாதனையை விடுத்துப் பார்த்ததால் உலகிலேயே அதிக வேகமாக எயிட்ஸ் நோய் பரவும் நாடுகளில் ஒன்று என்ற பெருமையும் சுவாஸிலாந்துக்கு உண்டு.

பெருவாரியான பழங்குடி இன மக்கள் வாழும் இந்த நாட்டில் மூன்று பேரில் ஒருவர் எயிட்ஸ் நோயை எதிர் கொண்டுள்ளனர்.

மன்னருக்கு மகாராணிகளைச் சமாளிக்கவே நேரம் போதாத நிலையில் நாட்டைக் கவனிக்க எங்கே நேரம் இருக்கிறது.




ஒசாமா பின்லேடனும், ஜெனரப் முஷாரஃபும் இணைந்து வழங்கும் ஹிந்திப்பட போஸ்டர் என்றா நினைக்கிறீர்கள்... நோ... ஒரு இணையத்தள கற்பனை!

## திருடனாய்ப் பார்த்துத் திருந்தாத வரை...

திருடனாகப் பார்த்துத் திருந்தாத வரையில் திருட்டை ஒழிக்க முடியாது என்று யாரோ கூறியிருக்கிறார்கள்.

திருட்டை ஒழிக்க ஏராளமான முயற்சிகளைச் செய்து பார்த்து எதுவுமே சரிப்பட்டு வராத நிலையில் திருடர்களைத் திருத்தி வாழவைக்கும் முயற்சியில் இறங்கினார் பங்களாதேஷ் அரச அதிகாரி ஒருவர். நல்ல பலன் கிடைத்தது.

வடக்கு ரங்கபூரில் திருட்டும் கொள்ளையும் அதிகமாக நடக்கின்றன. இதைக் கட்டுப்படுத்த நினைத்த மாவட்டத் துணை ஆட்சியர், திருடர்களைத் திருத்த முடிவு செய்தார். திருடர்களுக்கு அறிமுகமான நபர்கள் மூலம் அவர்களைத் தனது அலுவலகத்துக்கு வரச் செய்தார். அலுவலகத்தில் 102 திருடர்களும் அவர்களது குடுப்பத்தினரும் கூடினர்.

கேவலமான திருட்டுத் தொழிலை விட்டுவிடுமாறு அவர்களுக்குத் துணை ஆட்சியர் அறிவுறுத்தினார்.

எங்கள் குழந்தைகளைக் காப்பாற்றினால் நாங்கள் திருட மாட்டோம் என்று அவர்கள் உரத்த குரலில் கூறினர்.

திருடர்களின் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதம் 20 கிலோ அரிசி வழங்கப்படும். அவர்களது குழந்தைகளின் கல்விக்காக மாதம் ரூ.100 வழங்கப்படும் என்று அரசு சார்பாக இக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

திருட்டுத் தொழிலை விட்டால், அவர்களது பிழைப்புக்காக ரிக்ஷா அல்லது வேன் வாங்கித் தரப்படும் என்றும் அரசு உறுதி அளித்தது.

திருடர்களையும் கொள்ளைக்காரர்களையும் காண அப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஏராளமாக அங்கு கூடியிருந்தனர்.





நெருப்பைச் சாப்பிடுவது போலவும், உடலில் இரத்தக் காயங்களை ஏற்படுத்திக் கொள்வது போலவும் வித்தை காட்டி அப்பாவி மக்களை ஏமாற்றிப் பணம் கறக்கும் வித்தைக்காரர்கள் நமது நாட்டிலிலும் மலிந்து கிடக்கிறார்கள்.

இத்தகைய போலிச் சாமியார்களின் தொல்லை இந்தியாவில்தான் உலகிலேயே அதிக அளவில் காணப்படுகிறது. அறியாமையிலும், வறுமையிலும் வாழும் மக்களை ஆட்கொண்டிருக்கும் மூடநம்பிக்கைகள்தான் போலிச் சாமியார்களின் முதலீடு. மூடநம்பிக்கைகளை மறுத்து மக்களுக்கு அறிவியலைப் போதிக்கும் பல அமைப்புக்கள் இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளன. மூடநம்பிக்கைகளை ஆட்சேபிக்கும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மும்பாயில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது 'சில டெக்னிக்குக்களை'ப் பயன்படுத்தி எவ்வித பாதிப்பும் இல்லாமல் உடலில் சிறிய அளவு தீ மூட்டிக்கொள்ள முடியும் என நிரூபிக்கும் வகையில் தனது கையில் நெருப்பிலான 'பெல்ட்' ஒன்றை அணிகிறார் ஒரு யுவதி.




இந்த புகைத்தல் மன்னரின் பெயர் குழுஜ். ட்ரான்சில்வேனியா நாட்டைச் சேர்ந்தவர். வெறுமனே ஓரிரண்டு சிகரட்டுகள் புகைத்துப் போதாது என்று ஒட்டு மொத்தமாக 800 சிகரெட்டுகளை ஒன்றாக வைத்துப் புகையை உள்ளிழுத்துச் சாதனை புரிந்திருக்கிறார் இந்த மனிதர். இதற்கு முன்னர் 1995 ம் ஆண்டு இதே நபர் 750 சிகரெட்டுகளை இவ்வாறு ஒன்றாகப் புகைத்துச் சாதனை நிலைநாட்டினார். இந்த 800 சிகரெட்டுக்களையும் இவர் குறைந்த பட்சம் 6 நிமிடங்கள் புகைத்தார். கடந்த ஆண்டு 29 அவித்த முட்டைகளை நான்கு நிமிடங்களுக்குள் சாப்பிட்டுச் சாதனை படைத்த பெருமையும் இவருக்கு உண்டு. இது தவிர உயரமான இடத்தில் இருந்து குதித்தல் போன்ற சில உள்ளூர் சாதனைகளையும் இவர் படைத்திருக்கிறார். ஆனால் இந்த குழுஜ்யின் பெயர் இன்னும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவில்லை. அதில் அவர் அதிக ஆர்வம் காட்டவில்லையெனக் கூறப்படுகிறது.



பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது




மாபெரும் சங்கீத வித்துவான்



அஜித்
படம்: திருடா



## ஸ்ருதிகா ஒரு கவிதையாம்!

நடிகை ஸ்ருதிகா ஷூட்டிங் ஸ்பாட்டில் இருந்தால் அத்தனை பேரையும் கவர்ந்து விடுகிறாராம்.

மறைந்த காமெடி நடிகரான தேங்காய் சீனிவாசனின் பேத்தியான ஸ்ருதிகா, 'ஸ்ரீ' படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார். தனது அசத்தல் அழகால் மட்டும் ஸ்ருதிகா அனைவரையும் அசத்தவில்லை. பழகும் தன்மையும் அத்தனை பாங்காக இருக்கிறதாம்.

தன்னுடன் யார் பேசினாலும் அவர்களுக்கு மரியாதை கொடுத்து, முடிந்தால் எழுந்து நின்றுதான் பேசுகிறாராம். தவறிக்கூடக் கோபப்படுவதில்லையாம்.

சிரிப்பதாகட்டும், பேசுவதாகட்டும், ஸ்ருதிகா ஒரு கவிதை என்று ஸ்ருதிகாவுடன் பேசவும், பழகவும் வாய்ப்புக் கிடைத்த பாக்கியவான்கள் புல்லரிப்புடன் கூறுகின்றனர்.

படத்திற்குத் தேவைப்பட்டால் கவர்ச்சி காட்டுவதில் தப்பே இல்லை என்று கூறும் ஸ்ருதிகா, தேங்காய் சீனிவாசனின் பேத்தி என்ற நிலையிலிருந்து ஸ்ருதிகாவின் தாத்தாதான் தேங்காய் சீனிவாசன் என்ற நிலையை ஏற்படுத்துவதே தனது இலட்சியம் என்று கூறுகிறார்.



விந்தியா

## கதாநாயகிகள் மீது கவர்ச்சி நாயகிகள் பாய்ச்சல்

முன்பு ஸோலோ டான்ஸ் ஆடுவதற்கென்று கவர்ச்சி ஆட்ட நடிகைகள் இருந்தார்கள். அனுராதா, சில்க்ஸ்மிதா, ஜெயமாலினி என்று நீளும் இந்தப் பட்டியலில் உள்ள நடிகைகள்(?) அனைவரும் தங்கள் கவர்ச்சி நடனங்கள் மூலமாக பிலிமையும், நாட்டையும் கலக்கினார்கள். சில்க் கடித்த ஆப்பிள் பல ஆயிரம் ரூபாய்களுக்கு விலை போகும் அளவிற்கு அவரிடம் க்ரேஸ் இருந்தது. ஆனால், இன்று? அல்போன்ஸா, பாபிலோனா என்று லைம் லைட்டில் இல்லாதவர்களே கவர்ச்சி நடிகைகளாக அறியப்படுகிறார்கள். அல்போன்ஸாவிடம் இது பற்றிக் கேட்டால், கதாநாயகிகளைக் குறை கூறுகிறார்.

"இன்று ஹீரோயினாக நடிப்பவர்களே கவர்ச்சி நடிகைகள் ரேஞ்சுக்கு இறங்கிக் குலுக்கல் டான்ஸ் போடுகிறார்கள். தங்கள் படங்களில் குலுக்கினால் மட்டுமாவது பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இவர்களோ, அடுத்தவர் படங்களில் ஒரு டான்ஸுக்குக் குலுக்கிவிட்டுச் சிலரைப் பார்த்து விடுகிறார்கள். அதனால், தொழில்முறைக் கவர்ச்சி நடன நடிகைகளின் பொருளாதாரப் பிரதேசம் வறண்டு கிடக்கிறது" என்று பொரிந்து தள்ளுகிறார் அல்போன்ஸா.

**பாபிலோனா**

வர வர கதாநாயகிகளெல்லாம் கவர்ச்சியைக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள். கவர்ச்சி காட்டினால் மார்க்கெட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளலாம் என்பது அவர்களின் கனவு. உண்மையில் அது பகல் கனவு. கதாநாயகிகளை இரசிகர்கள் கதாநாயகிகளாகத்தான் பார்க்க விரும்புகிறார்கள். என்னைப் போன்றவர்கள் கவர்ச்சி நடிகைகள் என்ற முகத்திரை குத்தப்பட்டவர்கள், எங்களைத்தான் இரசிகர்கள் கதாநாயகிகளைவிட அதிகம் இரசிக்கிறார்கள். சில்க், அனுராதா, ஜெயமாலினி, டிஸ்கோ சாந்தி போன்றவர்களுடைய கவர்ச்சியை இரசிகர்கள் இரசித்ததனால்தான் ஹீரோயின்களைவிட அவர்கள் அதிகமாகப் புகழ் பெற்றார்கள். கதாநாயகிகள் என்றால் சாவித்திரி, பத்மினி, கே.ஆர்.விஜயா, சரிதா, ரேவதி, ராதிகா மாதிரி இருக்க வேண்டும். கதாநாயகிகளது பெயர்களைக் கெடுப்பதற்காகவே இப்போது மும்பை, பஞ்சாப், அஸ்ஸாம், ஒரிஸாவிலிருந்து எல்லாம் இங்கு வந்து உடம்பில் துணியேயில்லாமல் நடித்துச் சினிமாவைக் கெடுப்பதுடன், எங்கள் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொள்கிறார்கள்.

## பாக்யராஜ் இயக்கத்தில் விஜயகாந்த்?

நடிகர் விஜய்யை கதாநாயகனாக வைத்து ஜீவி. பிலிம்ஸ் தமிழன் என்ற படத்தைத் தயாரித்தது. தனது அடுத்த படத்தின் கதாநாயகனாக விஜய்காந்தை புக் செய்துள்ளதாம். ஆனால், இயக்குனர் யார் என்பதில்தான் பிரச்சனை.

முதலில் சின்னத்திரை சித்தி புகழ் சி.ஜே. பாஸ்கரை ஒப்பந்தம் செய்ய இருந்தார்களாம். ஆனால், விஜய்காந்திற்கு அவர் திறமை மீது நம்பிக்கை இல்லாததால் சேரனை அணுகினார்களாம். ஆனால், படத்தை இயக்க அவர் ஒரு கோடி கேட்டதால் அடுத்த ஆளை மும்முரமாகத் தேடினார்களாம். கடைசியாக அவர்கள் குறி வைத்துள்ளது இயக்குனர் பாக்யராஜ்.

சம்பளம் எவ்வளவு என்பது மட்டும் முடிவாகவில்லையாம். பாக்யராஜை வைத்து இயக்க ஜீவி. சம்மதித்து விட்டாரா, பாக்யராஜிடம் கேப்டனுக்கு ஏற்ற கதை இருக்கிறதா என்பது இனித்தான் தெரியவரும்.



இயக்குநர் சூர்யா-கிரண்
படம்: தியூ

## சிம்ரனை வளைத்துப் பி...
## பொலிஸ் தி...

அராஜகம்-அடக்குமுறைக்கு எதிராகச் சீறி எழுந்த வீ... துறைக்குச் சிம்ம சொப்பனமாக விளங்குகிறாள். பல இ... பல பிரிவுகளாகப் பிரிந்து தேடுகிறது. இந்த நிலையி... யடிவாரத்தில் இருக்கும் தேநீர்க் கடைக்குத் தேநீர் அ...

இதை மாறு வேடத்தில் இருந்த ஒரு பொலிஸ்கா... வந்திருக்கும் உயர்பொலிஸ் அதிகாரிகளுக்குச் ... தெரிவிக்கிறார். அப்பொழுது திடீர் என்று மறைந்திரு... வீரலட்சுமியைச் சுற்றி வளைக்கிறது. மின்னல் வேகத்தில... தப்பி ஓடுகிறாள். பொலிசும் வீரலட்சுமியைத் தொடர்... கிறது.

காடுகளைத் தாண்டி மெயின் ரோட்டில் ஓடும்போது... பஸ் ஒன்று வருகிறது. பொலிஸ் கூட்டத்தைக் கண்டது... நிறுத்தப்பட்டது. வீரலட்சுமி பஸ்ஸைக் கடந்து ஓடும் ... பஸ்ஸுக்குள் இருந்து பிரசவ வேதனையில் இருக்கும் ... பெண்ணின் அலறல் கேட்க, சட்டென்று நின்று பஸ்சுக்கு... எட்டிப் பார்க்கிறாள். அங்கு ஒரு பெண் துடித்துக்... கொண்டிருக்கிறாள். உடனே தன்னைச் சூழ்ந்திருக்கும் பேராபத்தையும் பொருட்படுத்தாமல் துடிக்கும் அந்தப் பெண்ணிற்குப் பிரசவம் பார்க்கிறாள்.

தாயையும், குழந்தையையும் காப்பாற்றிய வீரலட்சுமி, மீண்டும் தப்பித்து ஓடுகிறாள்.

இந்தக் காட்சி 'கோவில்பட்டி வீரலட்சுமி' என்ற படத்திற்காகத் தேனிக்கு அருகில் மலையடிவாரத்தில் படமாக்கப்பட்டது. இதில் வீரலட்சுமியாக சிம்ரன் நடிக்க சோனு, அலெக்ஸ் இரண்டாவது கதாநாயகியாக விலாசினி, ராஜகுமார், தம்பிராஜன், ராம்போ ராஜ்குமார், சஞ்சீவ், புவனேஷ் சவுத்ரி மற்றும் பலர் நடிக்கிறார்கள்.



## திரி...

திரிஷா மீது ... றார்களாம். எதற்கா... ஸ்ரீகாந்த நடிக்... புக் செய்யப்பட்டி... தூக்கி விட்டார்க... அதைக் கேள்... பட்டவர்களைக் ... பேசி அந்தச் ... வித்யா பாலவ... திரிஷா மீது ... படைந்திருந்...

'துள்ள... இயக்குன... முகம் ... எல்... விடுங்... விடுகி... ப... தட்ட...

## சீதாவுக்குக் குவியும் வாய்ப்புக்கள்

பார்த்திபனை விட்டுப் பிரிந்த நேரமோ என்னவோ, சீதாவின் கையில் இப்போது 5 படங்கள் உள்ளன. 'மாறன்' படத்தில் சத்யராஜுடன் இணைந்து நடித்து வரும் சீதா, அந்தப் படத்தின் மூலம் மீண்டும் தமிழ் சினிமாவில் புகழ் பெறுவார் என்கிறார்கள். அத்தனை அற்புதமாக நடித்துள்ளாராம் அவர். முன்பை விட இரண்டு மடங்கு உற்சாகமாகக் காணப்படும் சீதாவிடம் பார்த்திபன் குறித்து மட்டும் ஏதாவது கேட்டுவிட்டால் போதும் 'மூட் அவுட்' ஆகிவிடுகிறார்.

அந்த டொப்பிக்கை விட்டுவிட்டு வேறு ஏதாவது பேசச் சொல்கிறார். இல்லாவிட்டால் இடத்தைக் காலி செய்யச் சொல்லி விடுகிறார். தனது தாய் வீட்டில் குழந்தைகளுடன் வசித்து வருகிறார். பார்த்திபன் தனது அலுவலகத்திலேயே தங்கிக் கொள்கிறார். 'இவன்' படத்தில் பாடகியாக நடித்த நடிகைக்கும் பார்த்திபனுக்கும் 'இது' என்று பேசிக் கொள்கிறார்கள்.

...டிக்கப்
...டம்!

...டகமி, பொலிஸ் ...ளையிலும் பொலிஸ் ... விரவட்டகமி மலை ...த்த வருகிறாள். ... தன்னுடன் ... மூலம் ... பொலிஸ் ...லிருந்து ... விரட்டு ...திர ...ன் ...



ஸ்ரீகாந்த்-வித்யா பாலன்
படம்: மனசெல்லாம்

## மண்வாசனை வாரிசு கொடுத்த பரிசு!

மண் வாசனையோடு படமெடுக்கும் இமயமான இயக்குநரின் வாரிசு, சொல்லிக்கொள்ளும்படி படங்கள் இல்லாவிட்டாலும் எழுதிக் கொள்கின்ற அளவுக்கு மேட்டர்கள் இருக்கின்றன. 'மண்ணைத் தின்னாலும் மறைவாத் தின்னணும்'னு தன்னோட வாரிசுக்குச் சொல்லிக் கொடுக்காததால்... கண்ட இடத்தில் வாயை வைத்து வாரிசுகளை உண்டாக்கி வருகிறார் தா... மஹால் நாயகன்.

ஆரம்பத்தில் ஒரு மின்னணிக் குரல் கொடுக்கும் பெண்மணியை முன்னணிக்குக் கொண்டு வருவதாக வாக்குறுதி கொடுத்து விட்டு... இறுதியில் தன் வாரிசை மட்டும் கொடுத்து விட்டுக் கம்பி நீட்டி விட்டார். இந்த விஷயம் முற்றுவதற்குள் காதும் காதும் வைத்தாற்போல் கருவைக் கலைத்திருக்கிறார்கள் பின்னணியின் தாய்க்குலம்.

## கமலிடம் மாதவன் கண்டிஷன்!

கமலஹாசனுடன் சேர்ந்து 'அன்பே சிவம்' படத்தில் நடித்து வருகிறார் மாதவன்.

இந்தப் படத்திற்காக கமலஹாசன், மாதவனிடம் நேரடியாகப் பேசிய போது சில கண்டிஷன்களைப் போட்டாராம் மாதவன் (அன்பாகத்தான்!).

'பஞ்சதந்திரத்தில்' ஜெயராம் 'வந்து செல்றதைப்' போல இல்லாமல் தனக்குக் கொஞ்சமாவது முக்கியத்துவம் இருக்குமாறு கேரக்டரை அமைக்க வேண்டும் என்று கமலிடம் அன்புக் கட்டளையிட்டாராம் மாதவன்.

அதற்கு சிரித்துக் கொண்டே, "நீ, வா பார்க்கலாம்" என்று கூறினாராம் கமல்.

இப்போது கமலை விடவும் நன்றாகப் பேசப்படும் அளவுக்கு மாதவன் கேரக்டரை (அதாவது 'குருதிப் புனல்' அர்ஜுன் கேரக்டர் போல) பில்ட் அப் செய்து விட்டார்களாம். ரொம்ப சந்தோஷமாக இருக்கிறார் மாதவன்.

'மின்னலே' படத்துக்குப் பிறகு பிரேக் இல்லாமல் அவதிப்பட்டு வரும் மாதவனுக்கு, 'அன்பே சிவம்' நல்வாழ்வைத் தரும் என்று கூறுகிறார்கள்.

கேட்டதை விட அதிகம் கொடுத்த கமலுக்கு நன்றியோ, நன்றிகளைக் கூறிக் கொண்டிருக்கிறாராம் மாதவன்.

'ரன்' படம் லேட்- பிக் அப் ஆகி இருப்பதால் மாதவனுக்குச் சந்தோஷம்தான்.

சினிவிசிட்
முகப்பில் | ஸ்நேகா / காயத்ரி ஜெயராம்





## அடுத்த படத்திற்கான கதை டிஸ்கஷனில் ரஜனி

மொட்டைத் தலையுடன் அமெரிக்காவிலிருந்து வந்து இறங்கிவிட்டார் ரஜனிகாந்த். இந்த ஒரு மாத காலத்தில் 'பாபா'வைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் அங்கிருந்தபடி கிரகித்து முடித்துவிட்டுத்தான் 'சரி, இந்தியாவுக்குப் போகலாம்' என்று கிளம்பி வந்தாராம் ரஜனி. உடனடியாக அவர் போய் உட்கார ஆரம்பித்திருக்கும் இடம், துங்கம்பாக்கத்திலிருக்கும் அவரது கெஸ்ட் ஹவுஸான அருணாச்சல கார்டனில்தான். கதை விவாதம் தீவிரமாக நடக்க ஆரம்பித்துவிட்டது. பொங்கலுக்குள் புதுபடத்தை ரிலீஸ் செய்தால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை என்கிறார்கள். அப்படியொரு சுறுசுறுப்பில் இருக்கிறாராம் ரஜனிகாந்த்.

## ...ஷா மீது ஆத்திரத்தில் நாயகிகள்

...நாயகிகளும் படு கடுப்பாக இருக்கி...சான்சுகளைத் தட்டிப் பறிப்பதால்தான்! ...'மனசெல்லாம்' படத்தில் நாயகியாக ...த வித்யா பாலனைப் படத்திலிருந்து ...

...பட்ட திரிஷா உடனடியாகச் சம்பந்தப் ...ன்டெக்ட் செய்து, பேச வேண்டியதைப் ...ளை வாங்கிவிட்டாராம். இதனால் ...வெறுப்பாக உள்ளாராம். ஏற்கனவே ...கா உள்ளிட்ட சில நடிகைகள் வெறுப் ... இப்போது அவர்கள் வரிசையில் வித்யா பாலனும் சேர்ந்து விட்டாராம்.

இந்தக் குழப்பம் இப்படியிருக்க, முதல் படமான 'லேசா லேசா' படத்தின் டைரக்டருடன் ரொம்ப அன்னியோன்யமாகத் திரிஷா இருந்ததால்தான், அவர் கதையில் கோட்டைவிட்டு விட்டுப் படத்தை ரொம்பவும் 'லேசாக' எடுத்து விட்டதால் படம் இன்னும் முன்னேறாமல் இருக்கிறது என்ற தகவல் ஸ்ரீகாந்த்தை இப்போது கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளதாம்.

'லேசா லேசா' போல 'மனசெல்லாம்' படமும் ஆகிவிடுமோ என்று மனசெல்லாம் ரொம்பக் கனமாக இருக்கிறதாம் ஸ்ரீகாந்த்துக்கு.

## ...ப்பர் ஹிட் ஷெரீன்

...'இளமை' புகழ் ஷெரீன் ரெட்டியை வைத்துப் படமெடுக்கும் தயாரிப்பாளர்களும் சரி, ...னும் சரி, ஷெரீனின் பெயரைச் சொன்னாலே வாயெல்லாம் பல்லாகி, வெட்கத்தில் ...வ், வளைந்து, குழைந்து ஷெரீனைப் புகழ்கிறார்கள். ஏனாம்?

...ம் நல்ல ஒத்துழைப்புதான் காரணமாம். "என்னை மட்டும் படத்தில் நன்றாகக் காட்டி... நீங்கள் சொல்கிறபடி நடிக்க, கேட்க நான் தயார்" என்று அன்பாகக் கட்டளையிட்டு...ராம் ஷெரீன்.

...என்ன இஷ்டத்திற்குச் கட்டுக் கொள்கிறார்களாம் இயக்குனர்கள். என்ன சொன்னாலும் ...ல் கேட்கிறாராம் ஷெரீன்.

...னொரு விஷயம், ஷெரீனுக்கு கர்நாடகத்தைச் சேர்ந்த பல அரசியல் புள்ளிகளுடன் ... தொடர்பு இருக்கிறதாம். ஷெரீனின் 'அன்புக்கு' அவர்கள் அடிமைகளாம்.

...ல கர்நாடக, தமிழகத் தயாரிப்பாளர்களும் கூட இந்த அன்பு 'ஹிட்' லிஸ்ட்டில் இருக்கி...களாம்.

...அப்புறம் ஏன், ஷெரீன் பெயரைக் கேட்டால் இவர்கள் புளகாங்கிதமடைய மாட்டார்கள்?

## தன் திருமணம் குறித்து ரோஜா சொல்கிறார்....


"கல்யாணம்கிறது நினைச்சுப் பார்த்தா பெரிய விஷயம். ...னிமாவில க்ளைமாக்ஸ்ல சில நிமிடம் வந்துட்டுப் ...பாய்டும். படத்தில எத்தனையோ முறை கல்யாணக் ...ாட்சிகள்ல நடிச்சிருக்கேன். அப்போ அது சாதாரண...மாத் தோணும். எத்தனையோ காட்சிகள்ல கஷ்டப்பட்டு ...டிச்ச நமக்குக் குனிந்த தலையுடனோ, சிரித்த முகத்...டனோ, மணமேடையில் உட்கார்ந்து தாலி கட்டிக்கிற சீன் ...ரொம்ப சுலபமாத் தோணும்.

இப்படி நடிக்கிறதுல எந்தக் கஷ்டமும் தெரியாது. ஆனா, ...ஜத்தில கல்யாணம்கிறது சாதாரண விஷயமில்லை. இதைப் ...பற்றி யார் யாரோ என்னென்னமோ விளக்கம் சொல்லி...ருக்காங்க. ஆனா, அனுபவபூர்வமா சந்திக்கிறபோதுதான் ...து பற்றி முழுசா உணர முடியும்.

பன்னிரெண்டு வருஷ லவ் ஸ்டோரியின் க்ளைமாக்ஸ் ...ாதிரி எங்க கல்யாண தேதி முடிவாச்சுது. பிறகென்ன ...த்திரிகை அடிச்சு எல்லோருக்கும் கொடுக்க வேண்டியது...ானே...

கல்யாணம்கிறது பொண்ணு வாழ்க்கையில் மாபெரும் ...வு. அது கைகூடி வரும் போது அதன் சுகத்தை, ருசியை, ...ன்பத்தைச் சந்திக்காமல் இருப்பார்களா யாரும்?"

இப்படித் தனது திருமணம் பற்றி ஆனந்தக் கண்ணீரு...ன் கூறுகிறார் ரோஜா.



விக்ரம்-அனிதா
படம்: சாமுராய்

## சொல்லத்தான் நினைக்கிறேன்

என் உயிரின்
நுனிதடவி...
உள்ளுக்குள் உறைந்து வரும்
சுவாசமாய்த்தான்
நேசித்தேன் உன்னை
XX
நீயோ என்
நினைவுகளை நசித்து
நம் உறவுக் கோலங்களையும்
கலைத்துப் பார்க்கிறாய்.
XX
என் ஆத்மாவின்
இடுக்குகளிலிருந்து
உன் பெயர் மட்டும்
உச்சரிக்கப்படும் போது
அது வேசம் என நினைத்தா
நீ என்னைவிட்டும்
அன்னியமாகிறாய்.
XX
என் இதயத் தோப்பில்
நான் இடமளித்த குயிலுக்கு
கூடுகட்டத்தான் தெரியாது
கூவவுமா தெரியாது?

உன் நினைவுகளில் பூக்கும்
என் கவிதை மலர்களுக்கு
நீ தண்ணீர் தராவிட்டாலும்
அதைச் சாகடிக்க நினைக்காதே!
XX
உன் மௌனத்திரை விலக்கி
மனதைத் தொட நினைக்கும்
என் உயிரின் புலம்பல்
கேட்கிறதா உனக்கு?
XX
நீ
கலைப்பதற்கென்றுதான்
ஒப்பனை செய்தாய்- சரி
வெறுப்பதற்கென்றுதானா
காதல் செய்தாய்!
XX
இந்த வீணையின்
தந்திகள் அறுந்து
ராகங்கள் சிதைந்தாலும்
உனை என்றென்றும்
பாட நினைத்த இதன்
உணர்வுகள் சாகாது!

அபுஸர்பான், ஒலுவில்.

## ஹைக்கூ

மிருகவதைக்கு
எதிராய் பாதயாத்திரை
செல்கிறார்கள்
மாட்டுத்தோல்
செருப்பணிந்து

உடுத்த
ஆடை அவிழ்த்து
நிர்வாணமாய்
படமெடுத்தது
பாம்பு!

அழகிய தடாகம்
மலர்ந்திருக்கும் தாமரை
சிக்கவைக்கும் வேர்கள்!

மரணத்தின் பின்னாலும்
மரணிக்காத புன்னகை
கசாப்புக் கடை
ஆட்டுத்தலை

பலவந்தமாய்
இதழ் பிரித்து
இனிய முத்தம்!
மலரில் வண்டு

-மெய்யன் நட்ராஜ்.

## கனவிலும் சொல்ல முடியாத மௌனம்

பலவருடங்களின் பின்
மிக நெருக்கமாக
கனவில்
உன்னைச் சந்தித்தேன்

உனக்குத் தெரிந்த நான்
மிகவும் மாறியிருந்தேன்.
நீ அடையாளம்
காணமுடியாதபடி.

உன்னை உற்றுப் பார்த்த போது
நீயும் என்னைப் பார்த்திருந்தால்
தாடிக்குள் மறைந்திருந்த
என் முகத்தை
நீ மதித்திருப்பாய்...

குழந்தையை
மடியில் வைத்துக் கொண்டு
அருகிலிருந்த கணவனையும் மீறி
எதிரிலிருந்த என்னை
யாரென்று தெரியாமல்
நீ எப்படி உற்றுப் பார்க்க
முடியும்...?

நீ மாறவில்லை
அப்போது நான் ரசித்த
அந்த அடையாளங்கள்
அதே அழகுடனிருந்தது
உன் கணவன் உன்னைப்
பூப்போல வைத்திருப்பதாக...

கசங்காத உன் பிடவைபோல்
மனசுமிருக்க வேண்டும்
என்பதையும்
நீ கணவனின் தோளில்
சாய்ந்த போது...
தெரிந்து கொண்டேன்.

பயணம் போல்
அன்றைய நினைவுகளும்
கனவுக்குள் நகர்ந்தது.

அப்போதைய பள்ளி நாளில்
உனக்கே தெரியாமல்
உன்னைக் காதலித்த
அந்த முட்டாள் தனத்தை
இப்போதாவது...
உன்னிடம் சொல்ல நினைக்கின்றேன்.

அதற்குள்....
மடியிலிருந்த குழந்தையின்
அழுகைச் சத்தம்
தூக்கத்தைக் கெடுத்து
கனவைத் தொலைத்தது.

விழித்துப் பார்க்கையில்
அருகிலிருந்த என் தனிமை
யாருக்கும் தெரியாமல்
என்னைப் பார்த்து...
கேலியாகச் சிரித்தது.

இறக்காமம், எம். நவாஸ்சௌபி.

## வெட்கமாய்

காகங்கள்
ஒற்றுமையாகத்தான் பங்கிடுகின்றன
எறும்புகள்
ஒற்றுமையாகத்தான் உழைக்கின்றன

இன்னொன்றின் இறப்பில்
எந்த மிருகமுமே
சுய திருப்தி காண்பதில்லை

வம்பு பேசி வாழ்க்கை நடத்தி
விலங்குகளுக்கு பழக்கமில்லை

மதத்தையும் மொழியையும்
காரணங்காட்டி விலங்குகள்
கலகம் நடத்துவதில்லை

ஹர்த்தாலையும் பேரணியையும்
மாற்றுக் கருத்துக்கெதிராக
விலங்குகள் முன் மொழிவதில்லை

மனிதனுக்குள் எத்தனை மாற்றங்கள்
மரணங்களின் எண்ணிக்கையில்
அரசியல் லாபம்

சக மனிதனை விடவும்
உயிர் குடிக்கும் துப்பாக்கிகளுடன்
தீவிரக் காதல்

மனித அவலங்களுக்குள்
வீர வசனங்களின் ஒத்திகை
அழிந்து போன தேசத்துக்குள்
மீண்டும் ஒரு அழிவுக்கான முஸ்தீபு

இப்படித்தான் தொடர்கிறது
மனித வாழ்க்கை
விலங்குகளோடு கூட
ஒப்பிட முடியாத கேடு கெட்ட
மனித சமூகத்துள்
நானும் ஒருவனாய்

சீ.... வெட்கமாய் இருக்கிறது.....!

எம். ஸ்டாலின், திருமலை.

## இப்படியும் ஒரு உத்தரவு

எந்நேரமும் மக்கள் நடமாடும்
ஒரு குட்டி நகரம் அது.
அது ஒரு நாற்சந்தி
அதன் நடுவில் ஒரு ஆலமரம்
அதன் கீழ் ஆதிகால
களிமண் சுவரின் ஒரு பகுதி
பல நூற்றாண்டைக் கடந்தும்
உடைசல்களையும் சொடிசல்களையும்
தனதாக்கிக் கொண்டு
தள்ளாடி நிற்கின்றது.

காக்கைகளினதும்
வௌவால்களினதும்
எச்சங்களால்
பல நூற்றாண்டாகியும்
தாரிகையின்றி தீந்து பூசப்பட்ட-

அதன்
கறுப்பு வெள்ளை வர்ணங்கள்
பார்ப்பவர்களையும் அதிசயிக்கும்.

எந்த வேளையிலும்
இடிந்து விழும் என்ற நிலையறியாமல்
அதன் மேல் ஒரு பூனை உட்கார்ந்து
வருவோர் போவோரை லாவகமாக
பார்த்துக் கொண்டிருக்கின்றது.

அந்த ஆலமரம்
நிழல் தேடி வருவோருக்கும்
ஓய்வு தேடி வரும் பறவைகளுக்கும்
ஆறுதலளிக்கும் ஒரு வாடி வீடு.

எம்.எம். ஜாலீஸ

## தேன் கிண்ணம்

## காணிக்கை

## கடவுளை வெறுத்த

மலர்கள் மணக்க
மறுக்கிறது எனக்கு
மட்டும் ஏன்?
அவள் கன்னங்களை
முகர்ந்ததாலா?!
தேனும் இனிக்க
வெறுக்கிறது எனக்கு
ஏன்? அவள் இதழ்களை
கௌவியதற்காகவா?!
நதியும் என்னை
நனைக்காமல் ஓடுகிறது.
ஏன்? அவள் உமிழ்
நீரில் நனைந்ததற்காகவா?
முட்கள் கூட என்னைக்
குத்துவதில்லை! அவள்-
நகங்களை கடித்து விட்டதாலா?
படுக்கும் பாயும் என்
தூக்கத்தைக் கலைக்கிறது.
இது ஏன்?
அன்றொரு இரவில்
அவள் கூந்தலில்
தலை சாய்ந்ததாலா?
அவள் தொப்புள் சுற்றி
எண்ணெய் தடவியதாலா?

பல்லாங்குழி விளையாட்டிலும்
எனக்கு கொட்டை சேர்வதில்லை!
விளையாட்டுக் கூடவா
வில்லனாகிறது எனக்கு?
நெருப்பு கூடவா
என் வீட்டுச் சமையலை
பொங்கவிடாமல்
கோபிக்க வேண்டும்.
அப்படியென்றால்
இது ஏன்? ஓ...!
அன்று பகல்
மதிய உணவை
அவளோடு கழித்ததாலா?
இவளோடு உறவு கொண்டால்
இயற்கை ஏன்
என்னோடு பகையாகிறது?!
ஓகோ! விசயம் அப்படியா?
இறைவன் படைப்பில்
அவனுக்கே ஆசை வந்து
நெருங்கிய போது
அவனையே வெறுத்துவிட்டு
பூமிக்கு வந்த
தேவதை அவள்!

ஏ.எப்.எம். றியாட், முள்ளிப்பொத்தானை.

## பேனா நண்பர்கள்



பெயர்: சு.காளிதாஸ்
வயது: 21
முகவரி: இல. 27, அப்துல், ஜபார் மாவத்தை, கொழும்பு-12.
பொழுது போக்கு: அயல் நாடு, ஊர் பற்றி தெரிந்து கொள்ளல், பத்திரிகை, வானொலி.



பெயர்: A.M.Abdul Wahab
வயது: --
முகவரி: P.O.Box-55788 Sabahiya, Kuwait.
பொழுது போக்கு: தின முரசு.



பெயர்: ம. பரமலிங்கம்
வயது: 23
முகவரி: EMP.No.71587Q Eco. catering P.O.Box. No. 9366 Jeddah. NO. 21413. K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, விளையாட்டு.



## நினைத்து, நினைத்து சிரிக்க

ஒருத்தன் டவுனுக்குப் போகப் புறப்பட்டான். அப்போது அவன் மனைவி அவன்கிட்ட "என்னங்க! நீங்கள் டவுனுக்குத் தானே செல்கிறீர்கள். அப்படியே என் மாமா வீட்டிற்குச் சென்று.... நம் வாளி ஒன்று உள்ளது. அதை எடுத்து வாருங்கள்" என்றாள்.

"சரி" என்றான் கணவன்.

"அப்படியே மாமா வீட்டிலேயே ஸ்டவ் ஒன்று உள்ளது. அதையும் எடுத்து வந்து விடுங்கள்" என்றாள் மனைவி.

"சரி...சரி...." என்று கணவன் நகர,

"என்னங்க....என்னங்க.... அப்படியே இரண்டு கோழிகள் வாங்கி வாருங்கள்" என்றாள் மனைவி.

"சரி. என்னைப் போகவிடு" என்றான் கணவன்.

"இருங்கள். என்ன அவசரம். உம்... பன்றி ஒன்றையும் வாங்கி வாருங்கள்"

"சரி...வாங்கி வருகிறேன். என்னை இப்பொழுது போக விடுகிறாயா? இல்லையா?"

"ஏன் இப்படி கோபித்துக் கொள்கிறீர்கள்? கடைசியாக ஒன்று சொல்கிறேன். கேளுங்கள்"

எரிச்சலுடன்.... என்ன என்பது போல் பார்த்தான் கணவன்.

"நம் ஊரில் இருக்கும் அந்த நடத்தை கெட்ட பெண்ணும்...இன்று டவுனிற்குப் போகிறாள். எங்கேயாவது அவளைப் பார்க்க நேர்ந்தால்.... அவளுடன் பேசக்கூடாது" என்றாள் மனைவி.

"சரி" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் கணவன்.

டவுன்ல வேலைகள் எல்லாத்தையும் முடிச்சுட்டு.... தன்னோட தலையில வாளியையும், அதுக்குள்ள ஸ்டவ்வையும், ஒரு கையில் இரண்டு கோழிகளையும், இன்னொரு கையில் பன்றியையும் பிடிச்சுட்டு ஊருக்குப் புறப்பட்டான். வழியில் இவன் மனைவி பேச வேண்டாம் என்று சொன்ன பெண்ணும் ஊரை நோக்கி நடந்திட்டிருந்தா. அவளைப் பார்த்த இவன், "என்ன! வேலையை முடிச்சுட்டு ஊருக்குக் கிளம்பி விட்டாய் போலிருக்கு" என்று கேட்டான்.

அதுக்கு அவள். "ஆமாம்.... ஆனால், நான் உன்னுடன் சேர்ந்து வர மாட்டேன்" என்று சொன்னாள்.

"ஏன் என்னுடன் வரமாட்டாய்?" என்று கேட்டான் இவன்.

"அது... வந்து... எனக்குப் பயம். நீ என்னை ஏதாவது செய்து விட்டால்?" என்று நடுங்கின குரல்ல அவ சொல்ல.

"பைத்தியமே! உனக்கு அறிவிருக்கிறதா? நான் என் கைகளில் கோழிகளையும் பன்றியையும் வைத்துள்ளேன். இவைகளை கீழே வைத்து விட்டு உன்னை நான் ஏதாவது செய்வதற்குள் இவைகள் ஓடிவிட்டால் என் மனைவிக்கு யார் பதில் சொல்வது?" என்று கேட்டான் இவன்.

"இப்போது இப்படித்தான் சொல்வாய். ஆனால், நீ என்ன செய்வாய் என்று எனக்குத் தெரியும்" என்றாள் அவள்.

"என்ன செய்வேன்?" புரியாம கேட்டான்அவன்.

"பன்றியை கீழே வைத்துவிட்டு.... அதன் மேல் வாளியை கவிழ்த்து வைத்து, அதன் மேல் ஸ்டவ்வை வைத்து விடுவாய். அப்பொழுது பன்றியால் எங்கும் போக முடியாது அல்லவா?" என்று சொன்னாள்.

"சரி... கோழியை நான் என்ன செய்வேன்?" என்று கேட்டான் அவன்.

"அதை நான் பிடித்துக் கொள்கிறேன்" என்று வாங்கினாளாம் அந்தப் பெண்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக ஆண்டாள் முதல் இன்றைய ஆழியாள் வரை பலர் எழுதியிருந்தாலும், கவிஞர்களாக அறியப்படும் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. பெண்ணிய நோக்கில் இன்று. பெண்கள் தங்களைத் தங்களது பெண்மொழியிலேயே வெளிப்படுத்தும் பெண்நிலைக் கவிதைகள் பிரதான கவனம் பெற்று வருகின்றன. அந்த வகையில் இணையத்தளத்திலிருந்து பெறப்பட்ட மூன்று கவிதைகளை இவ்வாரம் தருகிறோம். மூன்று கவிதைகளையும் எழுதியிருப்பவர்: மு.ரெங்கம்மாள்.

### கருவறைக்குள் ஒரு வந்தனம்

கோயிலுக்குப் போகும் போதெல்லாம்
"கர்ப்பக் கிரகம்" என்ற வார்த்தை
கேட்டிருக்கிறேன்.
அந்த வார்த்தையின் அர்த்தம் உறைக்காமல்.

கரு உறைவிடம் என்று அதற்குப் பொருளாம்.
எதன் கரு என்று தெரியவில்லை.

மக்கிய வாசனையும், எண்ணெய்ப் பிசுக்கடைந்த
சுவர்களும்,
குளிர்ந்த கருங்கல் பாவிய பிரகாரங்களும்
இருண்ட மூலைகளில்
முலை முடாச் சிற்பங்களும்
மாவிளக்கின் திரியில் கருகி எழும் பகைத் தீயும்.

என் கருவறையும் இப்படித்தானோ என்னவோ

நிணமும், உயிர் தரும் உணவும்,
நீர் நிரம்பிய
காவல் காக்கும் தோற்சுவர்களும் என.

அதுதான் என் அடையாளம் என
எல்லோரும் சொன்னார்கள்
("புழு பூச்சி உண்டா?")

புறநானூற்றுப் பெண்ணுக்கு அது
புலியிருந்து போகிய இல்லமாய் இருந்திருக்கலாம்.

எனக்கோ
இது வெறும் பூனைகள் பதுங்கியிருந்த
இருட்டறைதான்-
(இருந்தாலும் எனக்கே எனக்கான பூனைகள் அவை.)
பிராண்டியதும் உண்டு.
வெகு நாட்கள் காணாமல் போனதும் உண்டு.
திரும்பி வரும்போதெல்லாம் அடுக்களையைச்
சுரண்டியதுமுண்டு.

வெகுகாலம்
உடனிருந்த அந்தக் கருவறையை
நேற்று நான் கழட்டி வைத்துவிட்டேன்.
(அறையில் கறையான்)

கடவுள் மோசம்.
மற்றவர் வலியறியாதவள்.
முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க
வைத்திருக்கலாம்.
அடுத்த முறை
அவளுடைய கருவறைக்குள் செல்லும் போது
ஞாபகமாய்ச் சொல்ல வேண்டும் அவளிடம்.

இத்தனை காலம் இறக்கிவைக்க மாட்டாமல்
சுமந்திருக்க வேண்டாமே.

### என்னுடல் மின்னுடல்

(மின்னுடலை நான் பாடுகிறேன்- வால்ட் விட்மன்)

நான் அறைக்குள் நுழைந்தவுடன்
பேச்சொலிகள் நின்று போகும்
கண்கள் என்மீது மேயத் தொடங்கும்.
இத்தனைக்கும் நான் அழகில் சேர்த்தியில்லை.
கொஞ்சம் கறுப்பு-
"மாநிறத்திற்குக் கொஞ்சம் தான் குறைவு
உனக்கு.
சிவப்பெல்லாம் சும்மா- அதுகள் ஒன்றும்
அழகில்லை.
ரத்தச் சோகை பிடிச்சதுகள்"
இது என் அம்மா.

உரக்கக் கூவும் உடலுமில்லை எனக்கு.

உடலை இறுக்கிப்பிடித்த மேல் சட்டையும்
தளர்ந்த பாவாடையும் தான் என் உடைகள்.
அம்மாவின் வற்புறுத்தலில்
தோளில் குவிந்து கிடக்கும் தாவணி.

பேச்சொலியை நிறுத்திய என் வரவு
தளர்ந்த உடல்கள் இறுக்கம் கொள்ளவும்
பேச்சின் திசை திரும்பி
என்னைப் பற்றியல்லாமல் பாவனை.
ஆனாலும்
என்னைப் பற்றித்தான்.

பயப்படாதே.

மின்னுடல் என்னுடல்.
தீண்டாமலே பரப்பும் வெப்பம்.

பயப்படாதே.
இந்த அதிர்வு உயிரைப் பறிக்காது
இந்த உஷ்ணம் உன்னைக் கருக்காது.
இந்த மின்பாய்தல் உயிரின் உள்ளே.
காந்தத்தை உருவாக்கும் காந்தம் போல
உன்னுடலும் மின்னுடல் ஆகும்.

நம் உடல் மின்னுடல்.

கிட்டே வா ஒரு ரகசியம் சொல்கிறேன்.

காதருகில் என் வாயைக் குவித்து
கண்களை மூடித் துய்ப்புடன் சொன்னேன்,
"மின்னுடல் மட்டுமல்ல
என்னுடல்
தன்னுடல் கூடத்தான்"
நீர்மை சுரக்கும் உயிர்த்தலம் சிலிர்க்க
கால்களை ஒன்றன் மேல் ஒன்று போட்டு
இறுக்கியபடி
வடிந்த குரல் அவனைத் தீண்ட.

## சிறப்புக் கவிதை

### திறவாத தாழ்கள்

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்-
திருவள்ளுவர்

வாயைத்திற பேசு, சாப்பிடு, புகழ்ச்சி செய்,
முத்தமிடு,
கன்னத்தை உதட்டால் நெருடு.
எச்சில் படுத்து. எச்சில் படு.

கண்ணைத் திற அகல.
பார் முகங்களை, கால்களை, கண்களை.
மலர்ச்சி மறைந்து
பஞ்சடைந்த கண்களைக் கழுவித் திற.
வியப்பதன்றி
வேறென்ன வேலை பார்வைக்கு?

கையைத் திற விரல்கள் அழகு
நீவிவிட்டுக் கைகோர்த்துக் கொள்
இன்னொரு கையினைத் தேடி.
பிளவுண்ட இலையின் நரம்புகள் வேய்ந்தது
போல்.
விரலிடை வெளிகளில் உலகைச்
செருகிக்கொள்.

கால்களைத் திற நடந்து பார் கொஞ்ச நேரம்
மணலில் இளஞ்சூட்டில் வெறுங்காலில்,

உடம்பைத் திற இறுகிய உறுப்புகள் இளகட்டும்
துய்க்கவும், தொடவும் தொடப்படவும் என.

மனதைத் திறந்து வை-
புதுக் காற்றும், வெட்டவெளி நிறங்களும்
புழுக்களும், பறவைகளும் சென்றடையட்டும்.

காதுகளைத் திற.
நாராசமும் கூட ஒலிக் கலவைதான்.
நகரும் உலகின் சப்தம் காதுக்கு வேண்டாமா?

தாழிட்ட வாசலைத் திற
அடைபட்ட காற்று வெளிச்செல்ல

"திறவாத கதவோரம் தென்றல் வந்து வீசாது."

திறந்தவை எல்லாம் எல்லோருக்கும்!
அடைபட்ட எதுவும் உனக்கும் இல்லை-
எவருக்கும் இல்லை.

அடைபட்ட அன்பு அன்புமல்ல.

கவனத்திற்கு:- சென்ற வார (செப்.15-22) தினமுரசில் "மீளமீளக் கொல்லல்" கவிதையை எழுதியிருந்த என். ஆத்மா நம் நாட்டவர். மூன்றுமே தமிழ்நாட்டுக் கவிஞர்களது கவிதைகள் எனத் தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது. அந்தக் கவிதை என். ஆத்மாவின் "மிக அதிகாலை நீல இருள்" தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

# அட்டேக்.. அட்டேக்... ஹார்ட் அட்டேக்



## அச்சம் தவிர்க்க அட்வைஸ்

**ஹார்ட்** அட்டேக் என்று சொன்னதும்... திடீரெனப் பிடித்துக் கொள்ளும் பயம்தான் விரைவாக உயிருக்கு உலை வைக்கிறது.

ஹார்ட் பற்றியும் 'அட்டேக்' பற்றியும் போதிய தெளிவில்லாமைதான் இந்த அசாதாரண பயத்தை ஏற்படுத்தும் சாதாரண காரணம்.

குறைந்த உடல் உழைப்பு, உணவுப் பழக்க வழக்கங்கள், புகைபிடிக்கும் பழக்கம், கொழுப்புச் சத்துள்ள உணவுப் பொருட்கள், இரத்த அழுத்த நோய், இரத்தத்தில் கொலஸ்ட்ரால், மதுப் பழக்கம், டென்ஷன், உடல் உழைப்பின்மை போன்றவைதான் மாரடைப்பு ஏற்பட முக்கிய காரணங்களாகும். அத்தோடு, இயற்கையிலேயே ஆசிய நாட்டவர்களிடம் இருக்கும் மரபணுக்கள் (Genes) போன்றவை சிறு வயதிலேயே இதய நோய் வருவதற்குக் காரணங்களாகின்றன என்கிறது மருத்துவ ஆராய்ச்சி ஒன்று.

**மாரடைப்பு என்றால் என்ன?**

இதயத் தமனிகளில் அடைப்பு ஏற்படுவதால், அங்கே இரத்தம் செல்வது தடைப்படும். இதன் காரணமாக, கடுமையான வலி வரும். இந்த வலி கழுத்துக்கும், கைகளுக்கும் பரவும். இதையே மாரடைப்பு என்கிறோம்.

**அதன் அறிகுறிகள் என்ன?**

மாரடைப்பு என்பதை விட, மாரடைப்பு நோய் (Angina) என்பதே சரி. இது சிலருக்கு நீண்ட நாள் நோயாகவும், பலருக்கு உடனடியாக உயிரைப் பறிக்கும் நோயாகவும் உள்ளது. ஒரு அசாதாரண வேலை செய்யும்போது (உதாரணமாக, திடீரென்று செய்யும் கடுமையான உடற் பயிற்சி) மார்பு, கழுத்து, இரண்டு தோள்கள் மற்றும் கைகளில் வலி, பாரம், எரிச்சல் அல்லது திடீர் பலவீனம் ஏற்படும். தவிர, ஓய்வாக இருக்கும் போது திடீரென்று வலி கூடும். இது தீவிரமடையும். தொடர்ந்து வியர்வை வரும். அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் பயம் ஏற்படும். இதே நிலை 20 நிமிடங்களுக்கு மேல் தொடரும் வாய்ப்பு உண்டு. இது போன்ற அறிகுறிகள் தெரிந்தால். 'அது மாரடைப்பு நோய். இதயத்தை ஆழமாகத் தாக்கி இருக்கிறது (Heart Attack)n என்று முடிவு செய்து கொள்ளலாம்.

**இடது மார்பில் வலி . . . அது மட்டும் தான் மாரடைப்பின் அறிகுறியா?**

இல்லை. சுமார் 60 வீத அறிகுறிகளும் இடது மார்பு (பரவலாக), இடது தோள், இடது கையில் தெரியும். மீதி 40 வீதம் முன்நெற்றி, கழுத்து. தொண்டை, பற்கள், வலது மார்பு, தொப்புள் வரை ஏதாவது ஒரு பகுதியில் தெரியும். அதை உணர முடியும்.

**ஸ்ட்ரோக் ஏற்பட்டால் மரணத்தில்தான் முடியுமா?**

ஸ்ட்ரோக் பொதுவாக மூளையைத் தாக்கும் நோயைத்தான் குறிக்கும். ஆனால், வழக்கத்தில் மாரடைப்பு (Mycardial infarction ML) நோயைக் கூட ஸ்ட்ரோக் என்று சொல்கிறார்கள். இது ஒரு விபத்து மாதிரித்தான். ஒவ்வொரு மாரடைப்பு ஸ்ட்ரோக்கும் மரணத்தில் முடியும் அபாயம் உண்டு. ஆனால் ஒரு விஷயம்... மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள பிரமிக்கத் தக்க முன்னேற்றங்களினால், சரியான நேரத்துக்குள் (மாரடைப்பு நோய் வந்த 4 முதல் 6 மணி நேரத்துக்குள்) சிகிச்சை கொடுக்கப்பட்டால், மரண அபாயத்திலிருந்து நோயாளியைக் காப்பாற்றி விட முடியும்.

**முதல் ஸ்ட்ரோக் வந்த பின்னர் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?**

தொடர்ந்து மருத்துவரிடம் 'செக்-அப்' செய்துகொள்ள வேண்டும். புகை, மதுப் பழக்கம் இருந்தால் உடனே நிறுத்தி விட வேண்டும்.

**இரண்டு மூன்று ஸ்ட்ரோக்குகளுக்குப் பின்னரும் நலமாக இருக்க முடியுமா?**

முதல் ஸ்ட்ரோக் வந்தவர்களுக்கு, ஒரு வருடத்துக்குள் மீண்டும் ஸ்ட்ரோக் வர வாய்ப்புகள் அதிகம். ஒவ்வொரு ஸ்ட்ரோக்கின் போதும் இதயத்தின் திறன் குறைந்து கொண்டே வரும். அதனால் ஏற்படும் விளைவுகள் ஆபத்தானவை. இது ஒரு புறமிருக்க, ஸ்ட்ரோக் வந்தவர்கள் பயத்தின் காரணமாக உடலில் உண்டாகும் பிற வலிகளையும் 'ஸ்ட்ரோக்' என்று நினைக்கிறார்கள். இப் பயம் அவசியமில்லை. முறையான பழக்க வழக்கங்கள் இருந்தால் நலம் பேண முடியும்.

**வேறு நோய்கள் இருப்பதற்கான அறிகுறியாக மாரடைப்பைக் கருதலாமா?**

மாரடைப்பு தனியாகவும் வரலாம். இது தவிர, மூத்த வயதினர், நீரிழிவு நோயாளிகள், உயர் இரத்த அழுத்த நோய் இருப்பவர்களுக்கு மாரடைப்பு, மூளை பாதிப்பு போன்றவை-சிறுநீரகப் பாதிப்பு போன்றவை முன், பின்னாக வரலாம்.

**திடீரென்று ஏற்படும் பயம் ஒருவரது இதயத்தை மேலும் பலவீனப்படுத்துமா?**

ஆம், இதய பலவீனம் மற்றும் மாரடைப்பு நோய் வந்தவர்களுக்குத் திடீர்ப் பயம், மேலும் பலவீனத்தை உண்டாக்கும்.

**இதய பாதிப்புக்குத் தூக்கமின்மை ஒரு காரணமா?**

பொதுவாக ஒரு சிலருக்கு உடல் நலன் பாதிக்கப்படலாம். மற்றப்படி தனியாக இதயப் பாதிப்பு உண்டாகும் வாய்ப்புகள் குறைவுதான்.

**பெண்களிடம் ஏற்படும் மாரடைப்ப ஆண்களிடமிருந்து வேறுபடுகிறதா?**

பொதுவாக, 40 வயதிற்குள் பெண்களுக்கு மாரடைப்பு வரும் வாய்ப்புக் குறைவே. மாதவிடாய் இருக்கும் பெண்களிடம் மாரடைப்பு ஏற்படுவது அரிது.

**மாரடைப்புக்குப் பின்னர், நோயாளி தற்காத்துக் கொள்ளும் முறைகள் எவை?**

உணவுப் பழக்க வழக்கங்களை மாற்ற வேண்டும். இதுவரை பொரித்த உணவுப் பண்டங்களைச் சாப் பிட்டு வந்தால், அவற்றை நிறுத்தி விடலாம். இயற்கை உணவுகளுக்கு 'வெல்கம்' சொல்லலாம்.

நீரிழிவு நோய் இல்லாதவர்கள் பழங்கள் சாப்பிடலாம். தொடர்ந்து 'ஷுகரை' 'கண்ரோலில்' வைப்பது மிக முக்கியம்.

டாக்டர் அட்வைஸ்படி எளிய தேகப் பயிற்சிகளில் ஈடுபடலாம். கடுமையான பயிற்சிகள் அறவே கூடாது.

புகை பிடிப்பது, வெற்றிலை போடுவது. மதுப் பழக்கம் தவிர்க்க வேண்டும்.

காலை நேரத்தில்தான் மாரடைப்பு ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் சொல்கின்றன. இதற்கு இரத்த அழுத்த மாறுதலே காரணம். அதனால், காலையில் எழுந்தவுடன் எதன் பொருட்டும் பரபரப்பு அடைய வேண்டாம்.

எதிலும் நிதானத்தைக் கடைப் பிடியுங்கள்.


## செல்வாஸின் 7 சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** A1

பெயர்:.......................
முகவரி:..........................
..................................
தொழில்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05- 10-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**தலைமன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்


வி. சகாயமேரி
கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# குழந்தைகளுக்கு வயக்ரா

**வ**யக்ரா (viagra). உலகம் முழுக்கப் பிரபலமான 'பலான' மாத்திரையின் பெயர். தொண்ணூறுகளின் மத்தியில் வயக்ரா பயன்பாட்டுக்கு வந்தது. அதன் பின்னர் அது ஏற்படுத்திய பின்விளைவுகள் உலகை ஒரு குலுக்குக் குலுக்கியது.

செக்ஸ் வீரியம் வேண்டி வயக்ரா பயன்படுத்தியவர்கள் மாரடைப்பு வந்து இறந்து போனார்கள் என்ற தகவல்கள் வர, அதன் மீதிருந்த 'மோகம்' வெகுவாகக் குறைந்து போனது.



வயக்ராவின் எழுச்சியும், வீழ்ச்சியும் இப்படி இருக்க. அதைக் குழந்தைகளின் நுரையீரலில் ஏற்படும் பாதிப்புகளுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம் என்ற கருத்து வேகமாகப் பரவி வருகிறது.

இந் நிலையில், ஒரு படி மேலே போய், கேரள மாநில மருத்துவமனை ஒன்றில் ஒரு குழந்தையின் உயிரை வயக்ரா கொடுத்துக் காப்பாற்றி இருக்கிறார்கள்.

இது உண்மையா? ஆமாம்! ஆனால், ஆச்சரியமான உண்மை...

"பொதுவாக குழந்தைகள் பிறந்த பிறகு, அவர்களது நுரையீரலில் அழுத்தம் ஏற்படும். இந்த அழுத்தம் சில நாட்களுக்குப் பிறகு தானாகவே மறைந்து விடுவதும் உண்டு.

ஆனால், அரிதாக சில சமயங்களில் அழுத்தம் இருந்து கொண்டே இருக்கும்போது 'மியூகோனியம்' என்ற ஒரு வித கழிவுப் பொருளை விழுங்கி விடும். இதனை 'மியூகோனியம்-ஆஸ்பிரேஷன் சிண்ட்ரோம்' என்று அழைக்கிறார்கள். இதனால் குழந்தை மூச்சு விடச் சிரமப்படும்.

மேலும், பிறப்பதற்கு முன்போ அல்லது பின்போ நுரையீரலில் இன்ஃபெக்ஷன் ஏற்பட்டிருந்தாலும் அங்கே அழுத்தம் ஏற்படும். குழந்தை இதயநோய் நிபுணர்களுக்குச் சவாலாக விளங்கும், இந்த நுரையீரல் அழுத்தத்துக்கு Pulmonary Hypertension என்று பெயர். பிறவியிலேயே இதயத்தில் ஏற்படும் பாதிப்புகளும் இதற்குக் காரணம் என்பதுதான் உறைய வைக்கும் உண்மை.

அதாவது. மேற்படி பாதிப்போடு பிறக்கும் குழந்தைகளின் இதயத்தில் சிறு நுண்ணிய துளைகள் இருக்கும். இந்தத் துளைகள் மூலம், தேவையான அளவை விட அதிக அளவு இரத்தம், இதயத்திலிருந்து நுரையீரலுக்குள் போகும். இப்படித் தொடர்ந்து அதிக அளவு இரத்தம், நுரையீரலுக்குள் போவதால், அங்கே அழுத்தம் உண்டாகும்."

இந்த நிலையைச் சீர்செய்வதற்கு வயக்ராவைப் பயன்படுத்த முடியும் என்று உறுதியாகக் கூறுகிறார்கள் இந்திய மருத்துவர்கள்.

மேற்கு நாடுகளில் இத்தகைய குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளைக் குணமாக்க வயக்ராவை பயன்படுத்தும் முறை பல வருடங்களுக்கு முன்னரே பரிசோதிக்கப்பட்டுள்ளது.

# கிச்சன் டிப்ஸ்



**ஒ**ரு வீட்டின் சுத்தத்தை வரவேற்பறையை பார்த்துவிட்டு மட்டும் எடை போடுவது தவறு... வீட்டின் உள்ளறைகளான சமையலறை மற்றும் கழிவறையின் சுத்தத்தை வைத்துத் தான் அந்த வீட்டினருடைய சுத்தத்தினைத் துல்லியமாக எடை போட வேண்டும்.

**சுத்தம்**

காலையில், குளித்துவிட்டுச் சமைப்பது நல்லது. சமையலறை மட்டுமல்லாது, அதனை உபயோகிப்பவர்களும் சுத்தமாக இருந்தால்தானே அழகு!

இரு வேளையும் அடுப்பு மேடையைத் (ஸிங்க் உட்பட) துடையுங்கள். தினம் தரையையும், வாரம் ஒரு முறை சமையலறை ஐன்னல்களையும், மாதம் ஒரு முறை ஒட்டடையும் அடித்துச் சுத்தம் செய்யுங்கள்.

சமைக்கிற நேரம் போக மற்ற நேரங்களில் ஸிங்க்கை ஈரமில்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கூடுமான வரை, பாத்திரங்களை ஸிங்க்கில் போட்டுத் தேய்க்க வேண்டாம். இட வசதியிருப்பின் அவ்வப்போது விழும் பாத்திரங்களை வீட்டின் பின்புறத்தில் பாத்திரம் துலக்க மற்றும் துணி துவைக்க வேலையாட்கள் பயன்படுத்தும் குழாயடியில் போட்டு விடுங்கள்.

குப்பைக் கூடையின் விளிம்புவரை குப்பை போட ஆரம்பிக்கும் முன்பே ஒரு ப்ளாஸ்டிக் பையைப் பரப்பி வையுங்கள். குப்பைக் கூடையை இரு வேளையும் சுத்தப்படுத்தி, அலம்பி வையுங்கள்.

குளியலறையில் துணி போட ராட் இருக்குமே, அதைப்போல சமையலறையிலும் ஒன்று பொருத்துங்கள். அடுப்புக்கு, மேடை துடைக்க, கை துடைத்துக் கொள்ள என தனித் தனி துணிகளை உபயோகியுங்கள். அவற்றை அவ்வப்போது அலசி இந்த ராடின் மீது உலர்த்துங்கள்.

பாத்திரங்கள் தேய்க்க, க்ளீனிங் பவுடருடன் சலித்த சாம்பல், அரப் புத்தூள், சலித்த சோப் தூள் கலந்து உபயோகியுங்கள். பாத்திரம் பளிச் சிடும்.

முடிந்தவரை தேய்த்த பாத்திரங்களைத் துணி கொண்டு துடைத்து அடுக்குங்கள். அல்லது அவை உலர்ந்தவுடன் அடுக்கவும். இரும்பு வாணலி, தோசைக் கல் ஆகியவற்றை அவசியம் துடைத்து வைக்கவும்.

தலைக்குக் குளித்திருந்தால் தலைக் கட்டுடனேயே சமையலறைக்குள் (அதாங்க... துண்டைத் தலையில் ஈரம் உறிஞ்ச கட்டியிருப்பார்கள் அல்லவா!) நுழையுங்கள். முடி உதிராமல் இருக்கும். எக்காரணம் கொண்டும் விரித்த தலையுடன் சமைக்க வேண்டாம்.





> கன்னிகை யாயிருந்து தங்கமே தங்கம்- நாங்கள்
> காலங் கழிப்பமடி தங்கமே தங்கம்;
> அன்னிய மன்னர் மக்கள் பூமியிலுண்டாம்- என்னும்
> அதனையுஞ் சொல்லிடடி தங்கமே தங்கம்.
>
> சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# திருமணமாம் திருமணமாம்!

ஆரோன், பிலேயாம் இருவரும் இணைபிரியாத நண்பர்கள். எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வர். இவர்களது நட்பு ஊர் அறிந்த ஒன்று.

நண்பர்கள் திருமணப் பருவத்தை அடைந்ததும் எங்கே தங்களது நட்புக்குப் பாதகம் வந்துவிடுமோ என்று நினைத்துப் பயந்தனர். தங்களுக்கு வரும் மனைவிகள் இருவரும் தோழிகளாக இருந்தால் தங்களது நட்பில் விரிசல் ஏற்படாது என்று நினைத்தனர்.

எனவே, தங்களுக்குப் பெண் தேட வேண்டும் என்பதற்காக இருவரும் புறப்பட்டு துக்கலாபுரம் என்ற கிராமத்தை அடைந்தனர். அப்படியே கிராமத்தின் வனப்பைக் கண்டு மகிழ்ந்தபடியே நடந்தனர்.

அப்போது ஊர் எல்லையில் இருந்த கிணற்றடியில் இரண்டு அழகிகள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"நண்பா! இவர்கள் இருவரும் அழகாக இருக்கிறார்கள். அத்துடன் தோழிகள் என்பது பார்த்தாலே தெரிகிறது. எனவே, நான் போய் விபரம் தெரிந்து வருகிறேன். அநேகமாக இவர்கள்தான் நமக்குப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள்." என்றான் பிலேயாம்.

"சரி" என்று சம்மதித்தான் ஆரோன்.

அந்தப் பெண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அடித்து, பேசி விளையாடிக் கொண்டிருந்தனர். "கலீர்" சிரிப்பும் கும்மாளமுமாக இருந்தது.

மெதுவாகச் சென்று அவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்க ஆரம்பித்தான்.

"மீகாள்! உனக்கு எப்படிப்பட்ட கணவன் வேண்டும் என்று விரும்புகிறாய்?" என்றாள் ரேச்சல்.

"ரேச்சல்...எனக்கு ஏராளமான நகைகள், புடவைகள் என்று வாங்கித் தரணும். என் கணவர் மிகப் பெரிய பணக்காரனாக இருக்கணும். எடுபிடிக்கு வேலையாட்கள் நிறைய இருக்கணும். என்னை மகாராணி மாதிரி வைத்துக் கொள்ள வேண்டும்," என்றாள் மீகாள்.

"கவலைப்படாதே. உன் ஆசை அப்படியே நிறைவேறும். எனக்கு இப்படிப்பட்ட ஆசைகள் எதுவும் இல்லை. என்னை உண்மையா அன்பு செய்யணும். அவர் சம்பாதித்துக் கொண்டு வரும் பணத்தில் ஆடம்பரம் இல்லாமல் அதே சமயம் சத்தான உணவை நான் சமைத்து வைப்பேன். அதைச் சாப்பிட்டு, இருப்பதைக் கொண்டு இன்பமாக வாழ்வதே எனக்கு விருப்பம்" என்றாள் ரேச்சல்.

இதைக் கேட்ட பிலேயாம் யோசித்தான். இவன் ஏற்கனவே பெரும் பணக்காரன். ஆனால், ஒவ்வொரு காசையும் எண்ணி, எண்ணி செலவு செய்வான். ஆடம்பரச் செலவு என்றால் பிடிக்காது. எனவே ரேச்சலை தனக்கு மனைவியாக தேர்ந்தெடுத்துக் கொண்டு மீகாளை தன் நண்பனின் தலையில் கட்டி விட நினைத்தான்.

"ரேச்சல் நிச்சயமாகக் குடும்பத்தைச் சிறப்பாக நடத்துவாள். மேலும், மேலும் பணம் சேர்க்கலாம்," என்று நினைத்து மகிழ்ந்தான்.

சிறிது நேரத்தில் நண்பனிடம் சென்று "குட்டைக் கை சுடிதார் உனக்கு, நீளக்கை சுடிதார் எனக்கு" என்று சொன்னான்.

தன் நண்பன் தனக்கு நல்லதைத்தான் செய்வான் என்று நினைத்த ஆரோனும் சம்மதித்தான்.

பிறகு இருவரும் அந்தப் பெண்களின் வீட்டில் விசாரித்து, சம்மதம் பெற்று இருவருக்கும் மிகவும் சிறப்பாகத் திருமணம் நடந்தது. ஊரே இவர்களின் ஒற்றுமையைக் கண்டு வியந்தது.

திருமணம் முடிந்த அடுத்து வந்த நாட்களில் தன் மனைவி ரேச்சலின் நடவடிக்கைகளைக் கண்டு அதிர்ந்தான் பிலேயாம்.

பீரோவில் இருந்து பணம் எடுத்து இஷ்டத்துக்கு நகைகள் வாங்குவதும், தொட்டதுக்கெல்லாம் வேலைக்காரர்கள் வைப்பதும், தினமும் விருந்துச் சாப்பாடு சமைப்பதுமாக இருந்தாள்.

தன்னுடைய காசு கரைவதைக் கண்டு அதிர்ந்தான்.

"ரேச்சல்...என்னது? இப்படிச் செலவு செய்ற? அன்று நீ கிணற்றடியில் உன் தோழியிடம் பேசிய பேச்சுக்கும், உன் செயலுக்கும் சம்பந்தமே இல்லையே," என்றான் கோபமாக.


"ஓ! அதுவா? அன்று நாங்கள், என் தோழிக்கு எப்படி மாப்பிள்ளை வந்தால் பிடிக்கும் என்பதை நானும், எனக்கு எப்படி பிடிக்கும் என்பதை அவளும் சொல்லி நடித்தோம். அதைத்தான் நீங்கள் பாதியில் கேட்டிருக்கிறீர்கள் போலும்," என்றாள் அலட்சியமாக.

நாட்கள் சென்றது. ரேச்சலின் அதிகப்படியான ஆடம்பரத்தால் ஏழையாகிக் கொண்டே போனான் பிலேயாம். அங்கே மீகாளின் சமர்த்தான குடித்தனத்தால் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆரோன் பணக்காரனாகிக் கொண்டே போனான்.

தன்னுடைய நண்பனின் வாழ்க்கை எப்படி ஆனாலும், பரவாயில்லை, தான் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்த தன்னுடைய கெட்ட குணம் தன்னையே அழித்து விட்டதை எண்ணி வருந்தினான் பிலேயாம்.

அத்துடன் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பது எவ்வளவு உண்மை என்பதையும் உணர்ந்தான் பிலேயாம்! ■

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **05.10.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **464**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 461

**பரிசுக்குரியவர்:**
**பெ.ரெ. சுவஸ்திகா,**
4 ஏ, பிரதான வீதி, கலஹா-20420.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **ஜோ.சாமலின்,** 14,லொயிஸ் அவனியு,மட்டக்களப்பு. | **ரா.அருண்ஸ்ரீ,** போட்ஸ் வுட், கந்தப்பளை. |
| **பாத்திமா ஸன்கா,** 31, வைத்தியசாலை வீதி, மாவனல்ல. | **எஸ். உஷாநந்தினி,** அ/பராக்க சர்வதேசபாடசாலை, பண்டாரவளை. |
| **எஸ்.ராஜசேகர்,** சிவஅரங்கம், பட்டிருப்பு. | **பாத்திமா ருமானா,** எட்றிவஸ் வீதி, நீர்கொழும்பு. |
| **யோ.பிருதிவிகா,** சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை. | **எஸ்.கே.மொகமட் நுஸ்ரி,** சன்ஜீதா வத்த, நுரைச்சோலை 61342. |
| **அ.சர்மிகா,** க/கலாபொக்க த.ம.வி, மடுல்கலை. | **ர.திசாந்தன்,** 1ஆம் குறுக்கு, பெரியமுல்லை, நீர்கொழும்பு. |

## விடுகதைகளும் விடைகளும்

1. ஆயிரம் பேர் கட்டிய அழகான இனிப்பு மண்டபம், பறந்து பறந்து இனிப்புச் சேர்க்க உறவுக் கூட்டம் அது என்ன?
2. உடம்பில் இருந்தும் உணர்ச்சி இல்லாதவன் அவன் யார்?
3. கீழே எறிந்தால் மேலே போவான் அவன் யார்?
4. அவனை உணர முடியும் பார்க்க முடியாது; அடைத்து வைத்துத் திறந்த போதிலும் ஆளைப் பார்க்க முடியாது அவன் யார்?
5. தொட்ட பிறகு கண்ணீர் விட வைத்தவன் இன்று கண்ணில் படாமல் கலங்க வைக்கிறான் அவன் யார்?
6. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட ஆயுள் அவன் யார்?
7. சட்டையைக் கழற்றினால் பசிக்கு விருந்து அது என்ன?
8. கத்தி போன்ற ஆயுதமில்லாமலே அந்தப் பெயரெடுத்தவன் அது என்ன?

**விடைகள்.**

8. வெட்டுக்கிளி
6. செங்கல் 7. வாழைப்பழம்
4. காற்று 5. வெங்காயம்
2. நகம் 3. பந்து
1. தேன் கூடு- தேனீக்கள்

## பிட்டா குருவிகள்

குருவி இனத்தில் மிக உயரமான கூடுகளைக் கட்டும் குருவி என்ற பெருமை 'பிட்டா'வுக்கு உண்டு. இந்தக் குருவியைப் பற்றிய தகவல்கள் சுவாரஸ்யமானவை.



* இந்தக் குருவியின் எடை 10 கிராம் மட்டுமே. ஆனால் தினமும் இதே அளவுக்குச் சமமான உணவை இரையாகக் கொள்கிறது. இது பறவை இனத்தில் மிக மிக ஆச்சரியமான விஷயம்.

* நத்தையை இந்தக் குருவிகள் விரும்பிச் சாப்பிடும். நத்தைக் கூட்டை உடைத்து அதிலுள்ள சதைப்பற்றான பகுதியைச் சாப்பிடுவதில் இவைகள் தேர்ந்தவை. எந்தப் பாறையின் மீது போட்டால் நத்தையின் கூடு உடையும், எதில் சதைப்பற்று அதிகமிருக்கும் என்பதைக் கூட இவை அறிந்து வைத்திருக்கின்றன.

* இந்தப் பறவைகள் கூட்டமாக வாழாது. தனித்தனியே வசிக்கும், இணைகூடும் காலத்தில் மட்டும் சேர்ந்து வாழும்.


* வசிப்பதற்குப் பாதுகாப்பான கூடுகளைக் கட்டிக் கொள்ளும். இந்தக் கூடுகள் 30 அடி உயரத்திற்குக் கூட இருப்பதுண்டு. இந்தக் கூட்டுக்குள் நுழையும் வழியை வேறு எந்தப் பறவையும், பிராணியும் கண்டு பிடித்து விட முடியாத வகையில் அமைத்து இருக்கும்.

* பிட்டா குருவிகளுக்கு உணவ இருக்குமிடத்தை அறியும் நுகர்வாற்றல் அதிகம். இதனால் சுலபமாக இரை இருக்குமிடத்தை அறிந்துவிடும். கால்கள் இரையைக் கௌவிப் பிடிப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளன.

* அடர்ந்த வெளிச்சமில்லாத பகுதிகளிலேயே இவை வாழ்கின்றன. ஏனெனில் இவைகளின் பளிச்சிடும் நிறம் பெரிய எதிரிகளிடம் காட்டிக் கொடுத்துவிடும் என்பதை இவை அறிந்து வைத்திருக்கின்றன. எனவேதான் அடர்ந்த பகுதிகளை இருப்பிடமாகக் கொண்டுள்ளன.

* பிட்டா குருவிகளில் மட்டும் 26 வகை உண்டு. ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் இவை அதிகம் காணப்படுகின்றன. ■

## இந்த வாரப் புதிர்




P, Q, R, S, T என்பவற்றைக் கண்டுபிடியுங்கள்?

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:
ஒவ்வொரு வட்டத்தினிலும் உள்ள எண்களின் கூட்டுத் தொகை 75 ஆக் வர வேண்டும். எனவே
X =21
Y =42

# மப்பால் வந்த தப்பு

அது ஒரு பிரபலமான மில். அதில் இருபத்தைந்து தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அந்த இருபத்தைந்து பேருள் ஒருவன்தான் தனுஷன். அவன் அந்த மில்லுக்குப் புதியவன். ஆறு பேரைக் கொண்ட தன் குடும்பத்தில் இளையவன். பெரும் நாட்டுப் பிரச்சனைகளின் மத்தியிலும், வறுமையின் கோரப்பிடியின் மத்தியிலும் O/L, A/L, G.A.Q என்று மூன்று பரீட்சைகளிலும் பாஸ்பண்ணி இப்போது B.A (பைனல்) படிப்பவன்.

அரசதொழில் ஒன்று தனக்கு இன்னமும் கிடையாமலேயே அந்த அரிசி ஆலையில் ஒரு கூலித் தொழிலாளியாய் கால் பதித்தவன். ஆம் அவன் அந்த மில்லில் கால் பதித்து ஐந்து நாட்களேதான். ஐந்தாவது நாள் இரவு அவனது கண்கள் கடலானது. முதலாளியின் பார்வையில் அவன்.....

அன்று வெள்ளிக்கிழமை. என்றும் போல் அன்றும் அந்த மில்லின் பின்புறமாக உள்ள குசினிக்குச் சென்று இரவுணவை உண்டுவிட்டுத் திரும்பிய தனுஷன் மில்லின் முன்புறமாக உள்ள விலாட்டு மாமரத்தடியில் குவித்திருந்த மணற் கும்பியின் மேல் இன்னும் சிலருடன் சிறிது நேரம் குந்தியிருந்தான். மெதுவாக வீசிய இளங்காற்று அவன் மேனிக்கு இதமாக இருந்தாலும் தன் நிலை பற்றியும், தன் குடும்பத்தினரின் நிலை பற்றியும், மில் தொழில் பற்றியும் தன் சிந்தனைகளை ஓடவிட்டபடி குந்திக்கொண்டிருந்தான். நேரமும் ஓடிக் கொண்டே இருந்தது. இரவு மணியோ ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது.

"தனுஷன் இஞ்ச வாடா" கணீரென ஒரு குரல் அந்த மில்லின் ஒப்பீசின் முற்றத்தில் இருந்து வந்தது.

தனுஷன் மணற்கும்பியில் இருந்து எழுந்து சென்றான் அவ்விடத்தை நோக்கி. அந்த மில்லுக்கு இரண்டாவது முதலாளியான ராமசாமி சாப்பாட்டுப் பீங்கானும் கையுமாய் கொச்சிப் பழம் போல் சிவந்த கண்களுடன் கதிரையில்– முற்றத்தில் இருந்து கொண்டிருந்தார்.

தனுஷனை உச்சி முதல் உள்ளங்கால் வரை அகோரப் பார்வை பார்த்துவிட்டு அந்த ராமசாமி முதலாளியார் வார்த்தைகளைத் தணலாய்க் கொட்டத் தொடங்கினார். என்ன நடந்தது? ஏது நடந்தது? எதுவும் தெரியாதவனாய் தனுஷன் பேசாத சிலையாய் அவர் முன்னால் கால் விரலால் நிலத்தைக் கீறிக் கொண்டு கண்ணீரையும் தரையில் சிந்திக்கொண்டு நின்று கொண்டிருந்தான். அந்த முதலாளியோ தனுஷன் மீது எரிந்து வீழ்ந்து கொண்டே இருந்தார்.



"படிச்ச நான் பள்ளிக்குப் போன நான் எண்டெல்லாம் சொன்னேடா. என்னத்தடா படிச்சா? ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கக்க உற்றுப் பார்த்துக் கொண்டே இருப்பது முறையாடா? நல்லாத் தெரியுமல்லவா நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. சாப்பாட்ட காணல்லையாடா நீ இதுவரைக்கும்...." போன்ற அந்த முதலாளியின் ஆத்திரமும் ஆவேசமும் கலந்த வார்த்தைகள் தனுஷன் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டியது போல் இருந்தது. அவனுக்கும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனாலும் அனைத்தையும் நெஞ்சுக்குள் போட்டுப் பொறுத்துக் கொண்டான். "நெல்லைக் கொட்டினால் அள்ளலாம். சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது" என்பார்கள். இதை நன்கறிந்தவன் தனுஷன். ஆனால்,அந்த முதலாளியோ இதை அறியவில்லைப் போலும். தனது வாயையும் திறந்தால் விளைவு விபரீதமாகி விடும் என்பதையும், 'நிதானத்தோடு இருந்தால் பேசலாம் இது தண்ணி நிறைய அடிச்சிப் போட்டு தேவைக்கில்லாமல் கத்தின இந்த முதலாளிற்ற என்னத்தப் பேசிறது' என்பதையும் நன்கறிந்த தனுஷனாதலால் தனது வாயை அடக்கிக் கொண்டான். சட்டென அவ்விடத்தை விட்டுத் திரும்பிய தனுஷன் வாடியின் ஒரு மூலையில் போய்க் குந்திக் கொண்டு அழுது கொண்டே இருந்தான்.

தனுஷன் தன் பொறுமையைக் கடைப்பிடித்தாலும் கூட வீணான அந்த ஏச்சும் பேச்சும் தனுஷன் நெஞ்சில் 'இடியாய்' விழுந்து கொண்டே இருந்தது. உண்மையாய் நடந்தது என்றால் தாங்கிக் கொள்ளலாம். இதோ உண்மையில் முதலாளி இருக்கிறார் என்பதையோ அவர் சாப்பிடுகிறார் என்பதையோ தனுஷன் கண்கள் படம் பிடிக்கவில்லை. இப்படி இருக்கும் போது அதைப் பொறுத்துக் கொள்வதென்பதும் முடியாத காரியமே. அழுதழுதே தீர்த்தான். தனக்குள்ளேயே சொல்லிச் சொல்லி அழுது கொண்டிருந்தான்.

"நான் ஏன்தான் இந்த மில்லுக்கு வந்தேனோ? சோறத் தண்ணி வென்னிய காணாம கடையளிஞ்சி போய்க் கிடந்தவனா நான்? வித்தியாசமான பார்வையில் ஏன்தான் என்னை இந்த முதலாளியார் நோக்கினார். ஆண்டவா! இதெல்லாம் நீதான் பார்த்துக் கொள்ளப்பா" என்றெல்லாம் தனக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தான் . சக தொழிலாளர்களெல்லாம் அவனைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

"தனுஷன்! குழறாத தனுஷன். இந்த முதலாளி குடிச்சாரெண்டா இப்படித்தான். நாங்களெல்லாம் பட்ட ஏச்சுப் பேச்செண்டா கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால், குடியாமல இருக்கக்க நல்ல மனுஷன் அவர். மப்படிச்சாரெண்டா அவர் இப்படித்தான் தப்புக் கணக்குகள் போட்டு வீணாகக் கிளம்பிக் கொண்டிருப்பார். கவலையை விடு தனுஷன், கவலையை விடு" என்றெல்லாம் ஆறுதல் வார்த்தைகளைக் கூறிச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள் சக தொழிலாளர்கள். ஆனாலும் அவனுக்கோ அழுகை அழுகையாக வந்தது. ஆயிரமாயிரம் எண்ணங்களும் அவன் மனதில் வந்து வந்து போனது.அவனது மனம் புண்பட்டே விட்டது. இனி இந்த மில்லில் வேலை செய்வதில்லை என்றும் விடிந்த உடனே தன் வீட்டைப் போய்ச் சேர வேண்டும் என்றும் முடிவு எடுத்த தனுஷன் அதே நேரம் மீண்டுமொரு முடிவுக்கு வந்தான்.

'வாழ்க்கையில் இதெல்லாம் வருவது சகஜம்தான், எல்லாவற்றையும் அனுபவிப்பதே வாழ்க்கையாகவும் இருக்கிறது. மனவேதனையால் இங்கு தங்காமல் வெளிக்கிட்டு வீட்டுக்கு போகலாம். போனால் ஆருக்கு நட்டம் நமக்குத்தானே. உழைக்காமல் இருந்து எப்போதும் ஓசிச் சாப்பாடு சாப்பிட முடியாது. அப்பாவும், அண்ணாமாரும் உழைத்துழைத்துத் தந்தது போதும். அவர்கள் பாவம். ஆதலினால் நடந்ததை மறந்து விட்டு தொழில் தொடர்ந்து பார்ப்பம்' என்ற முடிவை எடுக்கவும் அந்த மில் றைவர் வந்து "ரேண்பபடி இண்டைக்கு நெல்லுக்குத்துற ஆக்க ளெல்லாம் வாங்க" என்று கூப்பிடவும் நேரம் சரியாக இருந்தது.

தனுஷனும் உடுத்தி இருந்த உடைகளைக் கழற்றிக் கொடியில் போட்டு விட்டு வேலைக்கான பழைய உடைகளை உடுத்திக் கொண்டு வாடியை விட்டு நெல் குத்துவதற்குப் போய்ச் சேர்ந்தான். அப்போது நேரம் பத்து மணியாக இருந்தது. ராமசாமி முதலாளியாரோ பஞ்சு மெத்தையில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்.

**'வெல்லபதி' சரவணமுத்து நவேந்திரன்–எருவிலூர்**

# கல்லூரிப் பயணம்



இன்றும் அதிகாலை அரைத்தூக்கக் கோலத்தில் அலங்கோல விழிகளுடன் படுக்கையை விட்டு எழுந்திருந்தேன். அதிகாலை நேரம் ஐந்துமணி. அம்மா அடுப்படியில் அரக்கப்பரக்க ஆரவாரமாயிருந்தா. அப்பாவின் தூக்கம் கலையாமல் இருந்தது. அண்ணா குளியலறையில் குளிக்கும் சத்தம் கேட்டது. இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் நான் பாடசாலை புறப்பட வேண்டும். தென்மராட்சியின் பிரபல கல்லூரி ஒன்றில் கல்வி கற்கும் நான் இடம்ப்பெயர்வு தந்த இன்னல்களில் ஒன்றாக வலிகாமத்தில் இருந்து பாடசாலை செல்ல வேண்டியிருந்தது. பாடசாலை போக்கு வரத்து சேவை சீர்ப்படாததால் மினி பஸ்களில் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அவசரமாகக் கடமைகளை முடித்து வழமை போல் பேரூந்து நிலையம் சென்றேன். அப்பால் வண்ண நிறங்களில் மினி பஸ்கள் வரிசையாய் விடப்பட்டது வடிவாகத்தான் இருந்தது. ஒரு சொக்லேட் கலர் பஸ்ஸில் நான் ஏறினேன். ஒரு சீற் காலியாக இருந்தது. ஆனந்தப்பட்டு அமர்ந்து கொண்டேன். அலைபாயும் கண்கள் எங்கெங்கோ எல்லாம் சென்று வந்தன. ஏதேதோ அவசரங்களாய் எவரெவரோ எதிர் எதிரே முட்டியும் விலகியும் எட்டி எட்டி நடந்தனர். அவற்றை நோக்கிய விழிகள் மீண்டும் பஸ்ஸினுள் வந்தன. என் அருகே நிற்பவரை நிமிர்ந்து பார்த்தேன். எமது கல்லூரியின் மூத்த ஆசிரியைகளில் ஒருவர். "மிஸ் இருங்கோ" என்று கூறி மனமில்லாமல் இருக்கையை விட்டு எழுந்தேன். பேரூந்தில் ஏறுவோரோ பெருக்கம் பெருக்கமாய்.... பஸ் நடத்துநரின் மனிதாபிமானமில்லாத சேவை என்னை மட்டுமல்ல எல்லோரையும் வெறுக்கச் செய்தது. "பின்னுக்குப் போங்கோ... பின்னுக்குப் போங்கோ..." நடத்துனர் உச்சஸ்தாயியில் கத்தினார். நானும் பின்னே சென்றேன். வியர்வைகளுடன் கலந்து கொலோன், பரீஸ், சாளி, யஸ்மின் என்ற வாசனைகள் வயிற்றைப் புரட்டி எடுத்தது. சார்ந்து நிற்போரும் சரிந்து நிற்போரும் உற்று நோக்குவோரும் என்னில் சுகம் கண்டு கொண்டிருந்தனர். உள்ளே காற்று வந்தால்தான் எனக்கு நிற்க முடியுமாக இருந்தது. நண்பிகளும் வந்து சேர்ந்தனர். நான் நின்று கொண்டிருந்த சீற்றிற்கு எதிராக அழகிற்கு அகராதி எனும்படியாக ஒரு இளமங்கை இருந்தா. நான் அவவை நோக்கி "யன்னல் கண்ணாடியைத் துறந்து விடுங்கோ" என்றேன். அவ என்னை ஒரு எதிரி போல் நோக்கிவிட்டு "டஸ்ற் வரும் திறக்கேலாது" என்றா. எனக்குக் கோபம் வரவே "ஓ.... நீங்கள் வடிவா இருங்கோ. நாங்கள் ஒற்றைக்காலிலை நிண்டு படுற பாடு" என்றேன். நாங்கள் நெடுக இருக்கிறோமே இண்டைக்குத் தான் இருக்கிறம்" என்று பதில் வந்தது. மேலும் தொடர்ந்தது. பெரியதொரு வாய்ச் சண்டை நடந்து முடிந்தது. பாடல் பலமாக ஒலித்துக் கொண்டிருந்ததால் முன்னே இருந்த கல்லூரி ஆசிரியைக்கோ மற்றவர்களிற்கோ கேட்கப் பெரிதும் வாய்ப்பிருக்கவில்லை. இடையில் கைதடி பாடசாலை ஒன்றில் அந்த மங்கை இறங்கிச் சென்றா. அப்போது அவ ஒரு ரீச்சர் என நானும் சக நண்பிகளும் உணர்ந்து கொண்டோம்.

அன்றைய பயணம் அப்படி...... நான் பாடசாலை விட்டு வீடு வந்து சேர்ந்தேன். வீட்டில் எங்கள் நெருங்கிய உறவினர்கள் சிலர் வந்திருந்தார்கள். அப்போதுதான் இன்று அண்ணாவிற்குப் பெண் பார்க்கப் போவது நினைவிற்கு வந்தது. விரைவாக நானும் புறப்பட்டேன். அண்ணி அப்படியோ? அழகோ? எனப் பல பல எண்ணங்கள். அண்ணி வீட்டை அடைந்தோம். "வாங்கோ.... வாங்கோ...." என்ற வரவேற்பு வாசகத்துடன் சந்தனத் திலகம் கொடுத்து வரவேற்பது அம்சமாக இருந்தது. எல்லோரும் போல நானும் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டேன். சில நிமிடங்கள்.... பச்சைச் சேலை, பச்சைத் தோடு, பச்சைக் காப்பு என பச்சை சாத்தி வரும் அந்தத் தேவதையை எல்லோரும் ஆவலுடன் நோக்கினார்கள். நானும் நோக்கினேன். பளபளக்கும் தட்டில் பலகார மேந்தி பசுமைக் கோலத்தில் என்னைக் கண்டவுடன் சிறு கோபம் தங்கிய முகம். நான் அதிசயமாய் நோக்கினேன்.

அவவேதான் ....அந்த ரீச்சர் காலமை யன்னல் கண்ணாடிக்குச் சண்டை பிடித்த அதே ரீச்சர், இவதான் எனக்கு அண்ணி.... சீ.... ஏன் காலை இப்படி நடந்து கொண்டேன்.... நாவினை அடக்கியிருக்கலாம். கோபத்தை அடக்கியிருக்கலாம்..... என மனம் மகா போராட்டம் நடத்தியது. இருவரும் மௌனமாகவே இருந்ததில் எனக்குத் திருப்தி.

**நிரோஷினி கணேசலிங்கம்–யாழ்ப்பாணம்**

# குறி வெச்சாச்சு

ஐந்து டிகிரி செல்ஸியஸ் குளிரின் உக்கிரத்தில் உறைந்து போன மும்பை நேரம் 1.40. மும்பையின் நூற்றி சொச்சத் தியேட்டர்களில் இரவுக்காட்சிகள் முடிந்து ஷிரிதீக்ரோஷன் ஷாருக்கான், அமீர்கான், அஜய்தேவ்கன், சல்மான்கான் ராட்சஸ கட் அவுட்கள் இருட்டுக்குள் விழுந்து பனியில் நனைய ஆரம்பித்திருந்தன.

டாக்ஸி டிரைவர்கள் ரோட்டோரமாய் டாக்ஸிகளை நிறுத்திவிட்டு பிராக்கெட் குறிகளாக மாறி பின் சீட்டில் சாராய போதையோடு தூங்கிக் கொண்டிருந்தார்கள். பலான தொழில்காரிகள் கிடைத்த கஸ்டமர்களை மலிவான ரேட்டுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு, மலிவான ஹோட்டல்களுக்குள் நுழைந்திருந்தார்கள். பிளாட்பாரங்களில், கிரீடங்கள் இல்லாத இந்நாட்டு மன்னர்களும், அரசிகளும், இளவரசர்களும், இளவரசிகளும், எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் வால் போஸ்டர்களைப் போர்வையாக போர்த்திக் கொண்டு, நித்திரைக்குள் விழுந்திருந்தார்கள்.

இந்த இரவு நேர மும்பையைப் பற்றி இன்னும் ஒரு பேராகிராப் வர்ணிப்பதற்குள்- வாலஸ் ரோட்டின் வளைவில் வேகமாய் திரும்பும்- அந்த வெள்ளை நிற செவர்லே கார் நம் கண்ணில் பட்டு விடுகிறது. வர்ணனையை நிறுத்திக் கொண்டு- அந்தக் காரைக் கவனிப்போம்.

காருக்குள் அடைசலாய் ஆறு பேர் உட்கார்ந்திருந்தார்கள். எல்லோருமே ஏர்ஃபோர்ஸ் வெள்ளை யூனிபார்ம்களில் தெரிந்தார்கள். கார் பானெட்டின் நெற்றியில் சிறகு விரித்த பட்சி சின்னமும் அதற்குக் கீழே 'ஏர் விங்க்-செக்யூரிட்டி ஃபோர்ஸ்' என்ற ஆங்கில இந்தி வாசகங்களும்- எனக்ரேவ் செய்யப்பட்ட எவர் சில்வர் பிளேட்டில் மின்னியது. காரின் மண்டையில் ஒரு சிவப்பு விளக்குச் சத்தமில்லாமல் சுழன்று கொண்டிருந்தது.



"கோர்தன்!"

பின் சீட்டிலிருந்து குரல் கேட்க, காரின் ஸ்டீயரிங்கை கையாண்டு கொண்டிருந்தவர் திரும்பினார். வழுக்கை மண்டை, தெரு விளக்கில் அபாரமாய் மின்னியது.

"ஸார்!"

"கார் இவ்வளவு வேகம் வேண்டாம்.... இப்போ என்ன வேகத்துல போயிட்டிருக்கே...?"

"எண்பது ஸார்...."

"அறுபதுக்கு வா..."

"எஸ்.... ஸார்"

செவர்லேயின் வேகம் சட்டென்று குறைந்தது. காரின் என்ஜின் வேறு சுருதியில் 'ஹம்' பண்ணியது. டிரைவரைத் தவிர மற்ற ஐந்து பேரும் யூனிபார்மில் டாலடிக்கும் நட்சத்திரங்களோடு நேர்பார்வை பார்த்துக் கொண்டு வந்தார்கள். அதிக தீவிரமான சிந்தனை முகங்கள்.

போர்ப்பந்தர் ரோட்டில் கார் திரும்பிய போது ஒருவர் குரல் கொடுத்தார். "உத்தம்சிங்! கமிஷனரோடு பேச்சுவார்த்தை நடத்த மூணு பேர் மட்டும் போனாபோதும் நாம எல்லோருமே உள்ளே போக வேண்டாம்."

"இது ஏற்கனவே பேசினதுதானே...?"

"யார் யார் போறதுங்கிற முடிவுக்கு வந்துட்டீங்களா?"

"எஸ்....! நான், குரு கோவிந்த், சர்தார்...."

"பேச்சுவார்த்தையை ஒழுங்கா முடிப்பீங்களா...? இல்லே நாங்களும் உள்ளே வரணுமா...?"

"வேண்டியதில்லை...."

பேசிக் கொண்டிருக்கும் போதே காரின் வேகம் இன்னமும் குறைந்தது. ஒரு கிளைப்பாதையில் திரும்பியது. பாதையின் ரெண்டு பக்கத்திலும் மரங்கள் கும்பலாய் தெரிய சோடியம் வேபர் விளக்குகள் தன் பாதாம் நிற வெளிச்சத்தை மரங்களின் தலைகளின் மேல் பொழிந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. மரங்களின் கீழே இருந்த குடிசைகளுக்குள் காடா விளக்குகள் எரிவது தெரிந்தது. போக்குவரத்து சுத்தமாய் செத்துப்போன அந்த ரோட்டில் மேலும் நீளமாய் ஒரு ஐந்து நிமிஷ பயணம். போலீஸ் கமிஷனர் பங்களா சிப்ரஸ் மரங்களுக்கு மத்தியில் இருட்டில் தெரிய காம்பௌண்ட் கேட்டின் முன்புறம் ரைபிள் ஏந்திய கான்ஸ்டபிள்கள் நின்றிருந்தார்கள். லேசான அசைவுகளோடு தெரிந்தார்கள்.

கார் இன்னும் வேகம் குறைந்து, காம்பௌண்ட் கேட்டுக்கு முன்னால் போய் நின்று மௌனமானது. ஆறு பேரில் ஒருவர் இறங்கி, கான்ஸ்டபிள்களை நோக்கிப் போனார். சொன்னார்.

எழுதுவது

**ராஜேஷ்குமார்**

"ஏர் விங்க் செக்யூரிட்டி ஃபோர்ஸிலிருந்து வர்றோம். கமிஷனரை உடனடியாய்ப் பார்க்க வேண்டும்."

கான்ஸ்டபிள் ஏறிட்டார் "என்ன விஷயமாய்?"

இண்டர்நேஷனல் ஸ்மக்ளர் ஒருத்தனை நாளைக்கு விடிகாலையில் ஏர்போர்ட்டில் வைத்துக் கைது செய்ய வேண்டும். அது குறித்து அவரிடம் ஆலோசனை நடத்த வேண்டும்.

"இந்த நேரத்திலா?"

"விஷயம் அவசரம். டெல்லியிலிருந்து தகவல் கிடைத்து உடனே வருகிறோம்."

"ஒரு நிமிஷம்" கான்ஸ்டபிள் செக்யூரிட்டி கூண்டுக்குள் நுழைந்து இண்டர்காமை உசுப்பி, ரிஸீவரில் தொடர்பு கொண்டார். கமிஷன் விஷ்ணுவர்த்தன் தூக்கக் குரலில் பேசினார். காராசேவுக்குரல்.

"என்ன விஷயம்?"

கான்ஸ்டபிள் ஒப்புவித்தார். "ஏர் விங்க செக்யூரிட்ரி ஆபீஸர்ஸ் உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்கள். ஒரு ஸ்மக்ளரை ஏர்போர்ட்டில் வைத்துக் கைது செய்ய வேண்டுமாம். அது சம்பந்தமாய் உங்களோடு பேச அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்."

"எதில் வந்திருக்கிறார்கள்."

"ஏர் விங்க் செக்யூரிட்டி போர்ஸ் காரில்."

"உள்ளே அனுப்பு."

கான்ஸ்டபிள் ரிஸீவரை வைத்துவிட்டு செக்யூரிட்டி கூண்டினின்றும் வெளியே வந்தார். வெளியே காத்திருந்தவரைப் பார்த்து "நீங்கள் உள்ளே போகலாம்" என்றார்.

காரினின்றும் உத்தம்சிங், கோவிந்த், சர்தார் இறங்கினார்கள். உத்தம்சிங் காருக்குள் குனிந்து பார்த்து "கமிஷனரிடம் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு ஏர்போர்ட் வந்துவிடுகிறோம். கார் எங்களுக்காகக் காத்திருக்க வேண்டாம். நீங்கள் புறப்பட்டு விடுங்கள்."

"நல்லது ஏர்போர்ட்டில் சந்திப்போம். "பின் சீட்டில் உட்கார்ந்திருந்தவர் டிரைவருக்கு சைகை காட்ட கார் ரிவர்ஸில் வந்து இடதுகை பக்கமாய் திரும்பி ஓடியது.

மூன்று பேரும் பூட்ஸ் சத்தங்களோடு உள்ளே நுழைந்தார்கள். கமிஷனரின் வரவேற்பறை ட்யூப்லைட் வெளிச்சத்தோடு தயாராய் காத்திருந்தது.

நைட்கவுனின் முடிச்சை இறுக்கக் கட்டிக்கொண்டு தூக்கம் தொலைந்து போன முகத்தோடு கமிஷனர் விஷ்ணுவர்தன் மாடியிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தார். விஷ்ணுவர்தன் - உரம் பாய்ந்த பொலிஸ் உடம்பு. சதைப் பிடிப்பான உடம்பு. இன்னும் இரண்டு வருஷம் கழித்து வரப்போகும் ரிடையர்மெண்ட்க்காக இப்போதிருந்தே கவலைப்படுகிறவர்.

வரவேற்பறைக்குள் நுழைந்தார். ஏர்போர்ஸ் யூனிபார்மில் நட்சத்திரங்கள் டாலடிக்க நின்றிருக்கும் அந்த மூன்று பேர்களையும் ஏறிட்டார்.

"எனிதிங்க் இம்பார்ட்டென்ட்?"

"இந்த அகால நேரத்தில் உங்களுக்கு தொந்தரவு கொடுப்பதற்காக மன்னிக்க வேண்டும் கமிஷனர் ஸார்.

"விஷயத்தைச் சொல்லுங்கள்."

"டெல்லி ஏர்போர்ட்டிலிருந்து அரைமணி நேரத்திற்கு முன்னால் மும்பை ஏர்போர்ட்டுக்கு ஒரு தகவல் வந்தது ஸார். இண்டர்நேஷனல் ஸ்மக்ளர் ஜாதவ்தேவ் மாறு வேஷத்தில் மும்பை ஏர்போர்ட்டுக்கு வரப்போவதாகவும், அவனை மடக்கிப் பிடிப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படியும் உத்தரவு."

"இதை நீங்கள் டெலிபோனிலேயே சொல்லியிருக்கலாமே."

"எங்களுக்கு நேர்ல வந்தாத்தான் வசதி" உத்தம்சிங் சொல்லிக் கொண்டே கோட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து வெளியே எடுத்தான்.

கை விரல்களில் பிஸ்டல் முளைத்திருந்தது.

"ஏ...ஏ....ஏய்...நீ...யார்?"

கமிஷனர் வெளிறிப் போன முகத்தோடு, திணறிக் கொண்டு எழ குரு கோவிந்தும், சர்தாரும் சட்டென்று பிஸ்டல்களோடு பாய்ந்து. அவருடைய நெற்றிப் பொட்டின் இரண்டு பக்கங்களிலும் பிஸ்டல்களின் வாய்களைப் பதித்தார்கள்.

"கமிஷனர் ஸார்! இந்த நிமிஷத்திலிருந்து நீங்க மூச்சைக் கூட மெதுவாகத்தான் விடணும்."

"யா...யா....யார் நீங்க?"

"சொல்கிறோம் மாடிக்குப் போயிடலமா? இங்கிருந்து பார்த்தா செக்யூரிட்டி கார்ட்ஸ் தெரியறாங்க."

கமிஷனர் விஷ்ணுவர்தன் அந்தக் குளிரிலும் வியர்த்துக் கொண்டே சுற்றும் முற்றும் பார்க்க, உத்தம்சிங் அவர் தோளைத் தட்டிச் சிரித்தான்.

"எதையாவது பண்ணித் தப்பிக்க நினைச்சா... நினைச்ச அந்த நிமிஷமே, எங்க மூணு பேரோட தோட்டாவும் உங்க உடம்போட மூணு முக்கியமான இடத்துல பாயும்."

"நா... நா நான் இப்போ என்ன பண்ணனும்?"

"மொதல்ல.... மாடி ரூமுக்கு போகணும்."

கமிஷனர் மாடிப்படிகளை நோக்கி நடந்து மூன்று பேரும் அவரைச் சூழ்ந்து கொண்டு பிஸ்டல்களோடு நடந்தார்கள்.

அரையிருட்டான மாடிப்படிகளில் நிதானமாக ஏறினார்கள்.

டொக்...

டொக்...

டொக்...

மாடிப்படிகளில் உயர்ந்து-

வராந்தாவில் இருபதடி தூரம் நடந்து திறந்திருந்த அந்த அறைக் கதவுக்குள் நுழைந்தார்கள்.

(குறி தொடரும்)

# ஆறு மனமே ஆறு!

## மன அதிர்ச்சி- 01

மதுரை மாவட்டம் கூடல் நகர் அகதிகள் முகாமில் வசித்துவரும் சிவபாதம் என்பவர். திடீரென முகாமிலுள்ள பலரைப் பயங்கரமாகத் தாக்கிக் காயப் படுத்தியுள்ளார். சிவராமன், சந்திர போஸ், நந்தன் போன்றவர்கள் சிவபாதத்தின் தாக்குதலால் கடும் காயமுற்று அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று பி.ப. 4:00 மணிக்கு குமார் என்பவரை மிகக் கடுமையாகத் தாக்கிய சிவபாதம் ஒரு புளியமரத்தில் ஏறிக்கொண்டார். இரவு 8:00 மணிவரை மரத்திலேயே இருந்து பின் இறங்கி வந்தார். முகாமிலுள்ள ஆண்கள் சிவபாதத்தைக் கண்டு மிகப் பயப்படுகின்றனர் என்ற விபரத்தை நற்பணியாளர் கௌரி என்னிடம் கூறினார். கௌரி மூலம் சிவபாதத்தை எனது அலுவலகத்திற்கு அழைத்திருந்தேன்.



காலை 9:00 மணிக்கு எனது அலுவலகம் வந்த சிவபாதத்தை அன்பாக அழைத்து "ஐயா! இங்கே உட்காருங்கள்" என்று என் முன்னிருந்த கதிரையைக் காட்டினேன். வாய் நிறைய வெற்றிலை போட்டுக் கொண்டு கம்பீரமாக இருந்த சிவபாதத்திடம் "ஐயா! உங்கள் சொந்த ஊர் எது" என்று கேட்டு விபரம் அறியப் பேச்சை ஆரம்பித்தேன்.

யாழ்ப்பாணம், அரியாலை என்று கூறியவர் அமைதியானார். "கௌரி என்னைப்பற்றி அல்லது எமது அலுவலகம் பற்றிய விபரங்களைச் சொன்னாளா?" என்று சிவபாதத்தைக் கேட்டேன். 'ஓம்' என்று தலையசைத்தார். "உங்களிடம் நான் நிறையப் பேச வேண்டியுள்ளது. உங்களைப் பற்றிய கொஞ்சம் விபரங்களை நீங்கள் சொல்ல வேண்டும்" என்றேன்.

சிவபாதம் வாய் நிறைய வெற்றிலை போட்டிருந்ததால் அவரால் சரியாகப் பேச முடியவில்லை. எனக்கும் சரியாக விளங்கவில்லை. அது மட்டுமல்லாமல் அவர் பேசும்போது அவரது எச்சில் எனது முகத்தில் தெறித்தது. "ஐயா! நீங்கள் வாயைக் கொப்பளித்துவிட்டு வாருங்கள். தேனீர் குடிக்கலாம்" என்று தண்ணீர்ப் போத்தலை அவர் முன் வைத்து விட்டுத் தேனீருக்கு ஏற்பாடு செய்தேன்.

"ஐயா! உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? என்ன தொழில் செய்தீர்கள்? எப்போது இந்தியா வந்தீர்கள்" என்று கேள்விகளைக் கேட்டேன். "என் மனைவி பார்வதி. எனக்கு நான்கு பிள்ளைகள். மூத்த மூன்று மகன்மாரும் கனடாவில் இருக்கிறார்கள். கடைசி மகள் மட்டும் என்னுடன் முகாமிலிருக்கிறாள். அவளுக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். 1990ம் ஆண்டு ஆடி மாதம் இந்தியாவுக்கு அகதியாக வந்தோம்" என்றார் சிவபாதம்.

"ஐயா! நீங்கள் நாட்டில் என்ன தொழில் செய்தீர்கள் என்று கூறவில்லையே" என்றேன். "எனக்கு 1960ம் ஆண்டு இலங்கை பொலிஸ் சேவையில் வேலை கிடைத்தது. சிங்களப் பகுதியிலேயே நான் வேலை செய்ததால் குடும்பத்தையும் என்னுடன் வைத்திருந்தேன். 1980ம் ஆண்டிலிருந்து மாத்தளை பொலிஸ் நிலையத்தில் வேலை செய்தேன். எனது குடும்பத்துடன் எனது வயதான அப்பாவும் என்னுடனேயே வாழ்ந்து வந்தார். 1983ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின் போது..." என்று ஆரம்பிக்கும் போது சிவபாதம் ஐயாவின் முகம் வியர்த்தது. பதற்றத்துடன் காணப்பட்டார். நான் அவரின் கையை மெதுவாகப் பிடித்து "ஐயா! கொஞ்சம் அமைதியாக இருங்கள்" என்று கேட்டுக்கொண்டேன். மின் விசிறியைச் சற்று வேகமாகச் சுழல விட்டேன். சிவபாதம் ஐயா மீண்டும் வெற்றிலை போட ஆரம்பித்தார். நான் தடுக்கவில்லை. அவர் வெற்றிலை போடும் முறையையும் அதில் அவருக்குள்ள ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் கவனித்துக்கொண்டிருந்தேன். அந்தக் கொழுந்து வெற்றிலைகளை ஒவ்வொன்றாக எடுத்து நுனியையும் காம்பையும் கிள்ளிவிட்டு வெற்றிலையைப் புரட்டி சுண்ணாம்பை விரல்களால் தடவி நான்காக மடித்து வாய்க்குள் வைத்து மெல்லுவதில் அவருக்கு ஏற்படும் சுகம் தனியாகத்தான் இருக்கும் போல் தெரிந்தது. மூன்று வெற்றிலையை மெல்லத் தொடங்கினார்.

"ஐயா! இனிக் கதைப்போமா?" என்று கேட்டேன். தலையசைத்தார். "தொடர்ந்து சொல்லுங்கள் ஐயா! இனக்கலவரம் நடக்கும்போது மாத்தளையில் இருந்தீர்கள்" என்றேன். "ஓம் தம்பி! நாங்கள் இருந்த பொலிஸ் குவாட்டசை சுற்றிப் பல சிங்களவர் நின்று கல்லால் எறிந்தார்கள். பின்பு அவர்கள் என்னையும் என் அப்பாவையும் வெளியில் இழுத்து வந்து இரண்டு மரங்களில் கட்டி வைத்தார்கள். ஒருவன் வந்து என மீதும் அப்பா மீதும்

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

மண்ணெண்ணையை ஊற்றினான். நான் பெரிய சத்தமாகக் கத்தினேன். சிங்களத்தால் அவர்களைக் கெஞ்சினேன். நான் பொலிஸ் என்பதையும் கூறினேன். என் பொலிஸ் நண்பர்களின் பெயர்களைக் கூப்பிட்டு அழுதேன். இன்னுமொருவன் என் அப்பாவுக்குத் 'தீ' மூட்டிவிட்டான். அப்பா அலறினார். நெருப்பு அப்பாவைப் பற்றிக் கொண்டது. என் முன்னாலேயே என் அப்பா எரிந்தார். நான் அறிவு மயங்கி விட்டேன்." என்று கூறிய சிவபாதம் ஐயா பற்களை நறநறவெனக் கடித்தார். அழுதார். முகம் விகாரமாக இருந்தது. ஆத்திரத்துடன் மேசையில் கைகளால் அறைந்தார். மிக மோசமான நிலைக்கு வந்த சிவபாதம் ஐயாவைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறினேன்.

தொடர்ந்து வரும்...

# தன்னலமிக்க தமிழக அரசியல்

பாரதீய ஜனதா கட்சியுடனான தி.மு.க.வின் 'பொருந்தா உறவு' என்பது நாளுக்கு நாள் நிரூபணமாகிறது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பகுத்தறிவுப் பாசறையிலிருந்து உருவானவர் கருணாநிதி. அப்படிப்பட்டவர் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவோ அல்லது மத்திய அரசுடன் பதவி ஆசை காரணமாகவோ பா.ஜ.க.வுடன் உறவு வைத்தார். இந்த உறவு இணக்கமான உறவாக அமையாமல் அவ்வப்போது முட்டல், மோதல், உரசல் என்பதாகச் சென்று கொண்டிருந்தது.

சமீபத்தில் கரூரிலுள்ள ஒரு கோயிலில் அங்குள்ள பக்தர்கள் தமிழில் கோயில் குடமுழுக்குச் செய்யத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அதற்குக் கடும் எதிர்ப்பு எழுந்தது. தமிழில் குடமுழுக்குச் செய்வது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று வைதீகர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்பையும் மீறிக் கோயில் குடமுழுக்கைத் தமிழில் மந்திரம் ஓதி இனிதே நடத்தி முடித்தனர் அந்தத் தமிழ் அன்பர்கள்.


இந் நிகழ்ச்சியைப் பற்றி ஒரு திருமண விழாவில் உணர்ச்சிப் பெருக்குடன் பேசினார் கருணாநிதி. "தமிழுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லையா? தமிழ் தெரியாத கடவுளுக்குத் தமிழ் நாட்டில் வேலை இல்லை. தமிழ் தெரிந்தால் நீ கடவுளாக இங்கே இரு. தமிழ் தெரியாவிட்டால் முட்டை கட்டிக்கொண்டு வெளியேபோ என்று சொல்கிற உறுதி நமக்கு வேண்டும்" என்று பேசியதோடு "உண்மையான பக்தர்கள் பிள்ளையார் சதுர்த்தியை அமைதியாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் மற்றும் சிலரோ பிள்ளையார் ஊர்வலம் என்ற பெயரில் கடவுளை இழிவுபடுத்துகிறார்கள். முட நம்பிக்கைகளால் தமிழ் சமுதாயம் சீரழிந்து கொண்டிருக்கிறது." என்றெல்லாம் பேசியதில் ஒரு பெரும் சூறாவளியே உருவாகிவிட்டது. பா.ஜ.க.வின் பொதுச் செயலாளர் எச்.ராஜா "கருணாநிதி முதலில் வீட்டிலிருந்து தனது சீர்திருத்தங்களை ஆரம்பிக்கட்டும். அவரது மனைவி, மருமகள், போன்றோரெல்லாம் ஆன்மீகவாதிகளாய் கடவுளை வழிபடுகிறார்கள். அவரது கட்சியினரும் ஆன்மீகவாதிகளாய்த்தான் இருக்கிறார்கள். கடவுள் துவேஷம் பேசும் தி.மு.க. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறினாலும் எங்களுக்கு வருத்தமில்லை" என்றார்.

"இது கருணாநிதியின் அகங்காரத்தையும், ஆணவத்தையும் வெளிப்படுத்துகிறது. எனவே இனி வரும் தேர்தல்களிலெல்லாம் தி.மு.க.வைத் தோற்கடிப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வேலை இல்லை" என்றார் இராமகோபாலன்.

"தமிழ் தெரியாத கடவுளுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை' என்று கூறும் கருணாநிதி, அரபு மட்டுமே தெரிந்த அல்லாவுக்குத் தமிழகத்தில் இடமில்லை என்று கூறுவாரா? அதற்கான தைரியம் அவருக்கு உண்டா?" என்று விஸ்வஹிந்து பரிஷத் கேட்டது.

"தெய்வத் தமிழ் பற்றிப் பேசக் கருணாநிதிக்கு அருகதை இல்லை. கடவுளை ஏற்றுக் கொள்ளாத கருணாநிதிக்குக் குடமுழுக்கு சமஸ்கிருதத்தில் நடந்தால் என்ன? தமிழில் நடந்தால் என்ன? கருணாநிதியின் இரத்தத்தோடு ஊறிப் போனது கடவுள் துவேஷம். அவரைத் திருத்த முடியாது" என்றார் சங்கராச்சாரியார்.

இது போதாது என்று சமீபத்தில் நடந்த பிள்ளையார் ஊர்வலத்தில் இந்து முன்னணித் தொண்டர்கள், "நாத்திகம் பேசும் கருணாநிதியே நாட்டைவிட்டு வெளியேறு" என்று ஆவேசமாக முழக்கமிட்டனர். இப்படிப் பல திக்குகளிலுமிருந்து எதிர்ப்புகள் கிளம்பியவுடன் கருணாநிதி அமைதியாகிவிட்டார். ஆனால் அவருக்காகப் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், தலைநகர் தமிழ் சங்கம், திராவிட ஆன்மீக இயக்கம் போன்ற அமைப்புகள் பரிந்து பேசின. "தமிழில் அர்ச்சனை, தமிழில் குடமுழுக்குப் போன்றவை தமிழர்கள்; மற்றும் தமிழ் அமைப்புகளின் தலையாய கொள்கை. கருணாநிதி ஆட்சிக் காலத்திலிருந்தே இது சில கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது தானே..." என்று இந்த அமைப்புகள் வாதாடின.



இதற்கு முன்பு கூட கருணாநிதி திருநீறு குறித்தும், குங்குமம் குறித்தும் பேசிய போது எழாத எதிர்ப்பு இப்போது எழுந்துள்ளது. அதுவும் தி.மு.க. அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டாட்சியின் தலைமைக் கட்சியான பா.ஜ.க. மற்றும் தோழமை அமைப்புகளே கருணாநிதியைக் கடுமையாக விமர்சித்துள்ளன என்று பார்க்கும் போது விரைவில் பா.ஜ.க.வுடனான தி.மு.க.வின் உறவு அறுந்துவிடக்கூடும் என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

அதே சமயம் கருணாநிதி தானாக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேற விரும்பவில்லை. தமிழகத்திற்குத் தண்ணீர் தர மறுத்துச் சண்டித்தனம் செய்யும் கர்நாடக மாநிலத்திற்கு ஆதரவாகப் பிரதமர் செயற்பட்டபோதிலும் கூட கருணாநிதியோ அவரது கட்சியிலுள்ள மத்திய மந்திரிகளோ பிரதமரை எதிர்க்கவும் இல்லை. அவரிடம் நியாயம் கேட்கவும் இல்லை. அதேபோல் காங்கிரஸ் ஆட்சி செய்யும் கர்நாடக அரசையும் தி.மு.க. விமர்சிக்கவில்லை.

ஆனால் இதற்கு நேர் எதிர்மாறாக ஜெயலலிதா கொஞ்சமும் சமரசம் இல்லாமல் காவிரிப் பிரச்சினையில் பிரதமரையும், மத்திய அரசையும் கடுமையாக எதிர்த்தார். அதேபோல் கர்நாடகத்தில் விவசாயிகளைத் தூண்டிவிட்டுக் கிளர்ச்சியை நடத்திக்கொண்டிருக்கும் கர்நாடக இ.காங்கிரஸ் அரசையும் கடுமையாக விமர்சித்தார். கர்நாடகத்தில் சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி, காவேரியில் தண்ணீர் விட மறுக்கும் கர்நாடக அரசு பதவி விலக வேண்டும் அல்லது அந்த அரசைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றார் ஜெயலலிதா.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அவரே கூறியது போல பா.ஜ.க., காங்கிரஸ் இரண்டையும் எதிர்க்க வேண்டிய அவசியம் நேரும் பட்சத்தில் எதிர்க்க ஒரு சிறிதும் தயங்குவதில்லை. ஆனால்

**ஆர்.கண்ணன்**

கருணாநிதியோ பா.ஜ.க., காங்கிரஸ் இரண்டையும் எந்த நேரத்திலும் கட்டியணைக்கத் தயாரான நிலையிலேயே பாவித்து வருகிறார். இந்திய அரசியலில் செல்வாக்குடன் திகழும் இந்த இரு தேசியக் கட்சிகளில் ஏதாவது ஒன்றின் தயவு எப்போதும் தமக்குத் தேவை என்ற கணிப்பில் அவரது அரசியல் பயணம் நடக்கிறது.

காவேரிப் பிரச்சினையில் கர்நாடகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒரே நோக்கத்துடன் ஒருமித்துச் செயலாற்றும் போது தமிழகத்தில் மட்டும் அது போன்ற நிலைமை என்றைக்குமே நிலவியதில்லை.

இப்போது, கர்நாடகம் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்து விடப் போவதில்லை என்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தித் திட்டவட்டமாக அறிவித்து விட்ட நிலையில் தமிழக முதல்வரும் அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார். இதில் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு மத்திய பொலிஸ் பாதுகாப்பு, கர்நாடக அரசு டிஸ்மிஸ் போன்ற கோரிக்கைகளைப் பிரதமரிடம் வைக்கலாமா? என்பது பற்றி முடிவெடுக்கப்பட்டு, தனது தலைமையில் அனைத்துக் கட்சிக் குழு பிரதமரைச் சந்திக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜெயலலிதா தெரிவித்தார்.

"இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தி.மு.க. பங்கேற்காது என்று கருணாநிதி அறிவித்து விட்டார். இவ்வளவும் நடந்து கொண்டிருந்த போதெல்லாம் அமைதி காத்த கருணாநிதி இப்போது தனது அறிக்கையில், காவேரியில் தண்ணீர் விட உரிய நடவடிக்கை எடுக்கும்படி பிரதமரைக் கேட்டுக்கொள்வதாகவும், தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்தித்துக் கேட்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் காவேரிப் பிரச்சினையில் தமிழக முதல்வர் அளவுக்குப் பிரதமரை நிர்ப்பந்திக்கக் கருணாநிதி தயாரில்லை என்பதோடு, ஜெயலலிதாவோடு ஒத்துழைத்து அதனால் தமிழகத்திற்கு ஒரு பலன் கிடைக்குமென்றால் அப்படி ஒத்துழைக்காமலிருப்பதே தி.மு.க.வின் அரசியல் எதிர்காலத்துக்கு உகந்தது என்றும் கருதுகிறார் எனத் தெரியவருகிறது. மேலும் ஜெயலலிதா கோருவது போல் 'கர்நாடக அரசு டிஸ்மிஸ் என்ற கோரிக்கையும், வருங்காலத்தில் தி.மு.க. காங்கிரஸிற்கிடையே மலரவிருக்கும் உறவுக்குத் தடையாகிவிடுமோ' என்றும் கருணாநிதி அச்சப்படுகிறார்.

இப்படியாகத் தமிழக அரசியல் முற்று முழுக்க மக்கள் நலன்களைப் புறக்கணிக்கும் தன்னல அரசியலாக மாறிக்கொண்டுள்ளது. ▪

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 18



'மங்கம்மா சபதம்' ரஞ்சன்-வசந்தராதேவி

### ஆர். வசந்தராதேவி

இவர் நடிகை வைஜந்திமாலாவின் தாயார். இவரது பாட்டி யதுகிரியினால் தனியாக வாழ்ந்தவர். 1943 இல் 'மங்கம்மா சபதம்' என்று ஒரு படம் வெளிவந்தது. இது பரபரப்பான கதை அம்சம் கொண்டது. அகம்பாவம் கொண்ட இளைஞனிடம் (ரஞ்சன்) அவனுக்குத் தெரியாமல் அவன் மூலமாகவே ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பேன் என்று சபதம் செய்து பழி தீர்க்கும் அழகி மங்கம்மாவாக நடித்தவர் வசந்தராதேவி. இவரும் பாடி நடிப்பதில் வல்லவர். இதே படத்தில் அவர் 'ஐயய்யய்யே சொல்ல வெட்கமாகுதே..." என்ற ஒரு பாடலைப் பாடி நடித்ததைப் பார்த்துப் பலர் கிறுகிறுத்துப் போயினராம். 'மாதலங்' என்று இதே கதை சிங்களத்தில் படமாக்கப்பட்டது. வசுந்தராதேவி 1946 இல் வெளிவந்த 'உதயணன்-வாசவதத்தா' என்ற படத்தில் எம். கே.தியாகராஜபாகவதருடன் நடித்துள்ளார். இப்படத்திற்கு இசை அமைத்தவர் காலஞ்சென்ற சிதம்பரம் ஜெயராமனாவார்.

### ஆர்.ரஞ்சன்

இவர் முதலில் நடித்த படம் 1941 - இல் வெளியான 'ரிஸ்ய சிருங்கர்'. இதில் அருமையாக நடனமும் ஆடியுள்ளார். 'சாலிவாஹனன்'- 1945 இல் வெளியான சண்டைக் காட்சிகள் நிறைந்த ஒரு படம். இதன் கதாநாயகன் ரஞ்சன்; கதாநாயகி ரி. ஆர். ராஜகுமாரி. 'மங்கம்மா சபதம்' படத்தில் இவர் நடித்ததைப் பற்றி ஏற்கனவே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் படம் 'மங்களா' என்ற பெயரில் ஹிந்தியிலும் வெளியிடப்பட்டது. இதே போல, 'அபூர்வ சகோதரர்கள்' படத்தின் ஹிந்திப் பதிப்பு ஜெமினியின் 'நிஷான்'-; இதில் இரட்டை வேடத்தில் நடித்தார். பட்டதாரியான இவர் ஒரு விமானமோட்டியுமாவார். இவரது மற்றொரு முக்கியமான படம் 'சந்திரலேகா' - இவரது வில்லன் நடிப்பு என்றென்றும் நினைவு கூரத் தக்கது. இவற்றை விட 'நீலமலைத் திருடன்' என்ற படத்திலும் கதாநாயகனாக நடித்துள்ளார்.

அகில இந்திய நடிகர் என்ற அந்தஸ்தைப் பெற்ற ஒரு சில நடிகர்களுள் ரஞ்சன் குறிப்பிடத் தக்கவர். (இவரைத் "தினமுரசு மறந்து விட்டது ஏனோ?" என்று பருத்தித்துறை கற் கோவளம் வாசகர் ஈ.எஸ்.ராஜா கேட்டிருந்தார். இப்பொழுது அவருக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறோம்.) ●

### எம்.என். நம்பியார்

1942 -ஆம் ஆண்டளவில் மேடையேறிய ஒரு நாடகம் 'கவியின் கனவு' விடுதலைப் போராட்டத்தில் பத்து மாதம் சிறைத் தண்டனை பெற்ற தேசியவாதியான எஸ்.டி.சுந்தரம், இதன் கதை வசனத்தை எழுதினார். 150 மேடைகளேறி மிகப் பிரசித்தி பெற்ற இந் நாடகத்தில் ஒரு முக்கிய பாத்திரம் 'ராஜகுரு'. இதில் எம். என். நம்பியார் நடித்து வந்தார். இக்கதையைத் திரைப்படமாக்கக் கேட்டுப் பல தயாரிப்பாளர்கள் பேரம் பேசிக் கொண்டிருந்த பொழுது எம்.என். நம்பியார் தனது 'ராஜகுரு' பாத்திரம் பற்றிய சிறப்புக்களை மொடேர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரத்திடம் கூற. அவர் (கலைஞர்) முகருணாநிதியிடம் எடுத்துக் கூற, அதே போன்ற பாத்திரத்தை அமைத்து 'மந்திரிகுமாரி' கதையைக் கருணாநிதி எழுதி, அப் படம் 1950- இல் வெளிவந்தது. இதில் நடித்த எம்.ஜி.ஆர்., எஸ்.ஏ.நடராஜன் போன்ற நடிகர்களை விட, எம்.என்.நம்பியாருக்கு 'ராஜகுரு' பாத்திரம் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது மட்டுமல்ல, அவர் ஒரு ராஜகுருவாகவே ஆகிவிட்டார்!



மலையாள மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட கேரள நாட்டவரான நம்பியார், எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன் போல் நாடகங்களில் பெண் வேடமேற்று நடித்தார். நம்பியாரின் திரையுலகப் பிரவேசம் ஆரம்ப நாட்களில் அதிகம் ஜொலிக்கவில்லை. இளைஞராக இருக்கும் போதே வயதான தந்தை வேடங்களில் தோன்றினார். நகைச்சுவைப் பாத்திரங்களில் நடித்தார். தொடர்ந்து இவருக்கு 'வணங்காமுடி' போன்ற படங்களில் வில்லன் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. திறம் படவும் சிறப்பாகவும் நடித்தார்.

அன்று மொடேர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த 'திகம்பரசாமியார்' படத்தில் போலிச்சாமியார் (கதாநாயகன்) வேடத்தில் கனகச்சிதமாகத் தோன்றினார். அறிஞர் அண்ணாவின் 'சொர்க்க வாசல்' படத்தில் போலிச் சாமியார் வேடம். கல்யாணி என்ற படத்தில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார்.

நம்பியார் ஜுப்பிட்டரின் 'கஞ்சன்' படத்தில் ஒரு வீர இளைஞனாகத் தோன்றி, "இந்த உலகினில் இருக்கும் மாந்தரில் எழிலுடையோன் எங்கள் தமிழன்" என்ற எம்.எம். மாரியப்பாவின் கணீரென்ற பாடலுக்கு நடித்துள்ளார்.

திரை உலகில் சகல நிலையிலும் 'ஓர் உத்தமன்' என்ற பேருக்குரிய நம்பியார் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் பக்தர். சபரிமலைக்கு அவர் 50 தடவைகளுக்கு மேல் சென்று திரும்பியவர்.

அவர் இன்னமும் திரையுலகில் சிறு பாத்திரங்களிலும், ரி.வி. நாடகங்களிலும் பங்கேற்று வருகிறார். ●

# ஸ்போர்ட்ஸ்

## ஹீத் ஸ்ரீக் விபத்தில் காயம்

**ஸி**ம்பாப்வே கிரிக்கெட் அணித் தலைவர் ஹீத் ஸ்ரீக் திங்களன்று கொழும்பில் நடைபெற்ற வாகன விபத்தொன்றில் காயமடைந்தார். பௌத்தலோக மாவத்தையில் இச் சம்பவம் இடம் பெற்றது. ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டிக்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள வீரர்கள் 'தாஜ் சமுத்ரா' ஹோட்டலில் தங்கியுள்ளனர். இந்த ஹோட்டலில் இருந்து ஸ்ரீக் கொழும்பு 7 இல் உள்ள பிரபல ஆடையகம் ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்த போது இவர் பயணம் செய்த முச்சக்கர வண்டி, வான் ஒன்றுடன் மோதியது.

இதனால் ஸ்ரீக்கின் தோள் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து நாரஹென்பிட்டியிலுள்ள அப்பலோ மருத்துவ மனையில் ஸ்ரீக் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் இது தொடர்பாக தெரிவிக்கையில் "சகல அணிகளின் வீரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஹீத் ஸ்ரீக் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் ஹோட்டலை விட்டு வெளியேறியுள்ளார். இதனால் இவ் விபத்துக்குப் பொலிஸார் பொறுப்பேற்க இயலாது" என்றார். தற்போதைய நிலையில் வீரர்கள் அனைவரும் விரும்பியவாறு ஹோட்டலை விட்டு வெளியேறுவதற்கும் திரும்பி வருவதற்கும் அனுதிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

ஸிம்பாப்வே அணித் தரப்பினர் உடனடியாக இவ் விபத்துத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை. எனினும், "ஸ்ரீக்கிற்கு ஒரு முறிவு மாத்திரமே ஏற்பட்டுள்ளது. பாரிய காயம் ஏற படவில்லை" என ஐ.சி.சி. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. தொடரில் ஸிம்பாப்வே அணி அரையிறுதித் தகுதி பெறவில்லை. இதன் பின்னர் எதிர்வரும் நவம்பர் மாதம் பாகிஸ்தான் அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளிலும் 5 ஒரு நாள் போட்டிகளிலும் ஸிம்பாப்வே அணி மோதவுள்ளது. ■

## ஐ.சி.சி. கிண்ணம் யாருக்கு?

**எ**திர்பார்த்தது போலவே உலகின் முன்னணி கிரிக்கெட் அணிகள் நான்கும் ஐ.சி.சி போட்டிகளின் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

புதன்கிழமை நடைபெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்திய தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன. இரண்டு அணிகளும் ஒன்றை விட ஒன்று சளைத்தவை அல்ல. இந்திய அணியின் அண்மைக்கால திறமைகள் நம்பிக்கை தருகின்றன.

27ஆம் திகதி நடக்கும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை-அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ளன. இந்த போட்டித் தொடரின் மிகவும் விறுவிறுப்பான ஆட்டமாக இந்தப் போட்டி இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்திய வெற்றிகள், சொந்த நாட்டில் நடக்கும் போட்டி என்ற அடிப்படையில் இலங்கைக்குப் பல ப்ளஸ் பொயிண்டுகள் உண்டு. என்றாலும் அவுஸ்திரேலியா சுலபமாகத் தோற்கடிக்கக் கூடிய அணியா என்ன? அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள 4 அணிகளை நோக்குமிடத்து இறுதி வெற்றி யாருக்கென்று உறுதியாகக் கூற முடியாவிட்டாலும் அடுத்து நடை பெறும் 3 போட்டிகளும் கிரிக்கெட் இரசிகர்களுக்கு உச்சக் கட்ட விருந்து படைக்கும் என்பதை மட்டும் எதிர்பார்க்கலாம். ■

## சிந்தியா பதில்கள்

**★ அதிகம் படிப்பவன் புத்திசாலியா? அதிகம் சிந்திப்பவன் புத்திசாலியா? அதிகம் உழைப்பவன் புத்திசாலியா?**

ஷகிலா வேலுப்பிள்ளை, நானுஓயா.

*இவர்களை விலைக்கு வாங்கி வைத்துக் கொள்பவன்!*

✿✿

**★ சிந்தியா....காதலிக்கும் ஆண்கள், பின்பு காதலியைக் கைவிடுவது ஏன்?**

ஆறுமுகம் பத்மா, சாமிமலை.

*வேறொருத்தியைக் கைப்பிடிக்க அந்தக் கை தேவைப்படுவதால்!*

✿✿

**★ தமிழர் விடுதலைக் கூட்டணி என்று ஒரு கட்சியும், அதற்கென்று கொள்கையும் உண்டா? அதன் சாதனை என்ன?**

க. கமால்தீன், ஏறாவூர்-03.

*கொள்கை: தமிழ்ப் பாராளுமன்றக் கதிரைகளில் வேறு யாரும் போய் அமர்ந்து அழுக்காக்கி விடாமல் பார்த்துக் கொள்வது.*

*சாதனை: ஈழத் தமிழ் மக்கள் மாற்றுச் சிந்தனையே கிடையாதவர்களென்று உலகிற்கு எடுத்துக் காட்டியிருப்பது.*

✿✿

**★ தாடி உள்ளவர்கள் எல்லோரும் காதலில் தோல்வி அடைந்தவர்களா?**

மனோ கோபாலன்,ஹப்புத்தளை.

*ஆடுகளிடம் நான் பேசிப் பார்த்ததில்லை.*

✿✿

**★ சச்சினின் நூறாவது டெஸ்ட் பற்றி?**

எஸ்.சுதாஷ், பூண்டுலோயா.

*எத்தனை "நூறுகள்" அடித்தார் என்பதைச் சாதனையாகச் சொல்லலாம். ஒருவரின் நூறாவது போட்டியைக் கூட சாதனையாக இந்தளவுக்குக் கொண்டாட வேண்டுமா? அளவுக்கு மிஞ்சித் தனி நபர்களைத் தலையில் வைத்தாடுவதுதான் இந்திய அணியின் பலவீனமோ என்று தோன்றுகிறது.*

✿✿

**★ மன்னிக்கக் கூடியது எது? மன்னிக்க முடியாதது எது?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

*தற்பெருமையை மன்னித்துவிடலாம்; அகம்பாவத்தை மன்னிக்க முடியாது. அதாவது, உங்களுக்கு எல்லாமே தெரியும் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளுங்கள். ஆனால், அடுத்தவனுக்கு எதுவுமே தெரியாது என்று கணித்துவிடாதீர்கள்.*

✿✿

**★ பிரதமரின் வெளிநாட்டு வியூகம் புலிகளைச் சுற்றி வேலி அமைப்பது போல் தெரிகிறதே?**

ஆர்.சஜீவன், அனுராதபுரம்.

*ஆமாம். ஆனால் அதற்குள்ளேயே அவர், இந்த நாடு, மக்கள் எல்லாம்.*

✿✿

**★ சமீபத்தில் என்ன புத்தகம் படித்தீர்கள் சிந்தியா?**

எஸ்.எம்.எம். பாஹிம், மாவனல்லை.

*"ஒவ்வொரு புல்லையும்...." என்ற தலைப்பில் கவிஞர் இன்குலாப்பின் அனைத்துக் கவிதைகளையும் தொகுத்து வெளியிட்டிருக்கும் புத்தகம். மார்க்ஸிய-லெனினியப் போராளியாக அறியப்படும் கவிஞர் ஓரிடத்தில் சொல்கிறார்.*

*"மரணம் தழுவிய மக்கள் எல்லார்க்கும் கல்லறை எழுப்பும் கௌரவம் வரும்வரை சாம்பலும் தூசுமே என் கல்லறையாக இருக்கட்டும்" மக்கள் மீது அன்பு கொண்ட போராளியை இனங்காட்டி மனதில் தங்குகிறார் இங்குலாம்.*

✿✿

**★ இதயத்துக்கும் காதலுக்கும் இடையில் அப்படி என்னதான் தொடர்பு?**

பெ.கோகிலன், ஹட்டன்.

*காதல் உணர்வுகளின் கட்டுப்பாட்டு அறை மூளைதான். ஆனால், காதலியையோ காதலனையோ பார்த்தவுடன் இதயம் வேகமாக அடிப்பதையும், அங்கிருந்து பீறிட்டுப் பாயும் இரத்தம் நெஞ்சை நிரப்பி அடைப்பதையுமே உணர்ந்து கொள்ள முடிவதால் இயதங்கள்தான் காதலிக்கின்றன என்ற முடிவுக்கு நம் முன்னோர் வந்திருக்க வேண்டும்.*

✿✿

**★ 12 பி, ஸ்டார், டும் டும் டும் போன்ற படங்களில் ஜோதிகாவுக்குப் பதிலாக உங்களை நடிக்கச் சொல்லியிருந்தால்...?**

எம்.பி.எம்.அஸ்ரப், நிககொள்ளை.

*அஸ்ரப்! இதோ கேள்வியைப் பிரசுரித்துவிட்டோம். ஷாம், பிரசாந், மாதவன் எல்லோரையும் பழிவாங்கிவிட்டதில் திருப்திதானே உங்களுக்கு!*

✿✿

**★ பக்திப் படங்களில் அம்மனாக வந்து தெய்வ கடாட்சம் தரும் அதே நடிகைகள், ஏனைய படங்களில் எல்லாம் மிகவும் கவர்ச்சியாகவும் நடிக்கிறார்களே...?**

பெ.கோகிலன், ஹட்டன்.

*அவர்களுக்குத் தொழில் நடிப்பு.*

✿✿

**★ வயதான பார்வதியை பார்வதிக் கிழவி என்றும், வயது முதிர்ந்த லட்சுமியை லட்சுமிக் கிழவி என்றும் தானே அழைக்கிறோம். ஏன் உங்களை சிந்தியாக் கிழவி என்று அழைக்கக் கூடாது?**

எஸ்.கோபி, கலஹா.

*முப்பது வயதைக் கடந்துவிட்டால் முதுமை ஆரம்பித்து விடுகிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். உங்கள் பார்வதி, லட்சுமி ஆகியோருக்கு வயது முப்பத்திச் சொச்சம்தானா என்றும் அறிய விரும்புகிறேன்.*

✿✿



**★ சமீபத்தில் என்ன படம் பார்த்தீர்கள்?**

பி.சாந்தி டெல்மா, மாபோல.

*அடுத்தடுத்து இரண்டு தமிழ்ப்படங்கள் பார்த்தேன். இரண்டுமே இரண்டெழுத்துப் படங்கள்; இரண்டும் ஆங்கிலச் சொற்கள்! அடிதடி ஹீரோவாக அறியப்பட்டவர் குடும்பப் பாசம் மிக்க மென்மையான காதலராகவும், காதலும் நளினமுமே கைவரும் என்று கருதப்பட்டவர் அதிரடி நாயகனாகவும் மாறி நடித்திருக்கும் படங்கள். பிரபல வில்லன்களாக நாமறிந்த இருவர் இந்தப் படங்களில் பதவிசான குணசித்திரப் பாத்திரங்களாகியிருக்கிறார்கள். இரண்டு படங்களினதும் இயக்குனர்களும் கூட மேலும் பல வெற்றிப் படங்களைத் தருவார்கள் என்று தெரிகிறது. ஒருத்தருக்கு இரண்டாவது படம். மற்றவருக்கு முதல் படம். ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் கேரளத்துப் புது மல்லிகை! வாவ்...! நடிக்கவும் தெரிந்திருப்பதால் இன்னும் பல படங்களில் பார்க்கப் போகிறோம் அந்த வாசனை மலர் சேர்ந்த கண்ணனின் காதல் பக்தையை!* ■

# இலக்கிய நயம்

## யாழிசை மொழியாள் குழலசைய வந்தாள்....

தருவது முழடில்யன்

பாத்திரம் கவிழ்ந்து தரையில் பரவிய பாலைப் போல, நிலவொளி எங்கும் வெண்மை பரப்பியிருந்தது. கடலில் மீன்களும் உறங்கும் இரவின் நடுச்சாமம். எழுந்து செல்ல மனமில்லாதவர்களாக அபயனும் சாந்தினியும் கரை மணலில் அமர்ந்திருந்தனர்.

நெடுநேரமாக அவர்கள் அங்கேயே இருந்தனர். சந்திர ஒளியில் நனைந்தபடியும், பேச்சற்று மௌனத்தை இறுக அணைத்தபடியும், தேர்ந்த ஓவியனின் காதற் சித்திரமென அசைவற்றிருந்தனர்.

கடற்காற்று வாங்கிப் போகவென வந்திருந்த மனிதர்கள் எல்லோரும் திரும்பிச் சென்றுவிட்டிருந்தனர்.

தனிமையையும் அமைதியையும் விரும்பியவர்கள் போல இருவரும் மட்டுமே கடலின் முடிவற்ற நெடும்பரப்பில் கண்களை ஓடவிட்டபடி அமர்ந்திருந்தனர். இருவரும் திருமணம் செய்து ஒரு மாதமே ஆகியிருந்தது. இங்கிதம் தெரிந்தவையாகக் கடலின் அலைகளும் இரைச்சலெதுவுமின்றி மெல்லிய முணுமுணுப்போடு வந்து கரையைத் தொட்டுத் திரும்பிக் கொண்டிருந்தன. "சாந்தி குளிர்கிறதா?"

திடீரென்று மௌனம் உடைந்த அதிர்ச்சியில் அபயனை ஏறிட்டு நோக்கிய சாந்தினி, பதில் எதுவும் கூறாமல் மெல்லிய புன்னகையை உதடுகளில் ஓடவிட்டபடியே கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டு அவன் கேள்வியை ஆமோதித்தாள்.

அருகருகாக இருந்த நிலையிலேயே வலது கையால் அவள் தோளை இறுக்கித் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அவள் கூந்தல் அபயனின் கன்னத்தில் உராய்ந்ததில் சிலிர்ப்புற்றான். மல்லிகையின் வாசனை அவன் மூளைக்குள்ளும் நிறைந்தது. மல்லிகைச் சரம் அவள் கூந்தலிலிருந்து கலைந்து தொங்குவதை அபயன் கண்டான். அவள் தலையைத் தன் ஒரு கரத்தால் திருப்பிய அபயன் அவள் குழலில் மீண்டும் மல்லிகைச் சரத்தைச் சரிவரச் சூட்டினான்.

கடற்காற்றில் தளர்வாக அலைந்த அவள் குழலில் அது நிற்கவில்லை. அவிழ்ந்து தொங்கியது மலர்ச்சரம்.

"மீண்டும் அவிழ்ந்து விட்டதா?" என்று சிரித்தாள் சாந்தினி.

"அது உன் குழலில் தொங்குகிறது. ஆனால்...." என்று முடிக்காமல் விட்டான் அபயன்.

அவள் "உம்" என்ற உங்காரத்திலேயே ஒரு கேள்வியை எழுப்பினாள். அவனது தேகத்தின் தீண்டல் அவளைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்ததால்.

"அது குழலில் தொங்குகிறது. நான் உன் அழகு முழுவதிலுமே ஈடுபட்டுத் தொங்குகிறேன்...." அவள் பேசாதிருந்தாள்.

அபயனின் மறு கையும் அவள் பூவுடலைச் சுற்றியது. முகம் கூந்தலினுள் புதைந்து அந்த மலர்ச்சரத்தின் வாசனையை முகர்ந்தது. அங்கிருந்து முன்புறமாக நெற்றிக்கு வந்து முகத்தை முகர்ந்தது. பிறகு மெல்ல மெல்ல இதழ்கள் இதழ்களை நோக்கி இறங்கலாயின.

சுகமான காற்று இருவர் உடல்களுக்கும் சிறகுகளைப் பூட்டியது.

உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து இருவரும் சுயநிலை இழந்துவிட்ட சமயத்தில், சாந்தினியின் கைகளும் அபயன் முதுகைச் சுற்றித் தவழ்ந்தது மட்டுமல்லாமல் அவனைத் தன்னுடன்



சேர்த்து இறுக்கவும் முற்பட்டது.

அவன் கரங்களினுள் குழைந்து கிடந்த அவளுடல் கெட்டிப்பட்டு விட்டதையும், நாண் இழுக்கப்பட்ட வில் போலத் தன் மீது இதர பாணங்களைத் தொடுக்க முற்பட்டு விட்டதையும் உணர்ந்த அபயன், அவள் இதழ்களிலிருந்து தனது இதழ்களை மீட்க முயன்றான்.

அவள் முதுகில் தவழ்ந்து அவளுடல் முழுவதையுமே தாங்கிக் கொண்டிருந்த அவன் இடதுகை, உணர்ச்சி வேகத்தில் அவளை லேசாகத் தூக்கவும் முற்பட்டது. சாந்தினியின் உன்மத்தம் குறையவில்லை.

தனது இதழ்களிலிருந்து மீளமுயன்ற உதடுகளை அவள் முத்துப்பற்கள் சிறைப்படுத்திக் கொண்டன.அபயனை மணலில் சாய்த்து விடுபவள் போல மூர்க்கமாக இயங்கினாள். அவளது உன்மத்தம் அவனிடத்திலே அதிக உணர்ச்சிகளைச் சுழலவிட்டாலும், அவன் அவற்றிடமிருந்து தப்பிக் கொள்ளவே பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. அவளைச் சற்றே திருப்பி உட்கார்ந்த நிலையில் தன்மீது மெதுவாகச் சாத்திக் கொண்டான். பிறகு தன் மீது அவிழ்ந்து தொங்கிய அவள் அடர்ந்த கூந்தலை மெல்ல விலக்கி, மிருதுவான கழுத்துப் பகுதியில் தன் உதடுகளைப் பதித்தான்.

அவள் அழகும், அவளும், அவனை விடுவதாயில்லை. ஓட்டப் பந்தயத்தின் இறுதிக் கோட்டை நெருங்கி விட்டவள் போல வளையல் அணிந்த இடத்திலே வடு ஏற்படும் படியாக அவனைத் தன்னுடன் சேர்த்து அழுத்தித் துடித்தாள்.

அவள் அணைப்பிலிருந்து விடுபடாத நிலையில் கழுத்திலிருந்து தன் உதடுகளை மட்டும் மெல்ல விடுவித்து "சாந்தினி" என்று மெதுவாக அழைத்தான்.

"ம்" என்றாள் யாழின் நரம்பொன்றைச் சுண்டி விட்டது போல.

"உன் தொண்டைக்குள்ளிருக்கும் யாழ் நரம்புகள் அதிர்வது என் கன்னத்திற்குத் தெரிகிறது."

"என்ன?" என்றாள் முன்பு சுண்டிய நரம்பைச் சற்று அதிக நேரம் அழுத்தி.

"இல்லை....வீணை...." என்று அபயன் தடுமாறினான். முதுகிலிருந்து கையைக் கீழ்நோக்கி இறுக்கியபடி.

அவளிடமிருந்து வீணையின் மேலும் பல நரம்புகளைச் சுண்டிய ஒலிகள் பிறந்தன.

மீண்டும் அவளது பின்புறக் குழலில் முகத்தைத் தேய்த்த போது, மலர்ச் சரத்திலிருந்த மகரந்தங்கள் அபயன் முகத்தில் ஒட்டின.

உலைக்களத்தில் இரும்பைக் காய்ச்சி அடிக்கும் போது தெறிக்கும் நெருப்புப் பொறிகள்களென அவள் அசைந்து வரும்போது கூந்தல் மலர்களிலிருந்து சிதறிய மகரந்தத் துளிகள் அவன் நினைவில் வந்தது.

அவள் வரும்போது இருட்டாகி விட்டிருந்தாலும் கூட, காற்றுவாங்க வந்திருந்தவர்களின் கண்களில் பட்டுவிடக் கூடாதென பையப்பைய ஒதுங்கியபடியே நடந்து வந்தாள். மங்கல் ஒளியில், தேர்ந்த சிற்பி ஒருவனின் சிறப்பான வேலைப்பாட்டில் உருவான பொற்சிற்பம் ஒன்று நடையைக் கற்றுக் கொண்டு வந்தது போல வந்தாள்.

மாசுமறுவற்ற வெள்ளியில் செய்யப்பட்ட கை வளையல்கள் மட்டும் அவள் தூரத்தில் வரும்போதே நிலவொளி தெறித்து மின்னின. அலையலையான வெள்ளித் திரட்சி! நீரைத் திரட்டி வளைத்துச் செய்தது போலவே பளபளத்தன வளையல்கள். வளையல் மட்டுமல்ல அவள் மேனியில் இனி மறைப்பதற்கு இடமில்லை என்னுமளவுக்குப் பரந்திருந்த கூந்தலும் இருட்டொளியில் கருமணல்களாக ஜொலித்தன. பிடரியிலிருந்து கீழ் நோக்கி முழங்காலுக்குக் கீழ்வரை நீண்டிருந்த குழல் அசைய அவள் வருகையைப் பார்த்த போது, அந்த அழகின் பொலிவில் உண்டான கிளர்ச்சியை இப்போதும் மறுபடி நினைத்தான் அபயன்.

நீர்த்திரள் கடுக்கும்
மாசில் வெள்ளிச் சூர்ப்புறு
கோல்வளை செறித்த முன்கை
குறை அறல் அன்ன
இரும்பல் கூந்தல்
இடனில் சிறுபறத்து
இழையோடு துயல்வரக்
கடல்மீன் துஞ்சும் நள்ளென்
யாமத்து உருவுகிளர்
ஏர்வினைப் பொலிந்த
பாவை இயல்கற் றன்ன
ஒதுக்கினள் வந்து
பெயல் அலைக் கலங்கிய
மலைப் பூங் கோதை
இயல் எறி பொன்னின்
கொங்குசோர்பு உறைப்பத்
தொடிக்கண் வடுக்கொள
முயங்கினாள்- வடிப்புறு நரம்பின்
தீவிய மொழிந்தே.

(அகம்: 131:1–11)



வாரமலர் தினமுரசு

செப். 29–ஒக். 05, 2002

# மன்னாதி மன்னன் 123

## குதிரை வீரன் கதை

இருபத்தோராவது படிக்குக் காவலாக நின்றிருந்த கனகரஞ்சிதவல்லிப் பதுமை போஜ மன்னரை இடைமறித்து, விக்கிரமாதித்த மாமன்னர் பிறர் பழிச் சொல்லுக்கு ஆளாகாமலிருக்கும் பொருட்டுத் தனது இன்னுயிரையே ஈய முன்வந்த கதையினைக் கூறவாரம்பித்தது.

உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்திலிருந்து சில நாட்கள் ஒய்வெடுக்கும் பொருட்டு மன்னர் விக்கிரமாதித்தன் அமைச்சர் பட்டி முதலான பரிவாரங்களுடன் ஒரு சோலையில் தங்கியிருந்தார். அப்போது மன்னரைப் பார்ப்பதற்காக ஒருவர் வந்தார். மன்னரைக் பார்த்த அவரை யாரென மன்னர் வினாவினார்.

“பேரரசே! நான் இந்திரஜாலம், மந்திரஜாலம் முதலான கலைகளைக் கற்றவன். தாங்களும் அறுபத்து நாலு கலைகளையும் கற்ற மேதை என்பதை நான் அறிவேன். அனிமா, கரிமா போன்ற வித்தைகளையும் தாங்கள் கற்றறிந்திருப்பீர்கள். நான் கற்ற வித்தைகளில் சிலவற்றைத் தங்களிடம் காட்டலாம் என்றெண்ணித் தங்கள் சமூகத்துக்கு வந்துள்ளேன்” என்று கூறிப் பணிவுடன் வணங்கினான்.

மன்னர் அவரிடம் வித்தைகளைக் காட்டலாம் என்று குறிப்பால் உணர்த்தினார். ஆனால், அந்த இந்திரஜாலக்காரன் தான் பிறிதொரு சந்தர்ப்பத்தில் வருவதாகக் கூறிச் சென்றான். அவன் சென்ற பின்னர் ஒரு வீர இளைஞன் அழகான குதிரையின் மீது அழகான பெண்ணொருத்தியையும் ஏற்றிக்கொண்டு வேகமாக வந்து சேர்ந்தான். அந்த வீரனும், பெண்ணும் மன்னரை நெருங்கி வந்து வணங்கினார்கள். அவர்கள் யாரென மன்னர் விசாரித்தார்.

தான் வடபாலுள்ள ஒரு நாட்டின் அரசனின் குதிரைப் படைத் தலைவன் என்றும் அவ்வரசனுடன் ஏற்பட்ட மனக்கசப்பினால் பதவியை விட்டு வெளியேறித் தனது மனைவியுடன் வந்திருப்பதாகவும், தனக்குப் பொருத்தமான வேலை தந்தால் மன்னர் விக்கிரமாதித்தனிடம் பணிபுரியச் சித்தமாயிருப்பதாகவும் கூறி வணங்கி நின்றான்.

அந்த வீரனின் கதையைக் கேட்ட மன்னர் அவரருகே நின்றிருந்த அமைச்சர் பட்டியின் முகத்தைப் பார்த்தார். புன்முறுவல் பூத்தவராக நின்றிருந்த அமைச்சர் பட்டி எதுவுமே கூறாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

இதேவேளை, தென்திசையிலிருந்து பேரொலி ஒன்று கேட்டது. அதனைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான குதிரை வீரர்கள் பலதரப்பட்ட கோஷமெழுப்பிய வண்ணம் அவ்விடம் வந்து சேர்ந்தனர். அவர்கள் வந்த வேகத்தில் எழுந்த புழுதி மண்டலம் மறைய அதிக நாழிகைகளானது. அந்தக் குதிரை வீரர்கள் வரும்போது மன்னர் விக்கிரமாதித்தனோ அமைச்சர் பட்டியோ அவர்களுக்குரிய இராஜ உடையணிகளுடன் இருக்கவில்லை. ஏனைய அமைச்சர்களும் கூடச் சாதாரண குடியானவர்களைப் போல் வேடமணிந்து நின்றனர்.

குதிரைகளில் வந்த வீரர்கள், “விக்கிரமாதித்தன் எங்கே ஒழிந்துகொண்டிருக்கிறான்? அவன் எங்கள் பரம எதிரி. அவனைத் தேடியே நாமிங்கு வந்திருக்கிறோம். இன்று எப்படியும் எங்கள் எதிரியைத் தேடிக் கண்டுபிடித்துவிடுவோம்” என்று கூறிக் கொக்கரித்தனர். இதனைக் கேட்ட மன்னர் கொதிப்படைந்தார். அவர் மேற்கொண்டு எதிர்கொள்ளப் போகாமல் அமைச்சர் பட்டி தடுத்தார். அப்போது மன்னர் பட்டியிடம், “தம்பி பட்டி! எமக்கு மூவுலகிலும் எதிரிகளே கிடையாது. அப்படியிருக்கையில் இவர்கள் யார் எம் முன்னே வந்து கொக்கரிப்பதற்கு? என்னைத் தடுக்

இராஜகுமாரன்

காதே! அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுகிறேன் பார்...” என்று உடைவாளில் கையை வைத்தார்.

இந்த வேளையில் ஏற்கனவே, தனக்கு ஏற்றதொரு வேலை தரும் வண்ணம் தனது மனைவியுடன் அங்கு வந்திருந்த குதிரை வீரன் மன்னரிடம் வந்து, “மாமன்னரே! எனக்கு இப்போதே கட்டளையிடுங்கள். இந்த வீரர்களை இப்பொழுதே சங்காரம் செய்துவிட்டு வருகிறேன்” என்று மண்டியிட்டுக் கோரினான். மன்னர், அமைச்சர் பட்டியை நோக்க, அவரும், “வீரனைப் போருக்கு அனுப்புங்கள்” என்ற அர்த்தம் தொனிக்கத் தலையை அசைத்து முகபாவத்தால் உணர்த்தினார்.

வெற்றியுடன் திரும்பி வரும்படி வாழ்த்தி அவ்வீரனை மன்னர் அனுப்பி வைத்தார். அவ்வீரன் குதிரை வீரர்கள் சென்ற திக்கை நோக்கி உருவிய வாளுடன் குதிரையிலேறி வேகமாகச் சென்றான். சிறிது நேரத்தில் விண் முட்டப் பேரொலி எழுந்தது.

முன் சென்ற வீரர்கள் பின்வாங்கி ஒடி வந்தனர். படுகாயங்களுடன் ஒடோடி வந்த அவ் வீரர்கள் மன்னர் விக்கிரமாதித்தனும், மந்திரி பிரதானிகளும் நின்றிருந்த இடத்திற்கு அருகில் ஒடி வந்து வீழ்ந்து உயிர் துறந்தனர். அவர்களைச் சுமந்து வந்த குதிரைகளும் குருதி சொட்டச் சொட்ட அவ்விடத்திலேயே வீழ்ந்து மாண்டன.

குதிரை வீரன் போருக்குப் புறப்படு முன்னர் மன்னர் விக்கிரமாதித்தன் தாள் பணிந்து, “மன்னர் மன்னவரே! தாங்கள் என் தந்தையைப் போன்றவர். எனது மனைவியைத் தங்களின் பாதுகாப்பில் விட்டுச் செல்கிறேன். நான் திரும்பி வரும்வரை அவளைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்” என்று கூறிவிட்டுச் சென்றான். அப் பெண், குதிரை வீரர்கள் மாண்டு விழுவதைக் கண்டு மன்னர் விக்கிரமாதித்தனிடம் சென்று, “பேரரசே! எனது கணவரின் அதிவீரச் செயல்களைப் பார்த்தீர்களா?” என்று பரவசத்துடன் கூறிக்கொண்டிருந்த வேளையில், அந்த வீரனின் குதிரை அவ்விடம் வந்து சேர்ந்தது. அக் குதிரையின் மீது ஒரு வீரனின் உடல் காயங்களுடன் கிடந்தது.

அங்கிருந்தவர்கள் குதிரையின் மீது கிடந்த அவ்வுடலைக் கீழே கிடத்தினர். இதனை அவதானித்த அப் பெண் வீரிட்டு அழுத வண்ணம் அந்த உடல் மீது புரண்டு அழுதாள். “என் பிராண நாதா! வீரச் சமர் புரிந்து அதற்கிடையில் வீர சுவர்க்கம் அடைந்து விட்டீர்களே...! தங்கள் பிரிவை என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? ஆகவே தங்களைத் தொடர்ந்து நானும் வருகிறேன். மாமன்னரே! தங்களுக்காகவே என் கணவர் மாண்டார். ஆகவே, என் கணவரின் உடலைத் தகனம் செய்வதற்கு உடனடியாகத் தீமூட்டித் தாருங்கள். எங்கள் வம்ச நியதியின்படி எங்களில் எவர் உயிர் துறந்தாலும் ஓரிரு நாழிகைக்குள் அவரின் உடல் தகனம் செய்யப்பட வேண்டும்” என்று கூறிக் கரம் குவித்தாள்.

அமைச்சர் பட்டி எதுவித உணர்ச்சியையும் காட்டிக்கொள்ளாமல் காவலர்களை ஏவித் தீ மூட்டும்படி பணித்தார். தீ மூட்டப்பட்டதும் வீரனின் உடல் சிதையில் வைக்கப்பட்டது. எவரும் எதிர்பாராத வேளையில் அவ் வீரனின் மனைவியும் தீயில் குதித்து உயிர் துறந்தாள்.

மன்னர் விக்கிரமாதித்தனுக்குத் துரித கதியில் இது வரை நடந்து முடிந்த சம்பவங்கள் அனைத்தும் கனவு போலிருந்தது. அமைச்சர் பட்டியோ எதுவித உணர்ச்சியையும் காட்டிக்கொள்ளாமல் கருமங்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



• நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை •
-காதில பூ கந்தசாமி-

சந்தனக் கடத்தல் வீரப்பன் இந்தியப் பொலிஸுக்குத் தண்ணி காட்டிக் கொண்டு வருகிறதாத்தான் எனக்கு நினைவு தெரிஞ்ச நாள் முதலாக் கேள்விப்பட்டுக் கொண்டு வாறன். கிட்டடியில கூட முன்னாள் அமைச்சர் நாகப்பனைக் கடத்தி ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டு இருக்கிற செய்திகள திறில்லோட வாசிச்சு இரசிச்சனான். அந்த எண்ணத்தோட, டீவியில எங்கட புலிகளோட நடத்தின சமாதானப் பேச்சுவார்த்தையின்ர பத்திரிகை மாநாட்டப் பாத்த உடன இதே மாதிரி ஒரு சமாதானப்பேச்சு வீரப்பனோட நடந்து, நானும் நீங்களும் பத்திரிகை மாநாட்டில கலந்து கொண்டால் எப்படியிருக்குமெண்ட கற்பனை ஒட்டமெற்றிற்கா ஒணாயிட்டுது. அப்படியே தாறன் உங்களுக்கு

மேடையில வீரப்பனின் பிரதிநிதி கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

**கே:** **வீரப்பன் சார், ஓங்க பேச்சுவார்த்தை எப்படி நடந்துச்சு?**

**வீ.ச:** பேச்சுவார்த்தையின்னா வாயால தான் நடக்கும். அதுக்கின்னா, நாலு கோழிக்கால வறுத்து கடிச்சு துப்பிக்கினு ஜாலியாப் பேசிக்கினு இருந்தோம்.

**கே:** **என்னத்தைப் பற்றிப் பேசினீங்க?**

**வீ.ச:** வேற என்ன, நம்ப காட்டையு, நான் கடத்துற சந்தனமரமோ யானைத்தந்தமோ, இடைக்கிடை இந்த ராஜ்குமார் நாகப்பன் போல ஆளுங்க இதுங்களப் பத்தித்தா.

**கே:** **பேச்சுவார்த்தை திருப்தியா நடந்துச்சா?**

**வி.பி:** ஆமா, திருப்தி திருப்தி. நல்லா முடிஞ்சிச்சு. இந்த மொற பேச வந்த ஆசாமிக நமக்குத் தோதா இருந்துச் சுண்ணதுலயும் நமக்கு திருப்தி.

**கே:** **என்ன தீர்வைக் கண்டிருக்கீங்க?**

**வீ.ச:** தீர்வ இன்னுங் காணல. தீர்வைக் காணமுன்னாடி ஒரு இடைக்காலத் தீர்வக்காணலாமுன்னு தீர்வு கண்டிருக்கோம்.

**கே:** **இடைக்காலமா என்ன தீர்வுக்கு உடன்பட்டிருக்கிறீங்க?**

**வீ.ச:** இடைக்காலத் தீர்வும் இன்னும் பேசல. அப்பிடி ஒண்ணப் பேசிக்கறதா இப்பத் தீர்வு கண்டிருக்கோம்.

**கே:** **அப்போ, இந்தப் பேச்சுக்களில நீங்க என்னத்தை சாதிச்சிருக்கிறீங்க?**

**வீ.ச:** அப்புடீன்னு சொல்லிக்கிறதா இருந்தா, நாம நம்ம காட்டை அபிவிருத்தி செஞ்சுக்க ஒரு கூட்டுக் குழு கட்டிக்கறதா பேசியிருக்கோ.

**கே:** **ஆமா, நீங்க ஓங்க காட்டில தனி ராஜ்யம் நடத்திற எண்ணத்தக் கைவிட்டிட்டீங்களா?**

**வீ.ச:** இது ஒங்கட தவறான எண்ணம். நாம தனி ராஜ்யம் நடத்திற எண்ணத்தில சண்டை புடிக்கல. நாம மர நிர்ணய உரிமையடிப்படையில நம்ம காட்டுக்கு ஒரு சுயாட்சி கோரித்தா சண்டை போட்டோம். மர நிர்ணயங்கறது இந்த சந்தன மரத்துக்கு நாம கோருற ஒரு ஒசத்தியான வெலய கொடுத்திடரதுதா இல்ல, அடிமாட்டு வெலயத்தா தருவே, மரந்தறிக்கறதுங், கடத்தறதும் பயங்கரவாதோ, அப்பிடீன்னுக்கினு நம்மளத் தடை செஞ்சு ஒடுக்கறாத்தா அரசாங்கோ தொடருமுன்ன, வேற வழியிலேங்கற கடைசி முடிவாத்தா நாம நம்ப காட்டை நாமளே ஆளுறதா பிரிச்சு எடுத்துக்கறதுக்கு சண்டை போடவும் நாம் தயாராத்தான் இருக்கோ.

**கே:** **அப்படியென்றால், வீரப்பன் தாகம் சந்தனத் தாயகம் என்ற உங்கட சுலோகத்தைக் கைவிட்டிட்டீங்களா?**

**வீ.ச:** எதையுமே நாம கைவிடேல்ல. பேச்சுவார்த்தையில தீர்வு கண்டப் புறந்தா அதுகளை யோசிப்போம்.

**கே:** **ஓங்க மர நிர்ணய உரமைப்படி மரத்துக்கு என்ன விலையிண்ணு நிர்ணயச்சிருக்கிறீங்க?**

**வீ.ச:** நாம ஒண்ணும் சொல்லறதாயில்ல. அப்புடி ஒரு வெலையச் சொ்லறதெங்கறது மரத்தைக் கைவிடத் தயாருன்னு சொல்லறதா அர்த்தமாயிடும். அரசாங்கந்தா என்ன வெலயெங்கறத முன் வைக்கணு. நாம அந்த வெல சரிப்பட்டு வந்தா ஏத்துக்கறது பத்தி யோசிப்போ.

**கே:** **அப்போ ஆயுதக் களைவு எப்போ துண்ணு முடிவு செஞ்சிட்டீங்களா?**

**வீ.ச:** அந்தப் பேச்சுக்கே இப்ப அவசியோ மில்லேங்கறேன். அது கடைசியாப் பேசற சமாச்சாரம். இப்ப அதப்பத்திப் பேசினா, அதுவே கடைசிப் பேச்சாப் போயிடும். புரிஞ்சுக்குங்க!

**கே:** **நீங்க ஓங்க காட்ட பிரிச்சு, எடுத்துக்கத்தா இடைக்கால நிர்வாகத்துக்கு ஒத்துவர்றிங்கண்ணு ஒருசில பத்திரிகைக எழுதுதே?**

**வீ.ச:** ஒண்ணப் புரிஞ்சுக்குங்க. காடு ஏற்கனவே நம்ப கொன்ரோலிலதா இருக்கு. அதுக்குவேற இடைக்கால நிர்வாகமொண்ணும் நமக்கு அவசியமில்லை. நமக்கு தேவைங்கறது சர்வதேச அங்கீகாரம். நாமளும் அரசாங்கமும் ஒண்ணா நிண்ணு இந்தக் காட்டை எப்படி அபிவிருத்தி செய்யலாமுண்ணுதா இடைக்கால நிர்வாகத்தைப் பத்தி பேசறோ.

**கே:** **அந்த நிர்வாகத்தில மத்தாக்களுக்கும் பங்கு கெடைக்குமா?**

**வீ.ச:** இடைக்கால நிர்வாகத்துக்கு காட்டுக்கு ஒரு தேர்தல் வந்துச்சுண்ணா காட்டு மிருகங்களுக்கு முன்னாடி வந்து பிரசாரஞ் செய்யற உரிமைய அவுங்களுக்கு வழங்கலாம்.

**கே:** **ஓங்க தலைவர் வீரப்பன் தற்கொலைத் தாக்குதல்களைக் கைவிட ஒத்துக்கிட்டாரா.**

**வீ.ச:** இது சம்பந்தமில்லாத கேள்வி.

**கே:** **தமிழ் நாட்டு அம்மையார் சமாதானத் தீர்வுக்குத் தடையா இல்லையா?**

**வீ.வ:** மக்கள் எல்லாம் இப்ப சந்தன மரத்த நேசிக்கறாங்க. அதனால அவவும் ஒரு சந்தனத் தீர்வ ஏத்துக்கத்தா வேணும்.

**கே:** **சந்தனத் தீர்வா?**

**வீ.ச:** ஸாரி, சமாதானத் தீர்வு, நம்ம கண்ணுக்கு சந்தனமும் சமாதானமும் ஒண்ணாத்தாம் படுதா, அதுதா மாறி சொல்லிப்புட்டே.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

29.09.2002 தொடங்கி 05.10.2002வரை

சோதிட மாமணி தில்லை

## கிரக நிலை

**கன்னி**–சூரியன், புதன், **துலாம்**– வெள்ளி, **விருட்சிகம்**–கேது, **இடபம்**–இராகு, **மிதுனம்** – சனி, **சிங்கம்** – செவ்வாய், **கர்க்கடகம்**–வியாழன்.

*சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.*

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்குறை நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அன்னியர் உதவியுடன் கருமங்கள் நிறைவேறும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவர். மாணவர்கள் கல்வியில் இருந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 1.

### இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் கஷ்டங்கள் தீரும். பணவரவு தாமதமாகும். வெளியிடப் பிரயாணங்களில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் எதையும் நிதானித்துச் செய்தல் நன்று. மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுத்தல் வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 3.

### மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) கருமங்களில் வெற்றியும், பொருள் வரவும் உண்டு. உறவினரால் வார இறுதியில் கஷ்டங்கள் வந்து சேரும். மாணவர்களுக்குக் கல்வியில் உற்சாகம் பிறக்கும். உத்தியோகத்தர்கள் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 7.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழிலில் பிரச்சனைகள் உருவாகும். பணவரவில் தாமதமுண்டு. கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச்சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 5.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) புதிய முயற்சிகள் நன்மை தரும். தொழில் கஷ்டங்கள் தீரும். பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த குறைகள் தீரும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 6.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் சிறிது கஷ்டங்கள் தோன்றும். பணவரவு வார இறுதியில் மந்தமடையும். உறவினர் பகை கொள்வர். உத்தியோகத்தர்கள் எதிலும் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் உயர்வடைவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 4.

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழிலில் கவனமுடன் செயற்படவும். பணவரவு திருப்தி தராது. உறவினரால் தொல்லைகள் உண்டாகும். உத்தியோகத்தர்கள் மறைமுக எதிர்ப்புக்களால் தொல்லையடைவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 2.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில், குடும்ப நிலையில் முன்னேற்றமுண்டு. எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 3.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) இன சன விரோதம், மறைமுக எதிர்ப்பு. கௌரவக் குறைவு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உத்தியோகத்தர்கள் பலவித கஷ்டங்களுக்கு ஆளாகுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 7.

### மகரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலிலும், குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தர்களில் சிலருக்குப் பதவி உயர்வுகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 3.

### கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி, எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் தொல்லைக்கு ஆளாகுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 5.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழிலிலும், குடும்பத்திலும் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். பணவரவு தடைப்படும். பெரியோர் உதவுவர். உத்தியோகத்தர்கள் மனக்கவலையடைவர். மாணவர்களுக்குக் கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாப மடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O, (QD/38/NEWS/2001)




# நம்பிக்கை தரும் இளம் இரத்தம்

திறமையான இளம் வீரர்களின் வரவால் உற்சாகமாக இருக்கிறது இந்திய கிரிக்கெட் அணி. துடுப்பாட்டம், பந்து வீச்சு எதுவாக இருந்தாலும் புதிதாக அணியில் இடம் பெறும் வீரர்கள் வெளுத்து வாங்குகிறார்கள். சச்சின், கங்குலி போன்ற நட்சத்திர வீரர்கள் பிசகினாலும் புதியவர்கள் அணியைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பிக்கை தரக்கூடிய விதத்தில் இளம் வீரர்களின் ஆட்டம் அமைந்திருக்கிறது.

ஐ.சி.சி. போட்டித் தொடரில் இந்தியா ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் முகமட் கைஃப் என்ற புதிய வீரர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இந்திய அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

துடுப்பாட்ட வரிசையில் இந்திய அணியில் உலகின் முன்னணி வீரர்கள் பலரும் இருக்கிறார்கள். பந்து வீச்சில், குறிப்பாக வேகப்பந்து வீச்சில் நீண்டகாலமாகவே இந்திய அணியில் ஒரு இடைவெளி இருந்துகொண்டே வருகிறது. கபில்தேவிற்குப் பின்னர் அணியில் நீண்டகாலம் உறுதியாக இடம்பெற்றிருந்த ஸ்ரீநாத், பிரசாத் போன்றவர்கள் சிறிது சிறிதாகப் பின்தள்ளப்படும் நிலையில் அஜித் அகார்கர், சஹீர்கான், நெஹ்ரா என்று மற்றொரு குழு வேகப்பந்து வீச்சாளர்களாக அணியில் இடம்பிடித்துள்ளது.

சஹீர்கானும், நெஹ்ராவும் இந்திய அணியின் தற்போதைய ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்கள். இந்த இளம் வீரர்கள் இருவரதும் பந்து வீசும் 'ஸ்டைல்' வேகம் என்பன இந்திய கிரிக்கெட் ஆர்வலர்களுக்கு மிகுந்த நம்பிக்கை தரக்கூடியதாக உள்ளது.




ஒரு நாள் போட்டிகளில் முதல் 15 ஓவர்களும் மிகவும் முக்கியமானவை. இந்த ஓவர்களில் எதிரணியினர் அதிக அளவு ஓட்டங்களைக் குவித்துவிடாமல் தடுத்துச் சிறப்பாகப் பந்து வீசும் திறனில் சஹீர்கான், நெஹ்ரா போன்ற வீரர்கள் நன்கு தேறியிருப்பதை ஐ.சி.சி. போட்டித் தொடரின் இங்கிலாந்து அணியுடனான போட்டியில் காணக் கூடியதாக இருந்தது.

அண்மைக் காலமாக இந்திய அணி பல வெற்றிகளைச் சுவீகரித்து வருகின்றது. இங்கிலாந்து அணியை பிரிட்டிஷ் மண்ணிலேயே மண்கௌவச் செய்துவிட்டு, இலங்கைக்கு வந்து விளையாடிய முதல் இரண்டு போட்டிகளிலும் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளது இந்திய அணி. இந்த வெற்றிகளில் அணியின் தலைவர் சௌரவ் கங்குலிக்குக் கணிசமான பங்குண்டு. கங்குலி துடுப்பாட்டத்தில் சர்வதேச அளவில் நட்சத்திர வீரராகப் பிரகாசிக்கிறார். அவரது தலைமைத்துவப் பொறுப்புணர்வும், வழிநடத்தலும் கூடப் பலராலும் பாராட்டப்படுகிறது.


- - - - - -







## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் சபரீஷ் 30.09.2002**

[illegible]

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் சிமோன் 25-05-2002**

ஜேர்மனியில் வசிக்கும் ஆனந்தன்-மார்டினா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிமோன் தனது முதலாவது பிறந்த நாளை 25.05.2002 இல் ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். சிமோன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, ஜேர்மனியைச் சேர்ந்த அம்மம்மா, மாமாமார்கள், இலங்கையில் வசிக்கும் சுதாகர் சித்தா, கவிதா சித்தி, மினோஸ் அண்ணா, ஜனகன் தம்பி மற்றும் இலங்கையிலும் இந்தியாவிலும் வசிக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மயூராபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு.போ. சுதாகர் (சித்தப்பா) வத்தளை.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் சு. ஜனகன் 27.09.2002**

வத்தளையில் வசிக்கும் சுதாகர் - கவிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜனகன் தனது முதலாவது பிறந்த நாளை 27.09.2002 இல் வத்தளையில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். ஜனகன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அண்ணன்மார்களான மினோஸ், சிமோன், நிரஞ்சன் மாமா, பாண்டி சித்தா, அம்மப்பா, அம்மம்மா, ஜேர்மனியில் வசிக்கும் ஆனந்தன் பெரியப்பா, மார்டினா பெரியம்மா, மற்றும் இலங்கையிலும், இந்தியாவிலும் வசிக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மயூராபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு.போ. ஆனந்தன் (பெரியப்பா), ஜேர்மனி.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



**எசேக்கியா தீத்தூஸ் 29.09.2002**

[illegible]



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஒக். 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.